விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 89 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 11, செவ்வாய்க்கிழமை 23.02.2016

## கிளிநொச்சியிலும் இன்று கவனவீர்ப்பு

கிளிநொச்சி. பெப். 23
வவுனியா மாணவியின் கொலையாளிகளை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகளால் இன்று அமைதி வழியிலான கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.
வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் பாலியல் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட பாடசாலைச் சிறுமிக்கு நீதிகோரியும், கொலையாளிகளை உடனடியாகக் கைது செய்யவேண் பக். 24

# வவுனியா மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி இன்று மாபெரும் கவனவீர்ப்பு

வவுனியா, பெப். 23
வவுனியாச் சிறுமியின் படுகொலைக்கு நீதி கோரி வவுனியாவைச் சேர்ந்த 30 துக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்று கூடி இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.
இன்று இடம்பெறும் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தின் முன்னால் காலை 9மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுப் பேரணியாக வவுனியா மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்து அங்கு மனு கையளிக்கப்படும்.
வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், மாதர் சங்கத்தினர், நகர வரியிறுப்பாளர் சங்கம், அரச சார்பற்ற நிறுவனங் பக். 23

# பலாலி விமானத்தளத்தின் விஸ்தரிப்பு நடந்தே தீரும்

## எதிர்ப்புக்கள் பற்றிக் கவலையில்லை என்கிறார்கள் பாதுகாப்புச் செயலரும், மீள்குடியேற்ற அமைச்சரும்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 23
பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைமைகளினால் எதிர்ப்பு வெளியிடப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும், பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.
பலாலி விமான நிலைய விஸ்தரிப்பா, மக்கள் மீள்குடியமர்வா என்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.
இதனடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், விமான நிலைய பக். 23

## நாளை எங்கள் பிள்ளைகளுக்கும் நடக்காதிருக்க ஒன்றிணையுங்கள்

### வவுனியா சிறுமிக்கு நீதி வேண்டி வீதியில் இறங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 23
நாளை எமது பிள்ளைகளுக்கும் நடக்காது, என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு? என்ற விழிப்புணர்வோடு ஒவ்வொருவரும் வீதியில் இறங்கிப் போராட வேண்டும் என்று வவுனியா பிரஜைகள் குழுவும், கையளிக்கப்பட்டு – கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட பக். 25

## கலப்புத் திருமணத்துக்கு முன் தமிழர் உரிமையைத் தாருங்கள்

### மைத்திரி முன்னிலையில் கூறினார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், பெப். 23
தமிழர்களுக்கான உரிமையை வழங்கியதன் பின்னர் கலப்புத் திருமணத்தை நடத்துங்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுத் தெரிவித்தார்.
கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் முதலமைச்சர் தெரிவிக்கையில்,
எங்களுடைய ஆளுநர் கூரே, கலப்புத் திருமணங்கள் அவசியம் என்று குறிப்பிட்டார். நான் பக். 23



தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூண்டு காலெண்டுதான் நிக்கினம் பாத்தியளே...

## ஜம்போறிக்குச் சாரணர் வந்த பஸ்ஸில் 'சிங்க லே' ஸ்ரிக்கர்




யாழ்ப்பாணம், பெப். 23
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற தேசிய ஜம்போறியின் நேற்றைய நிகழ்வில் குருளைச் சாரணர்களை ஏற்றி வந்த பஸ்ஸில் 'சிங்க லே' (சிங்கத்தின் இரத்தம்) ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருந்தது.
தேசிய ஜம்போறியின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொள்வதற்காக குருளைச் சாரணர்களை ஏற்றிக் கொண்டு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்துக்கு ஒரு பேருந்து வந்தது. அந்தப் பேருந்தின் பின் பக். 25

## கேரளக் கஞ்சா கடத்தல் வடமராட்சியில் முறியடிப்பு

### 60 கிலோ கிராம் கைப்பற்றப்பட்டது பதுங்கியிருந்து பிடித்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப்.23
இந்தியாவின் கேரளாவில் இருந்து பருத்தித்துறை கடல் பகுதியூடாகக் கொண்டுவரப்பட்ட 60 கிலோ கஞ்சாவை நேற்றுமுன்தினம் பொலிஸார் அதிரடியாகக் கைப்பற்றினர். இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து துல்லியமாகத் திட்டம் தீட்டிக் கடத்தல்காரர்களை வளைத்துப் பிடித்துள்ளனர் பொலிஸார்.
கஞ்சா 14 உரப்பைகளில் நீர் உட்புகாது பொதியாக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். கடத்தல்காரர்களில் ஒருவர் தப்பியோடியுள்ளார் என்றும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
(விரிவான தகவல் 7 ஆம் பக்கத்தில்)

# சாரணராக இருந்ததால் ஜனாதிபதியாகினேன்

## நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் ஒன்றுபட அழைக்கின்றார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், பெப். 23
சாரணர் இயக்கத்தில் நான் இருந்தமையினால் தான் என்னவோ, இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கின்றேன். எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரக்கூடியவர்களும் இதிலே இருக்கக் கூடும் என்று, யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

படங்கள் 17 ஆம் பக்கத்தில்

ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்ததும், குழுமியிருந்த சாரணர்கள் தங்களது தொப்பிகளைக் கழற்றி கையை ஆட்டியும் கரகோசம் எழுப்பியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.
சாரணியத்தில் மனிதாபிமானம் இருக்கின்றது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இலங்கையை முன் பக். 25

# இலங்கை களநிலைமை குறித்து ஐ.நாவில் விளக்குவார் ஹூசேன்



கொழும்பு, பெப். 23
இலங்கைப் பயணம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசேன், எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கருத்துத் தெரிவிக்கவுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 31 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 29 ஆம் திகதி ஜெனிவாவில் பக். 23

## தமிழ் அரசியல் கைதிகளின் உணவுத் தவிர்ப்பு ஆரம்பம்

கொழும்பு, பெப். 23
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் நேற்றிலிருந்து உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
எந்தவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாமல் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தம்மை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
அநுராதபுரம் சிறைச் சாலையில் பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த நேர அட்டவணை அடுத்த மாதம் நடைமுறை

## மீறும் பஸ் சாரதிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

வடக்கு மாகாண இலங்கைப் போக்குவரத்துத் துறையினருக்கும் தனியார் போக்குவரத்துத் துறையினருக்கும் இடையிலான இணைந்த நேர அட்டவணை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்படவுள்ளது. அதை மீறும் சாரதிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இவ்வாறு வடக்குமாகாணப் போக்குவரத்துத்துறை அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண இலங்கைப் போக்குவரத்து துறையினர் மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையிலான இணைந்த நேர அட்டவணையைத் தீர்மானிக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை, யாழ் குருநகரில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் நடைபெற்றது.

அதில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து மாகாணத்துக்குள் செல்கின்ற பஸ் சேவைகளின் நேர அட்டவணை பரிசீலிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.

அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவித்ததாவது-

ஏனைய மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு இடையிலான நேர அட்டவணை ஏற்கனவே பல கலந்துரையாடல்களின் மத்தியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.தற்போது 5 மாவட்டங்களுக்கும் இடையிலான பூர்த்தி செய்யப்பட்ட நேர அட்டவணை அமைச்சின் செயலாளர் ஊடாக 5 மாவட்ட அரச அதிபர்களின் கையொப்பங்களைப் பெறும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போரின் பின்னர் இயற்கையான இறப்பை விட, விபத்துக்களால் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையே அதிகம். இதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் துறையினருக்கும் இடையிலான போட்டித்தன்மையும் ஒழுங்காக இணைந்த நேர அட்டவணையைப் பின்பற்றாமையும், வீதி ஒழுங்குகளை பின்பற்றாமையும் சாரதிகளின் அசமந்தப் போக்குமே காரணம்.

தற்போது தயார் செய்யப்பட்டுள்ள நேர அட்டவணையானது இரு தரப்பினரது பங்குபற்றுதலோடும், வடமாகாணத்துக்கான ஒரு போக்குவரத்துக் கொள்கையுடனும் - தனியார் பஸ்களுக்கு 60 வீதமும், இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு 40 வீதமும் என்ற விகிதாசாரத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக இரு தரப்பினரதும் உரிமைகளும் உள்வாங்கப்பட்டது மட்டுமல்லாது, பொதுமக்களுக்கான ஒரு பாதுகாப்பான போக்குவரத்து சேவையும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப்படுகின்ற போது இரு தரப்பினரும் தங்களது இலாப நோக்கத்தை மட்டும் கருத்தில் எடுக்காது பொதுமக்களின் உயிர், பாதுகாப்பான சேவை என்பவற்றையும் கருத்தில் லெடுக்க வேண்டும்.

இறுதி செய்யப்பட்ட நேர அட்டவணையையும், ஒழுங்கு விதிகளையும் பின்பற்றாது செயற்படுகின்ற எந்தத் தரப்பினராக இருப்பினும், அவர்களுக்கு எதிராக சட்டம் தனது கடமையைசெய்யும் என்றுதெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின் போது 5 மாவட்டங்களின் பிரதம கணக்காளர்கள், தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள், இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது யாழ்.திருநெல்வேலியில் ஏற்பட்ட பஸ் விபத்தில் உயிர் இழந்த ஆரம்பப் பாடசாலை மாணவன் சுவஷ்திகனுக்கும், அகாலச் சாவடைந்த வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்க முகாமையாளர் பரம்சோதி கண்ணனுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

(ஐ-ரி5)

## விமானப்படைச் சிப்பாய் முகாமில் சடலமாக மீட்பு

### காதல் தோல்வியால் சுட்டுத் தற்கொலை

யாழ்ப்பாணம், பெப்.23

பலாலி விமானப்படை முகாமில் விமானப்படை சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிரைமாய்த்துள்ளார் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும், கும்புறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சதுரங்க என்ற விமானப் படைச் சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பலாலி விமானப் படை முகாமில் நேற்றுமுன்தினம் இரவு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த குறித்த சிப்பாய், கடமைக்காக வழங்கப்பட்ட ரி-56 ரகத் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இவரின் சடலத்தைக் கண்ட சக சிப்பாய்கள் அது தொடர்பில் உயர் மட்டத்தினருக்குத் தகவலை வழங்கிய நிலையில், இது தொடர்பில் தகவல் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு, சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிப்பாயின் கழுத்துப்பகுதியூடாக உள் நுழைந்த துப்பாக்கிச் சன்னம், தலைப்பகுதி ஊடாக வெளிவந்துள்ளது என்றும், காதல் தோல்வியே தற்கொலைக்குக் காரணம் என எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-ஐ-109)



12 வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் மாசி மகா மகம் சமுத்திர தீர்தோற்சவம் நேற்று அதிகாலை திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய அடிவாரத்தில் உள்ள சமுத்திரத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான ஆலயங்களின் சுவாமிகள் சகல அலங்காரங்களுடன் தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். (ந-ஐ)

## விஞ்ஞானப்பிரிவு பாடசாலைகள் தரப்படுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.23

விஞ்ஞான பிரிவின் தேசிய ரீதியான தரப்படுத்தலில் நெல்லியடி மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியன மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளன.

கடந்தாண்டு நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் தேசிய ரீதியான தரப்படுத்தலில் வடமாகாணத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய கல்லூரியும், சென்.ஜோன்ஸ் கல்லூரியும் 3ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளன.

இதில் முதலாம் இடத்தை கொழும்பு விசாகாபாலிகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை தேவிபாலிகா மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 6 ஆவது இடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 8 ஆவது இடத்தையும், யாழ். இந்துக்கல்லூரி 10 ஆவது இடத்தையும், வேம்படி மகளிர் கல்லூரி 16 ஆவது இடத்தையும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி 24 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

(ந-ஐ-422)

## மாதாந்த உதவி கொடுப்பனவு மீளாய்வு

வரணி,பெப்.23

வரணி-கரம்பைக் குறிச்சி பிரதேச பொது சன மாதாந்த உதவிப்பணம் மற்றும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவோர் தொடர்பில் மீளாய்வுகள் இன்று செவ்வாய்க்கிழமைகுறித்த கிராம அலுவலர் காரியாலயத்தில் இடம் பெறும் என தென்மராட்சிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இன்று குறித்த பயனாளிகள் பணம் பெறும் அத்தாட்சிப் பத்திரம், குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றை தம்முடன் எடுத்து வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-ஐ-122)

## செம்மணி வெளியில் கழிவு கொட்டாதீர்கள்

### மாநகர ஆணையாளர் அறிவிப்பு

நல்லூர்-செம்மணி வெளியில் கழிவுப் பொருள்களைக் கொட்ட வேண்டாம் என மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.

கழிவுப்பொருள்களை சிலர் வாகனம் மூலம் எடுத்து வந்து இந்தப் பகுதியில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இந்தக் கழிவுகள் வீதியோர நாலா பக்கமும் சிதறி விடப்படுவதால், சுகாதாரச்சீர்கேடு ஏற்படுவதோடு, போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பகுதியில் இவ்வாறு கொட்டப்பட்ட கழிவுகள் மாநகர கழிவகற்றும் பிரிவினரால் அகற்றி துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியை தூய்மையாக வைத்திருப்பதற்கும், கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுப்பதற்கும் நல்லூர்ப் பிரதேச சபையும் மாநகராட்சி மன்றமும் இணைந்து இதற்கான தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த வாரம் வாகனம் மூலம் கழிவுப் பொருள்களை இந்தப்பகுதியில் கொட்டுவதற்குச் சென்ற ஒருவரை மாநகர கழிவகற்றும் கண்காணிப்புப்பிரிவினர் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

பின்னர் இவர் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தக் கழிவுகளைக் கொட்டச் சென்ற நபர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ந-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரணகமவின் இறுதி அறிக்கை ஜூன் மாதத்தில் ஜனாதிபதிக்கு

கொழும்பு, பெப்.23

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கவுள்ளது.

இந்தத் தகவலை மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம நேற்று உதயனிடம் உறுதிப்படுத்தினார்.

எமக்கு வழங்கப்பட்டுள்ள பதவி நீடிப்பு போதுமானதாக இல்லை. மூன்றுமாத காலத்துக்குள் முக்கிய பல விடயங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளது. எனினும், ஜூன் மாத இறுதிக்குள் இறுதி அறிக்கையை கையளிக்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

பரணகம ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனினும், பணிகளை இறுதிப்படுத்துவதற்காக மூன்று மாத கால பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

போர்க் காலத்தில் வடக்கு-கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காகத் தமது ஆட்சியின்போது ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் மூவரடங்கிய குழுவொன்றை மகிந்த ராஜபக்ச அமைத்திருந்தார்.

இந்த விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப்பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், அனைத்துலக சட்டதிட்டம் தொடர்பில் பரணகம குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் அறுவரடங்கிய ஆலோசனைக் குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னரும் பரணகம குழுவுக்குப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கினார். அந்தவகையில் விசாரணைகளை முன்னெடுத்த பரணகம ஆணைக்குழு, போர்க்குற்றங்கள் தொடர்பிலான தனது இறுதி விசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது. அத்துடன், காணாமற்போனோர் தொடர்பில் இடைக்கால அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டது. எனினும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவேதான் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக தற்காலிகப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (த-சி)

# சு.கவை எவராலுமே பிளவுபடுத்த முடியாது

## அடித்துக் கூறுகிறார் எஸ்.பி.

கொழும்பு, பெப்.23

எத்தனை அழுத்தங்கள் கொடுத்தாலும் எவராலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த முடியாது என்று தெரிவித்த அக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சு.கவுடன் கூட்டணி அமைத்துக் களமிறங்குவதற்கு இதுவரை 17 கட்சிகள் முன்வந்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

ஹற்றன் லக்சபானா பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால், இந்தக் கட்சி பிளவடையக்கூடிய சாத்தியம் கிடையாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

எத்தனை அழுத்தங்கள் கொடுத்தாலும் எவராலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட மாற்று கட்சியினரே இந்தச் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சியிலிருந்து என்னை வெளியேற்ற சில விஷமிகள் சதி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். என்னை அவ்வளவு இலகுவில் வெளியேற்ற முடியாது. நான் ஒருபோதும் சு.கவிலிருந்து வெளியேறமாட்டேன் என்றார். (த-சி)

# ஊடகவியலாளர்கள் மீதான அராஜகம் கண்டிக்கத்தக்கது

## முன்னாள் ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, பெப்.23

நல்லாட்சி அரசு தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளும் அராஜகங்கள் கண்டிக்கப்படவேண்டியவை எனவும், அந்த ஊடகங்கள் தொடர்ந்தும் மௌனம் சாதித்துவருவது மிகவும் வேதனைக்குரியது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேல்மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய இலங்கை சமுர்த்தி அபிவிருத்திச் சங்கத்தின் பிரதம செயலாளருமான ஏ.டி.ஜகத்குமாரவின் பத்தரமுல்ல, தெனியவந்த வீதியிலுள்ள இல்லத்தில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் இனந்தெரியாத சிலரால் சேதமாக்கப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து அந்த சேதத்தைப் பார்வையிடச் சென்ற மகிந்த ராஜபக்ச அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளர்களின் மத்தியில் பேசும்போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இன்று நாட்டு மக்களின் நலனுக்காகக் குரல் கொடுக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் மிரட்டப்படுகின்றார்கள். ஊடகங்களுக்கும் இன்று அதே நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய அடக்குமுறைகளைச் சகித்துக்கொண்டு ஊடகங்கள் மௌனம் சாதிப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம் எனவும் மகிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டினார். (த-சி)

# 4 ஆம் கட்டப் பேச்சை விரைவில் ஆரம்பியுங்கள்

## இந்திய மீனவர்கள் கோரிக்கை

சென்னை, பெப்.23

இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் இரு அரசாங்கங்களுக்கும் இடையிலான நான்காவது கட்டப் பேச்சைக் காலதாமதமின்றி ஆரம்பிக்கப்படவேண்டும் என தமிழகத் தேசிய மீனவர்கள் மன்றம் தெரிவித்துள்ளது.

இதனை மன்றத்தின் தலைவர் எம்.இளங்கோ குறிப்பிட்டதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்குள் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசின் செயற்பாடுகள் குறித்து தேசிய மீனவர்கள் மன்றம் எதிர்ப்பு வெளியிட்டது.

தமிழக மீனவர்களின் 81 படகுகள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது, எனச் சுட்டிக்காட்டிய எம்.இளங்கோ, கைதான மீனவர்கள் விடுவிக்கப்படுகின்ற போதும் அவர்களது படகுகள் விடுவிக்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டார். (த)

### விபத்தில் காயமுற்றவர் சாவு

கரணவாய், பெப்.23

ஏ-9 வீதியில் மாங்குளம் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றி மூன்று நாள்களின் பின்னர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

கடந்த வியாழக்கிழமை மாங்குளம்பகுதியில் இடம்பெற்றவிபத்தில் இமையாணன் கிழக்கைச் சேர்ந்த தெய்வேந்திரன் பகீசன் (வயது-27) என்பவரே படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார். (த-108)

### மெய்வன்மை போட்டி இன்று

அச்சுவேலி,பெப்.23

சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்வார். (த-11)

# மாலைதீவு ஜனாதிபதி கொலை முயற்சி; இலங்கையர் உட்பட மூவர் விடுவிப்பு

கொழும்பு, பெப் .23

மாலைதீவு ஜனாதிபதியைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட இலங்கையர் ஒருவர் உட்பட மூவரை அந்நாட்டுப் பொலிஸார், நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமையன்று விடுதலை செய்துள்ளனர் என்று மாலைதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிவைத்துச் சுடுவதற்காக இலங்கையர் ஒருவரை மாலைதீவுக்கு அழைத்துச் சென்ற சிலரே, அவர் மூலமாக மாலைதீவு ஜனாதிபதியைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேற்படி மூவரும், போதிய சாட்சியங்கள் இல்லாததால் குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாலைதீவில் ஆகக் கூடுதலான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தினத்துக்கு அடுத்த நாளன்று, மேற்படி இலங்கையரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

**வேலையாள்கள் தேவை**

வட்டுக்கோட்டை மாவடியில் இயங்கும் வர்த்தக நிலையத்துக்கு பில் கிளார்க் (கணினி அறிவுள்ள)
தையல் தெரிந்தவர்
விற்பனையாளர் ஆகியோர் தேவை (பெண்கள்)
0766030601
(அண்மையில் உள்ளவர்கள் மட்டும்) (69528) (10.17)

**கணக்கு பதிவாளர் தேவை**

கல்வித் தகைமை A/L கணக்கியல்
தொடர்பு:
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55.57, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம். (C/29505) (10.17)

**தவறிவிட்டது**

மாரியம்மன் லேன் திருநெல்வேலியைச் சேர்ந்த கந்தையா புவீந்திரன் ஆகிய எனது அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், இறைவரி பத்திரம் அடங்கிய Purse
தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (69525) (10.20)
தொடர்பு: 0775792723, 077 5833109

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1239
சீட்டிழுப்பு திகதி 2016.02.22
வெற்றி இலக்கங்கள்
02 04 16 25 Q
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,464,980/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2742 திகதி 22.02.2016
07 09 36 42 0 70
ரூ. 13,080,600/-

**தொழிற் பயிற்சிகள்**
★ Mobile Phone Repairing
★ Air Conditioning
★ Electronics சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம்
29.02.2016 கிழமை நாள்கள் 9am
27.02.2016 சனி, ஞாயிறு 4.30 pm
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்
விவரங்களிற்கு.
Jaffna Technical Institute (69447) (12,19,20)
23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 077 824 9949
கிளை: New Asian Center 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 077 651 0134

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 465
சீட்டிழுப்பு திகதி 2016.02.22
வெற்றி இலக்கங்கள்
56 59 61 62 C
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 44,154,340/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக அரசியல் கட்சிகளை பதிவு செய்ய முடியாத நிலை

## நீதிமன்றில் உள்ள வழக்கொன்று காரணமாக

கொழும்பு, பெப்.23

தற்போது வேட்புமனுக்கள் கோரப்பட்டுத் தேர்தல்கள் நடத்தப்படாதிருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய இரு பிரதேச சபைகளின் வாக்களிப்புச் செயற்பாடுகள் முடிவுறும் வரை, புதிதாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்து கொள்ள இயலாது எனத் தேர்தல்கள் செயலகத்தின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி இரண்டு பிரதேச சபைகளின் வேட்பு மனுக்கள் சம்பந்தமாக நீதிமன்ற வழக்கொன்று இடம்பெற்று வருவதால் தற்போது நான்கு வருட காலமாகவே புதிதாக அரசியல் கட்சிகளின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

புதிதாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமிருந்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தாலும் கூட அது தொடர்பாக சட்டம் தடையாக இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தற்போது கோரப்பட்டுள்ள வேட்புமனுக்கள் அனைத்தும் நீக்கப்பட்டு மீண்டும் வேட்புமனுக்கள் கோரப்படக் கூடிய வகையில் நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றிக் கொள்ளப்படும் பட்சத்தில், புதிதாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்து கொள்ளும் வாய்ப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்குமெனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-22)

# 800 சிறை ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு திட்டம்

கொழும்பு, பெப் 23

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவும் ஊழியர் பற்றாக் குறையை நீக்க இந்த ஆண்டில் 800 ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆள் சேர்ப்புக்கு அனுமதி கிடைத்திருப்பதோடு அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் திறைசேரியிடம் கோரப்பட்டிருப்பதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமான நிசான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றபின்னர் ஆள்களைச்சேர்த்துக் கொள்ளவும் விதிமுறை அறிவிக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

684 சிறைச்சாலைக் காவலர்கள் மற்றும் 116 ஜெயிலர்கள் இந்த ஆள் சேர்ப்பில் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 1,200 இக்கும் மேற்பட்ட ஊழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 32 சிறைச்சாலைகளில் அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(த-22)

# மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் மலை போலக் குவிந்துள்ள கடிதங்கள்

கொழும்பு, பெப் 23

கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் விநியோகிக்க இயலாமல் மலை போல் குவிந்துள்ள பதிவுத் தபால்களிடையே வர்த்தகத் தபால்களுடன் சம்பந்தப்பட்ட ஒரு லட்சம் வரையான அறவீட்டுச் சிட்டைகளும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. அத்தோடு இந்தத் தபால் பரிமாற்றுப் பிரிவுக்குத் தினமும் வந்தடையும் வர்த்தகக் கடிதங்களின் தொகை ஒரு லட்சத்தையும் கடந்துவிடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பளக் காசோலைகள், லீசிங் தவணைகள், முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்தல் வேலைகளுக்கான நேர்முகத் தேர்வுகள், நியமனங்கள், பல்கலைக்கழகங்கள் தொடர்பாக பதிவு செய்து கொள்ளல், தேசிய அடையாள அட்டைகள் மற்றும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்கள் உள்ளிட்ட அவசரமானதும் அத்தியாவசியமானதுமான கடிதங்கள் ஆயிரக்கணக்கில் குவிந்திருப்பதாகத் தபால் தொழிற்சங்கங்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் தரத் தபால் சேவை அதிகாரிகள் 4,00 பேர்களினதும் கடமைகளை 2,000 ஊழியர்களைக் கொண்டு நிறைவு செய்வதற்கு முற்பட்டுள்ளதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தபால் சேவைகள் அமைச்சர் எம். எச். அப்துல் ஹலீம் தெரிவிக்கையில்,

இத்தினங்களில் ஒரே தடவையில் பெருந்தொகையிலான பதிவுத் தபால்கள் வந்தடைவதும், ஊழியர் பற்றாக் குறையுமே இவ்விதம் தபால் கள் குவிந்து விடுவதற்குக் காரணமாகியிருப்பதாகக் கூறினார்.

(த-22)

# முகத்தை மூடும் ஹெல்மட்; இடைக்காலத் தடை நீடிப்பு

கொழும்பு, பெப் 23

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக் கவசத்தை மோட்டார் சைக்கிளோட்டிகள் பயன்படுத்துவதற்குத் தடை விதித்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டிருந்த தீர்மானத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிவரை நீடிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் வகையில் தலைக் கவசங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க பொலிஸார் எடுத்த தீர்மானத்துக்கு எதிராகக் கொழும்பு நகர முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரியான எட்வட் அஹங்கம, பட்டயக் கணக்காளரான சானக்க தஸநாயக்க, ஓய்வுபெற்ற மேஜரான மனோஜ் நாலக்க ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களின் பிரதிவாதிகளாகப் பொதுமக்கள் சட்டம் ஒழுங்குகள் அமைச்சர், போக்குவரத்து அமைச்சர், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக டி சில்வா தெரிவித்திருக்கையில்,

இந்த முழுமையாக முகத்தை மறைக்கும் தலைக்கவசத் தடையுடன் சம்பந்தப்பட்டுள்ள வழக்கைச் சமரசமாக முடித்துக் கொள்வதற்கு பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகள் ஆயத்தமாக இருப்பதாகக் கூறினார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 02ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ்மா அதிபரினால் விதிக்கப்பட்டிருந்த இந்த தடை நியாயமற்றது எனவும், அதன் மூலம் மோட்டார்சைக்கிளோட்டிகள் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள இயலாத நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் மனுதாரர்களான சானக்க தஸநாயக்க மற்றும் மனோஜ் நாலக்க ஆகிய பிரமுகர்கள் தமது மனுக்களில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அதேபோன்று, இடம்பெறும் திடீர் விபத்துக்களில் பெருமளவிலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிளோட்டிகளுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளதாகவும், முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அந்த விபத்துக்களைத் தவிர்த்துக் கொண்டிருக்கலாமெனவும், தனது நீண்டகால மரண விசாரணைச் சேவையை அனுபவப்பாடங்களாக எட்வட் அஹங்கம தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த-22)

# ஜனவரி மாதத்தில் மாத்திரம் 26 பேருக்கு எச்.ஐ.வி தொற்று

கொழும்பு, பெப் 23

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மாத்திரம் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ள 26 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களுள் அதிகளவிலானோர் இளைஞர்கள் எனச் சுகாதார அமைச்சின் எச்.ஐ.வி.எய்ட்ஸ் ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளரான மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

ஆண் ஓரினச்சேர்க்கையாளர் களிடையே எச்.ஐ.வி தொற்று ஏற்படுவது வேகமாக உச்சமடைந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் கண்டறியப்படுவதோடு இந்த ஆண்டில் குருநாகல் மாவட்டத்திலும் நோயாளர்கள் கண்டறியப்படுவது உயர்வடைந்திருப்பதாகவும் மருத்துவர் லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த எச்.ஐ.வி.எய்ட்ஸ் சம்பந்தமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவது தொடர்பான விரிவான வேலைத்திட்டமொன்றை இந்த ஆண்டினுள் செயற்படுத்தவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(த-22)

# சரஸ்வதி சிலை திறப்புவிழா இன்று

அச்சுவேலி,பெப்.23

சிறுப்பிட்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள சரஸ்வதி சிலை திறப்புவிழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் எஸ். பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த அமரர் இளையதம்பி பாலசுப்பிரமணியத்தின் நினைவாகப் பாடசாலை முன்றிலில் அவரின் குடும்பத்தினர் சரஸ்வதி சிலையை நிறுவியுள்ளனர். சரஸ்வதி சிலையைத் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிற்பி புருசோத்தமன் உருவாக்கியுள்ளார். தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிருமுருகன் சிலையைத் திறந்து வைக்கவுள்ளார்.

(த-1)

தேவை
சில்லறைக் கடைக்கு ஆள் தேவை. மாதாந்தம் 25,000 சம்பளம், தங்குமிட வசதி, சாப்பாடு எல்லாம் தரப்படும்.
077 700 8187, 011 313 7535

வாகனம் வாடகைக்குத் தேவை
ELF 350 கன்ரர் வாகனம் மாத வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 139 6631

மணமகள்மார் தேவை
1985,1975 ஆஸ்திரேலிய மணமகன்களுக்கும் 1979 லண்டனில் உள்ள மணமகனுக்கும் மணமகள்கள் தேவை.
075 636 7361, 077 045 9625

வீடு வாடகைக்கு உண்டு
யாழ் நகருக்கு அருகில் பலாலி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
(69447) (12,19,20)
077 400 3672/ 077 922 8009

விநியோகஸ்தர் தேவை
யாழ்.மாவட்டத்தில் பணிபுரிவதற்கு ஆண்/ பெண் விநியோகஸ்தர்கள் தேவை.
(69515) (11,19,20) தொடர்பு: 077 197 4875

வாகனம் வாடகைக்கு
TATA Supper ace (Original full Aluminiya body)மாத வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு-
(69493) (11,19,20) 077 746 6678

வீடு வாடகைக்கு
05 ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணத்தில் (யாழ்.மாநகரசபை எல்லைக்குள்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
077 695 3215, 077 362 1136

RESIDENT MEDICAL OFFICER
FOR
A HOSPITAL IN JAFFNA

The Fastest Growing Hospital in Northern Sri Lanka currently operating with 50 beds, is looking for a high caliber versatile and dynamic individual possessing excellent leadership and management skills with a sound academic background to function as the Resident Medical Officer of the Hospital.

The applicant should have good communication skills in both English and Tamil. Preference will be given to a candidate who has experience in hospital administration.

The selected candidate will receive an attractive remuneration package with other benefits.

Please apply with full bio data (together with contact telephone number and recent passport size photo) and also with contact details of two non related referees within five days of this advertisement via email to [illegible]. Please state the post applied for on the subject line of the email.

N & N Agents and Secretaries (Private) Limited
M & N Building (Level 5), No.2, Deal Place, Colombo 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்கு வரியை அதிகரிக்குக

## குடாநாட்டு விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.23

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கான வரி அதிகரிக்கப்படாதுள்ளதால் குடாநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கான வரி அதிகரிக்கப்பட வேண்டும்.- இவ்வாறு குடாநாட்டு விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உருளைக்கிழங்கின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இதுவரைக்கும் 40 வீதமான அறுவடை இடம்பெற்றுள்ளது என்று மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் தி.சதீஸ்குமார் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் வரியை அதிகரித்து எமது உள்ளூர் உருளைக் கிழங்கு விற்பனை பாதிக்கப்படாமல் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு தருமாறு கோரிக்கை விடுத்திருந்தோம். இதுவரைக்கும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது உருளைக்கிழங்கின் அறுவடை ஆரம்பித்துள்ளதால் அவற்றைச் சந்தைப்படுத்தவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

> இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் வரியை அதிகரித்து எமது உள்ளூர் உருளைக் கிழங்கு விற்பனை பாதிக்கப்படாமல் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு தருமாறு கோரிக்கை விடுத்திருந்தோம். இதுவரைக்கும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஏற்கனவே தெற்கிலிருந்து கூடுதலான உருளைக்கிழங்கு இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. - என்று அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அந்த உருளைக்கிழங்கு சந்தைகளில் கிலோ 50 ரூபாவுக்கு மேற்படாமல் விற்கப்படுகின்றது. இந்த நிலையில் எமது உள்ளூர் உருளைக்கிழங்குகளை எவ்வாறு சந்தைப்படுத்த முடியும். கூடுதலான விவசாயிகள் தாம் அறுவடை செய்த கிழங்கை தம்புள்ள சந்தைக்குக் கொண்டு சென்று சந்தைப்படுத்துகின்றனர்.

அங்கேயும் அதன் விலை சரிந்து காணப்படுகின்றது. இதன் காரணத்தால் எமது உருளைக் கிழங்குச் செய்கையில் பெரிய நட்டம் இந்தமுறை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டு உருளைக்கிழங்கு செய்கையை ஊக்குவிக்கவும், அதற்கு நல்ல சந்தைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அடுத்த போகத்துக்கு விவசாயிகள் இந்தச் செய்கையில் அதிக நாட்டம் காட்டுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டி ஏற்படும்.- என்றார்.

(ந-ஜ-17)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் சங்க அங்கத்தவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மைதா னத்தில் நடத்தப்பட்டன. அதில் தேங்காய் துருவுதல், பூமாலை கட்டுதல், கிடுகு பின்னுதல், கயிறிழுத்தல், பந்துப் பரிமாற்றம், சங்கீதக் கதிரை உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் இரு பிரிவுகளாக நடத்தப்பட்டன. (ந-ஜ-9)

# விச ஜந்துக் கடியால் மூர்ச்சையான குடும்பஸ்தர்

சாவகச்சேரி,பெப்.23

நெல் அறுவடை செய்து விட்டு வீடு திரும்பிய வேளை குடும்பஸ்தரொருவர் இனந் தெரியாத விச ஜந்து கடித்து மூர்ச்சையுற்றுள்ளார். அதையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வரணி குடமியனில் இடம் பெற்றது.

குறித்த நபர் வயல் வேலை முடிந்து வரம்பினூடாக நடந்து வரும் வேளையில், காலில் ஏதோ கடித்தது என்றும், வீட்டுக்கு வந்த பின்னர் அவர் மயக்கமடைந்ததால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளையுடன் தொடர்புடைய இருவர் வெள்ளவத்தையில் கைது

கொழும்பு, பெப். 23
வாகனங்களில் இருந்து கண்ணாடிகளைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தைப் பகுதியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வெள்ளவத்தைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போதே, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.
சந்தேக நபர்கள் கொள்ளுப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 39 வயதானவர்கள் எனவும், முச்சக்கர வண்டியில் நாரஹேன்பிட்டி மற்றும் கொகுவல ஆகிய பகுதிகளுக்குச் சென்று வாகனக்கண்ணாடிகளைக்கொள்ளையிட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## நியூசிலாந்து பிரதமர் இன்று வருகின்றார்



கொழும்பு, பெப். 23
நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ இருநாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகிறார்.
இலங்கை மற்றும் நியூசிலாந்துக்கிடையில் வளர்ந்து வரும் வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அவரது இந்தப் பயணம் அமைந்துள்ளது.
இலங்கைக்கு வரும் ஜோன் கீ, ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன் உள்ளூரிலுள்ள வர்த்தகர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.
இதன்படி இன்று இரவு நாட்டுக்கு வரும் அவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.
கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ இலங்கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மத்திய மாகாண முதலமைச்சரிடம் மோசடி தடுப்புப் பிரிவு விசாரணை

கொழும்பு, பெப் .23
மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவிடம், நிதி மோசடி தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில், வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்து கொள்வதற்காகவே இவர் அழைக்கப்பட்டிருந்தார்.
நேற்றுத் திங்கட்கிழமை காலை 9மணியளவில்ஆரம்பிக்கப்பட்ட விசாரணை, நண்பகல் வரை நடைபெற்றதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் 200 மில்லியன் ரூபா நிதி மோசடி இடம்பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியபோதும், அதன் உண்மையான பெறுமதியை அறிந்து கொள்ளும் நோக்கில் பலரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர குறிப்பிட்டுள்ளார். (த)

## ஆற்றில் மூழ்கிச் சிறுவன் சாவு

மட்டக்களப்பு, பெப். 23
கிண்ணியா–அண்ணல் நகர் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனொருவன் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
முஹம்மது பர்ஷாத் (வயது–14) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.
இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,
சிறுவன், மீன் வாங்குவதற்குத் தாயிடம் பணம் பெற்றுக் கொண்டு தனது நண்பனுடன் கிண்ணியா–கட்டையாற்றுப் பாலத்தடிக்குச் சென்றுள்ளான். மீன் வாங்குவதை விடுத்து, கட்டையாற்றில் இருவரும் குளித்துள்ளனர்.
அந்த நேரத்தில் பலமான நீரோட்டம் இருந்ததால் குறித்த சிறுவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளான்.
பிரதேச வாசிகள் உடனடியாகத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு, சிறுவனை வெளியில் எடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்கவில்லை. சடலம், தற்போது கிண்ணியா தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம்குறித்துபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## கொலை சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

கொழும்பு, பெப். 23
கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களை, கடந்த ஞாயிற்றுக் கிழமை கிராண்ட்பாஸ், சென். ஜோசப் வீதியில் வைத்துகைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மிரிகான பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக்கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.
மேலும் அவர்களிடமிருந்து வெளிநாட்டுத் துப்பாக்கிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (த)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 27.01.2016 புதன்கிழமை இப்புவி துறந்து அரனடி அடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர்
**மங்கையற்கரசி தர்மலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.02.2016 (வியாழக்கிழமை) காலை 6மணியளவில் அன்னாரது நவிண்டில் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் (27.02.2016) சனிக்கிழமை மதியம் 12 மணியளவில்


நெல்லியடி நெல்லைமுருகன் மண்டபத்தில் இடம்பெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமகள் சோதி வீதி,
நவிண்டில், கரவெட்டி.
021 226 4160

(c 29200)
(14,19,20)

குடும்பத்தினர் சார்பாக
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் (மருமகன்)
பிரதிமாகாண சுகாதார சேவைகள்,
பணிப்பாளர், வடமாகாணம்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
26 . 12 . 1954

மறைவு
23 . 11 . 2015

அமரர் **அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன்**


"சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே
இறப்பிலும் என்னை மறவாதீர்கள்"

முதலாம் ஒழுங்கை,
ஆனைப்பந்தி.

(69447)
(12,19,20)

மனைவி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
16 . 10 . 1950

உதிர்வு
24 . 01 . 2016

அமரர் **எஸ்தாக்கி அலன்டே (பயஸ்)**

அவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (24.02.2016) புதன்கிழமை காலை 6 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

486/1, கடற்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(69512)(11,19,20)
குடும்பத்தினர்.

## கலையாத நினைவில் மூன்றாம் ஆண்டு



மலர்வு
26 . 05 . 1948

உதிர்வு
26 . 02 . 2013

அமரர் **ஐயம்பிள்ளை தங்கராசா**

(முன்னாள் உரிமையாளர் வீ. எம் எஸ். நகை மாளிகை வவுனியா)
திதி : பிரதமை (23.02.2016)

விரக்தியற்ற எம் வாழ்வை
தொலைத்து விட்டோம் உம் இழப்பால்
புன்சிரித்த உம் முகமும்
கபட மற்ற உம் பேச்சும்
கண் முன்னே நிழலாட
காலத்தால் அழியாத காவியம் ஆனீரோ
மூன்றாண்டுகள் கடந்தாலும்
முடியவில்லை உமை மறக்க....
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

63A. முதலாம்குறுக்கு தெரு,
வவுனியா.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளக் கஞ்சா கடத்தல் வடமராட்சியில் முறியடிப்பு

## 60 கிலோ கைப்பற்றப்பட்டது பதுங்கியிருந்து பிடித்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப். 23
இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு பருத்தித்துறை கடல் பகுதியூடாகக் கடத்தப்படவிருந்த 60 கிலோ கஞ்சா நேற்று முன்தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்டார் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை யாழ். நகரில் 26 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டிருந்தது. இந்த நிலையில் நான்கு நாள்களுக்குள் மிகப் பெரியளவிலான கஞ்சாப் பொதி பருத்தித்துறையில் கைப்பற்றப்பட்டுள்ளது. 86 கிலோ கிராம் கஞ்சா கடந்த நான்கு தினங்களுக்குள் யாழ். குடாநாட்டில் மீட்கப் பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



### இரகசிய தகவல்

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீடினுக்கும் இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஞ்சுளவுக்கும், வடமராட்சியில் இடம்பெறும் கஞ்சாக் கடத்தல் தொடர்பில் இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து உசாரடைந்த பொலிஸ் அதிகாரிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பருடன் ஆலோசனை நடத்தினர். அவரது ஆலோசனைக்கு அமைய இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் இந்தக் கஞ்சா வேட்டையில் களமிறக்கப்பட்டன.

### பதுங்கிய பொலிஸ்

இரண்டு விசேட பொலிஸ் குழுக்களும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 9.30 மணிக்கு பொலிகண்டி கடற்கரையோரத்தில் பதுங்கியிருந்தன. அப்போது கடற்கரைப் பகுதியில் 14 உரப் பைகளில் கஞ்சா கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டுள்ளது. இறக்கப்பட்ட பொதிகள் விநியோகத்துக்கு தயாரான நிலையில் பதுங்கியிருந்த பொலிஸார் அந்த இடத்தைச் சுற்றி வளைத்துள்ளனர்.

### தப்பும் முயற்சி

பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பால் கடத்தல்காரர்கள் மிரண்டு போயினர். கஞ்சாவை உடனடியாக அந்தப் பகுதியிலிருந்து அகற்றுவதற்கு அவர்கள் முயற்சி செய் துள்ளனர். வாகனம் ஒன்றில் அதனை ஏற்றி அங்கிருந்து அவற்றை அகற்றுவதே அவர்களது நோக்கமாக இருந்துள்ளது. ஆனாலும் நன்கு திட்டமிட்டுக் களமிறங்கியிருந்த பொலிஸாரை மீறி அவர்களால் அவற்றை அங்கிருந்து அகற்ற முடியாது போய் விட்டது.

### ஓடிய கடத்தல்காரர்

இந்த சுற்றிவளைப்பில் கஞ்சாக் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார். கைதானவர் இன் பருட்டியைச் சேர்ந்த 27 வயதான இளைஞராவார். அதே வேளை இந்தக் கடத்தல் முயற்சியுடன்தொடர்புடைய மற்றொருவர் தப்பியோடியுள்ளார். அவரைக் கைது செய்வதற்காகபொலிஸார் தேடு தல் வேட்டையை முடுக்கி விட்டுள்ளனர். கொழும்புக்கு இந்தக் கஞ்சாவைக் கடத்திச் செல்வதற்காக கொண்டு வரப்பட்டது என்று கருதப்படும் வாகனம் ஒன்றையும்பொலிஸார்தேடிவருகின்றனர்.

> கடந்த வெள்ளிக் கிழமை யாழ்.நகரில் 26 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டிருந்தது. இந்த நிலையில் நான்கு நாள்களுக்குள் மிகப் பெரியளவிலான கஞ்சாப் பொதி பருத்தித் துறையில் கைப்பற்றப் பட்டுள்ளது. 86 கிலோ கிராம் கஞ்சா கடந்த நான்கு தினங்களுக்குள் யாழ். குடா நாட்டில் மீட்கப்பட்டுள்ளது.

### இந்தியாவிலிருந்தே கடத்தல்

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்தியாவின் கேரளாவிலிருந்து கஞ்சா கொண்டு வரப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது என்கின்றனர் பொலிஸார். தென்னிலங்கைக்கு இதனைக் கடத்துவதே அவர்களின் திட்டமாக இருந்துள்ளது. இந்தக் கஞ்சாப் பொதிகள், நீர் உட்புக முடியாதவாறு மிக இறுக்கமாக - கவனமாகப் பொதியிடப்பட்டிருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

### 4 நாளில் 86 கிலோ

யாழ்.நகரில் கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை 26 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப் பட்டிருந்தது. இளைஞ்கனால் அவை விநியோகத்துக்கு கொண்டு செல்லப்பட்டபோதேபொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் இடம் பெற்று நான்கு தினங்களுக்குள்60 கிலோ கஞ்சா பிடிக்கப்பட் டுள்ளமை மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ற-5-109)

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி அரசியல் கைதிகளை விடுவிக்கவும்

## தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.23
இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் சரத்துக்களைப் பயன்படுத்தி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும். - இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

சில தமிழ் அரசியல்வாதிகள் வழங்கிய உறுதிமொழிகளுக்கமைய, தமக்கு விடுதலை கிடைக்குமென நம்பி முன்பு இரு தடவைகள் தங்கள் உணவு தவிர்ப்பைக் கைவிட்ட தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பிக்கும் உத்தேசத்தை வெளியிட்டுள்ளனர்.

தமக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் தமது உடல்களை யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மருத்துவ பீடங்களில் கையளிக்குமாறும், தமது அங்க அவயங்களில் பொருந்தக் கூடியவர்களுக்கு பொருத்துமாறும் தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது நிலமை மிக வேகமாக மோசமடைந்து வருகிறது. அதிகாரம் படைத்த சிலர், குறிப்பிட்ட சிலரின் கைதுகளை அனுமதிக்கமாட்டோம் என்று கூறியுள்ளனர். அதுதான் நிலமையானால் தாங்கள் தங்களுக்குரிய அதிகாரங்களை பாவித்து அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

சமாதானத்தையும் - சகவாழ்வையும் தோற்றுவிப்பதற்காக 1987 ஆம் ஆண்டுசெய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின், 2-11 சரத்தின்படி, தற்போதுள்ள பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகள், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள், வழக்குத் தொடரப்பட்ட அல்லது குற்றவாளியாகக் காணப்பட்ட அரசியல் மற்றும் வேறு கைதிகளை ஜனாதிபதி பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யலாம் எனக்கூறுகிறது.

போர் முடிந்து சமாதானம் கொண்டு வரப்பட்டதன் பின்பு மேலே கூறப்பட்டுள்ள அதிகாரத்தை உபயோகித்து தடுத்து வைக்கப்பட்டும், குற்றஞ் சாட்டப்பட்டும், வழக்குத் தொடரப் பட்டும், குற்றவாளியாகக் காணப் பட்டும் உள்ள அனைத்து கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட் சத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலமை மேலும் மோசமடையும்.

ஏனெனில் சிறுபான்மையினர் மத்தியில் பல்வேறு விடயங்களில் பெரும் [illegible] கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது. (ற-ஜ-5)

# 757 இலக்க பஸ் சேவையை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப். 23
சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ள 757 இலக்கபஸ்சேவையைமீளவும் சேவையில் ஈடு படுத்துமாறு பொதுமக்கள்பருத்தித்துறை சாலை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கலந்துரையாடலின் போது பொது மக்கள் இந் தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

கடந்த ஒரு சில காலங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த சேவை போதிய பஸ் இருந்தும் சாரதி பற்றாக்குறையால் இடைநிறுத்தபட்டிருந்தது. அதனால் நாவலடி, வதிரிச் சந்தி, இரும்புமதவடி, உடுப்பிட்டி, தொண்டமானாறு பகுதியூடாக பயணம் செய்யும் மக்கள் பெரும்பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின் றனர். இதனால் தாம் நீண்ட தூரம் நடந்து சென்றே பிரதான மார்க்கங்கள் ஊடாகப் பயணம் செய்யும் பஸ்களைப் பயன் படுத்த வேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரி வித்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பருத்தித் துறை சாலை முகாமையாளர்:

கடந்த 6 வருடங்களாக இந்தச்சேவை இடைநிறுத் தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ஏனைய போக்குவரத்துச் சேவைகள் போல் ஆள்கள் போதியளவில் இல்லாமல் உள்ளது. ஆயினும் பஸ்கள் இருந்தும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்ற இந்த வேளை யில், ஆளணியை நிவர்த்தி செய்யும் பட்சத்தில் குறித்த பஸ் சேவையை மீண்டும் தொடர முடியும். சாரதியைத் தந்தால்அடுத்தநாளேஅந்தப்பகுதிக்குபஸ்சேவையை ஆரம்பிக்க முடியும். - என்றார். (ற-ஜ-ரி,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இராணுவத்திடம் களஞ்சியம் நெல் கொள்வனவு சிக்கலில்

## விசனம் தெரிவிக்கின்றனர் விவசாயிகள்

யாழ்ப்பாணம், பெப்.23
நெல் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு போதிய இடவசதி இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால்கரைச்சிவடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மிகப் பெரிய களஞ்சியசாலையை படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். - இவ்வாறு விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டபோது, களஞ்சியசாலை இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருப்பது குறித்து தனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று பதிலளித்தார்.

இராணுவத்தினரால் களஞ்சியசாலை கையகப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து தற்போதைய அரச அதிபருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்பதைச் சங்கத்தின்பொதுமுகாமையாளரும் ஏற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் 2015 - 2016 ஆம் ஆண்டுக்கான காலபோக அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் தமது நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமல் தவிக்கின்றனர். தமது நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையைக் கோரும்போது தமது 10 களஞ்சியங்களும் நிறைந்துள்ளன என்று பதிலளிக்கப்படுகின்றது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

> தமது நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையை கோரும்போது தமது 10 களஞ்சிங்களும் நிறைந்துள்ளன என்று பதிலளிக்கப்படுகின்றது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

நெல் கொள்வனவு தாமதப்படுத்தப்பட்டு வருவதால் தாம் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்குச் சொந்தமான அரிசி ஆலை ஒன்று பரந்தன் - முல்லைத்தீவு இரண்டாம் கட்டைப் பகுதியில் உள்ளது. அங்குள்ள நெற்களஞ்சியம் ஒரே தடவையில் 140 பாரவூர்தி நெல்லைக் களஞ்சியப்படுத்தும் வசதி கொண்டது. இந்தக் களஞ்சியசாலை தற்போது இராணுவத்தினரின் பிடியில் உள்ளது.

இந்தக் களஞ்சியசாலையை இராணுவத்தின் பிடியில் இருந்து விடுவிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அது கவனத்தில் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதனால் தாம் இப்போது பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

> பரந்தன் - முல்லைத்தீவு இரண்டாம் கட்டைப் பகுதியில் உள்ளது. அங்குள்ள நெற்களஞ்சியம் ஒரே தடவையில் 140 பாரவூர்தி நெல்லை களஞ்சியப்படுத்தும் வசதி கொண்டது. இந்த களஞ்சியசாலை தற்போது இராணுவத்தினரின் பிடியில் உள்ளது.

இது குறித்து மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டபோது, இவ்வாறான நெற் களஞ்சியம் இருக்கின்றது என்று தனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்றார்.

எவரும் இது குறித்து எனக்குத் தெரியப்படுத்தவில்லை. தெரியப்படுத்தியிருப்பின் துறைசார்ந்தவர்களுடனோ அல்லது இராணுவத்துடனோ கலந்துபேசிக் களஞ்சியத்தை மீளப் பெற நடவடிக்கை எடுத்திருக்கலாம் என்றும் அரச அதிபர் கூறினார்.

இது குறித்துக்கேட்டறிவதற்காகக் கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கத் தலைவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் அது கைகூடவில்லை. பொது முகாமையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது இது குறித்து முன்னைய அரச அதிபர் ஊடாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது என்றார்.

எனினும் களஞ்சியசாலை இராணுவத்தினரிடம் இருந்து மீளப் பெறப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஐ-5,101,ரி3)

## கௌரவிப்பு நிகழ்வு

சாவகச்சேரி,பெப்.23
தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவால் வலயப் பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறை பேராசிரியர் க.கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விபணிப்பாளர் க.மணிமாறனும், கௌரவ விருந்தினராக கொமர்ஷல்வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.சிவரூபனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற 796 மாணவர்களும், இவர்களுக்கு கற்பித்த 64ஆசிரியர்களும் அதிபர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ற-ஐ-9)

## கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.23
காமாட்சி அம்பாள் இந்து இளைஞர் சபையால் 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த கலைஞர்களுக்கான ஜனாதிபதியால் வழங்கப்படுகின்ற கலாபூசண விருதைப் பெற்ற நீர்வை மண் கலைஞர்களைக் கௌரவிக்கும் பாராட்டு நிகழ்வு இன்று இரவு 7 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வணிக பீடபீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலாபூசணம் விருது பெற்ற ரி. பரராஜசிங்கம், செ. வேணுகோபால் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும், சிறப்பு நிகழ்ச்சியாக ஈழத்தில் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான்கள் தலைமையில் நாதசங்கமம் நிகழ்ச்சியும் நடைபெறும் என சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி)

## பெண் பிள்ளைகளைத் தனியே விட்டு வெளியே செல்லாதீர்கள்

### பெற்றோர்களுக்குப் பொலிஸார் அறிவுறுத்து

வவுனியா, பெப்.23
வீடுகளில் பெண் பிள்ளைகளைத் தனியே விட்டுச் செல்வதைப் பெற்றோர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். - இவ்வாறு ஓமந்தைப் பொலிஸ் அதிகாரி சமன் தெரிவித்துள்ளார்.

வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அயல் வீட்டாருக்கு வீட்டை அவதானிக்கும்படி கூறுங்கள். பொலிஸார் ஒவ்வொரு வீட்டையும் அவதானித்துக் கொண்டிருக்க முடியாது. இதற்காகவே, கிராமத்தில் சில விடயங்களை அவதானித்து அதனைக் கட்டுப்படுத்த சிவில்பாதுகாப்புக்குழுக்களை அமைத்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

ஓமந்தை கிராமசேவகர் அனுசியா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குற்றச் செயல்கள் குறித்து சிவில் பாதுகாப்புக் குழுக்கள், கிராம சேவகர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ எமக்குத் தெரியப்படுத்துங்கள். அதனை நாம் கவனத்தில் எடுப்போம். அடிதடிப் பிரச்சினை, கலாசாரச் சீர்கேட்டுப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளை நீங்கள் சொல்ல வேண்டும். டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுக்க ஒவ்வொரு வீட்டாரும் முன்வர வேண்டும். பொது இடங்களில் பற்றைகளை அகற்ற வேண்டும்.- என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

குறிப்பாக பெண்பிள்ளைகள் தனியே விட்டுச் செல்ல வேண்டாம். மாலை நேரங்களில் வீட்டுக்குப் பிந்திச் செல்ல வேண்டாம். தனியே இருக்க வேண்டாம். உக்குளாங்குளம் பகுதியில் சிறுமிக்கு நடந்த விடயத்தை மனதில் வைத்திருங்கள்.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். ஓமந்தை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் அண்மையில் ரயில் மீது சிலர் கல் வீசியுள்ளனர். இவ்வாறான விசமத்தனமான நடவடிக்கையை மேற்கொள்வோர் பற்றிய தகவல்களை எமக்குத் தாருங்கள். விரைவில் இவ்வாறான விடயங்களுக்கு முற்று புள்ளி வைப்போம்.- என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ற-ஐ-402)



## யானைகளால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துக

### வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.23
தென்னிலங்கையிலிருந்துக் கொண்டு வரப்பட்டு வவுனியா மாவட்டத்தின் குடியிருப்புப் பகுதிகளுக்குள் இறக்கிவிடப்படும் யானைகளால் உயிரிழப்புக்கள், சொத்துக்களுக்குச் சேதம் என்பவை ஏற்படுகின்றன. உடனடியாக இவற்றைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிசெட்டிகுளத்தில் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செட்டிகுளம் பிரதேசத்தில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகிச் சாவடைந்த வேலுப்பிள்ளை தர்மலிங்கத்தின் இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. அதன்பின்னர் அவரது இல்லத்திலிருந்து, வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகம்வரையில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

தென்னிலங்கையிலிருந்து வவுனியா மாவட்டத்தின் குடியிருப்புப் பகுதிக்குள் யானைகள் கொண்டு வந்து இறக்கி விடப்படுகின்றன. இவை விவசாயத்தையும், மக்களின் வீடுகள், சொத்துக்களையும் நாசம் செய்கின்றன. அத்துடன் பொது மக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்துகின்றன. இதனை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கோரிக்கை அடங்கிய மனு ஒன்று, செட்டிகுளம் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.சண்முகானந்தனிடமும், செட்டிகுளம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடமும் கையளிக்கப்பட்டது. (ற-ஐ-5)

## கண்டாவளையில் 28 போத்தல் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி,பெப் 23
கிளிநொச்சி, கண்டாவளையில் 28 போத்தல் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களும் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளைக் காட்டுப் பகுதியில் இரகசியமான முறையில் தொடர்ச்சியாக கசிப்புக் காய்ச்சப்பட்டு வந்தமை தொடர்பில் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதையடுத்து, குறித்த பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸ்குழு கசிப்புக்காய்ச்சுவதற்குப் பயன்படுத்தும் 6 பரல் கோடாவையும், 28 போத்தல் கசிப்பையும் மீட்டுள்ளது. எனினும் குற்றவாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

கசிப்புக் காய்ச்சும் குறித்த இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேடன் பவலின் பிறந்த தின நிகழ்வுடன் ஜம்போறி மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.23

ஒன்பதாவது தேசிய ஜம்போறி நிகழ்வில், சாரணியத்தின் தந்தை பேடன் பவலின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று நடைபெற்ற தேசிய ஜம்போறியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள், கண்கவர் கலைநிகழ்வுகள் மற்றும் சாரணியர் சாகசப் பயிற்சிகளுடன் நிறைவடைந்தன.

பேடன் பவல்லின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் வகை யிலான, சாரணியத்தின் முதல் கூட்டம் இடம்பெற்றது. தொடர்ந்து மாதிரி ஜில்வெல் - ரீ யூனியன் நிகழ்வு மத்திய கல்லூரியின் மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சாரணர்கள், வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த சாரணர்கள், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



அவற்றைத் தொடர்ந்து சாரணியம் மற்றும் சாரணர் தேவைப்பாட்டை வெளிப்படுத்தல், அறிவூட்டல்முதலான செயற்பாடுகளை விளக்கும் வகையில் யாழ் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டசாரணியர் கண் காட்சியும் நடைபெற்றது. குறித்த கண்காட்சியில் கல்வி, சாரணியத்தின் தோற்றம் மற்றும் செல்லும் பாதை, இலங்கையின் முத்திரைகள், உயிர்ப்பரம்பலை விளக்குதல், உலக உணவுத்திட்டம் தொடர்பான விளக்கம், போசாக்கு உணவுகள் மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பேணுதல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயன்முறைகள்உள்ளிட்டபலவிடயங்களை உள்ளடக்கிய கண்காட்சிக் கூடங்கள் இலங்கை சாரணியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டிருந்தன.





அத்துடன் யாழ்.கோட்டை மத்திய பகுதியில் நடைபெற்ற சாரணர் திறமை வெளிப்பாட்டுப் போட்டிகள் இராணுவத்தின் வழி காட்டுதலில் நடைபெற்றது.

பயிற்சிக் கூடாரங்களும் போட்டிகளும் தனி மற்றும் குழு நிலைகளாகவும் நடத்தப்பட்டன.



கடற்படையினரின் சாரணிய செயற்பாட்டை விளக்கும் கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட மூன்று நாள்களின் பின்னரே குறித்த பயிற்சிப்பட்டறையைக் காண்பதற்கு பொது மக்கள் சிலர் வருகை தந்தனர். தொடர்ந்து இரவு நேர நிகழ்வுகளாக கலாசார வெளிப்பாட்டு நிகழ்வுகளும், சர்வதேச இரவு கலை நிகழ்வுகளும் வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள சாரணர்களால் நடத்தப்பட்டன. (ற-ஐ-ரி5)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை ஆளணி உடையதாக மாற்றி அமைக்குக

## தென்மராட்சி பிரதேச செயலர் கோரிக்கை

சாவகச்சேரி,பெப்.23

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை ஆளணிமிக்க வைத்தியசாலையாக மாற்றி, பிரதேச மக்களுக்கும் ஏனைய பிரதேச மக்களுக்கும் சிறந்த சேவைகளை வழங்கக்கூடிய வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.- இவ்வாறு தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கோரிக்கை விடுத்தார்.

தென்மராட்சி பிரதேசம் 60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசமாகும். இங்குள்ளமக்களுக்கான அனைத்து வைத்திய வசதிகளுடன் கூடிய வளங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள போதிலும், ஆளணிப் பற்றாக்குறை காரணமாக, பல செயற்பாடுகளுக்காக வேறு வைத்தியசாலைகளை நாட வேண்டிய நிலை பிரதேச மக்களுக்கு ஏற்படுகிறது. - என்று அதன்போது அவர் சுட்டிக் காட்டினார்.

தென்மராட்சிப் பிரதேச மக்கள் மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களும் இங்கு சிகிச்சை பெற்று வருவதால் இங்கு காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிதாக விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் அமைக்கப்பட்டு வரும் நிலையில், அங்கு நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய இணைத் தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றும் அவர் கோரிக்கை விடுத் தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆளணிப் பற்றாக்குறை காரணமாக பிரதேச அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றுவோர் மருத்துவ அறிக்கை பெற கிளிநொச்சி, மந்திகை போன்ற வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாக ஆய்வு கூட உதவியாளர், எக்ஸ்றே படப்பிடிப்பாளர் போன்ற பதவிகளுக்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதால், வைத்தியசாலையில் அவைகளுக்குரிய கருவிகள் காணப்படுகின்ற போதும் உரிய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முயற்சியினால் தற்போது ஒரேயொரு ஆய்வுகூட அலுவலரும், வாரத்தில் ஒரு நாள் எக்ஸ்-றே படப்பிடிப்பாளரும் கடமையாற்றுகின்றனர்.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் பிற்பகலில் மருத்துவ அறிக்கைக்கான அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதுடன், பிரதி செவ்வாய்க்கிழமைகளில் கதிர் இயக்க அலுவலர்வரும் வேளையில் அரச பணியாளர்கள் அறிக்கை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது தென்மராட்சி, பளை, பருத்தித்துறை போன்ற பிரதேச அரசதிணைக்கள அலுவலகங்களில் பணிபுரிவோர் சிரமமின்றி மருத்துவ அறிக்கையைப் பெறுகிறார்கள்.

நிரந்தர கதிர் இயக்க அலுவலரும், மேலும் ஓர் ஆய்வுகூட அலுவலரும் நியமிக்கப்பட்டால் மேலும் பலசேவைகளை வழங்க முடியும். அத்துடன் வைத்தியசாலையில் பற்றாக்குறையாக உள்ள குருதிக் காப்பகத்துக்கான கட்டட வசதிகளை செய்து அதற்கான அலுவலர்களையும் வழங்கவேண்டும் - என்றார். (ற-ஐ-9)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
நிர்மலா திருஞானம்
(சுகாதாரப்பணி உதவியாளர் - மருத்துவமனைப் பிரிவு ஏழாலை)

தோற்றம்
07.04.1977

மறைவு
24.01.2016

நெஞ்சை விட்டு அகலாத நினைவலைகள்....

இதய மன்னவளே ! ஏன் எம்மை விட்டு நெடுந்தூரம் சென்று விட்டாய் ?
உன் பிரிவால் துடிக்கும் கணவர் கதறும் பச்சிளம் பாலகர்கள் நினைவொழிய மாட்டாமல் கதறும் தாயும் சகோதரரும் ஏன் ? அம்மா உனக்கு
இந்த தண்டனை நாமறியோம் பராபரமே....

கடந்த 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் நிர்மலா திருஞானம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம் பெற்றது. வீட்டுக்கிரியைகள் இன்று (23.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்கேற்று தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

காட்டுப்புலம்,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

கணவர்,
பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பிக்கள் பலரின் ஆதரவை திரட்டுகிறார் மகிந்த


## கருணாவும் களமிறங்கினார்

கொழும்பு, பெப். 23
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு சவால் விடுக்கும் வகையில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து அதற்குத் தலைமைத்துவம் வழங்குவதற்குத் தயாராகிவரும் மகிந்த ராஜபக்ச, புதிய கட்சிக்கான ஆதரவு அலையைப் பெருக்கிக்கொள்ளும் முயற்சியிலும் தீவிரமாகக் களமிறங்கியுள்ளார்.

இதற்கமைய பலதரப்பினருடனும் அவர் தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகிறார். அண்மையில் நீர்கொழும்பு, கொச்சிக் கடையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேச்சு நடத்திய அவர், நேற்றுமுன்தினம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடினார்.

தான் ஜனாதிபதியாக இருந்தகாலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம்வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்களையே மகிந்த சந்தித்து, முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார் என அறியமுடிகிறது.

சிநேகபூர்வமான சந்திப்பு என்ற போர்வையில் தலவத்துகொடையிலுள்ள ஹோட்டலொன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் (கருணா அம்மான்) பங்கேற்றிருந்தார். அத்துடன், மகிந்த அணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். பசில் ராஜபக்ச, ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரும் வருகைதந்திருந்தனர்.



புதிய அரசியற் கட்சிக்குமுழு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது பச்சைக்கொடி காட்டியுள்ளனர்.

"பொதுஎதிரணிக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்" என்று சந்திப்பில் கலந்து கொண்ட உதய கம்மன்பில கூறினார்.

" சுபநேரம் கணிக்கப்பட்டு வருகிறது. எனவே, உரிய சுப வேளையில் புதிய கட்சி உதயமாகும்" என்று தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி கூட்டத்தில் புதிய அரசியல் கட்சி பற்றியும் பேசப்பட்டது என்று பசில் ராஜபக்ச கூறினார். (த-சி)

# ஆசிரியர் கைநூல் இதுவரை இல்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.23
முதலாம் தரத்துக்கு இந்த ஆண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்துடன் ஆசிரியர்கைநூல் இதுவரை கிடைக்கப்பெறாதிருப்பதன் காரணமாக, முதலாம் தரத்துக்கான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்ஆசிரியர்கள்பெரும் குழப் பத்துக்கு உள்ளாகியிருப்பதாக இலங்கை ஆசிரிய சங்கம் தெரிவித்துள்ளது.

> 2016 ஆம் ஆண்டுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடவிதானம் குறித்து இதுவரை ஆசிரியர்களுக்கு பயிற்சி கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடவிதானம் குறித்து இதுவரை ஆசிரியர்களுக்கு பயிற்சி கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.

பத்து ஆண்டுகளுக்கு ஒருதடவை பாடத்திட்டங்கள் மாறி வரும் பின்புலம் ஒன்றில் இந்த முறை 12 ஆண்டுகளுக்குப் பின்னரே பாடத்திட்டம் மாற்றப் பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதமளவில் அது தொடர்பாக அவசியமான பாடப் புத்தகங்கள் பரிந்துரைகள், ஆசிரியர் கைநூல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டியிருந்தாலும் கூட, ஜனவரி மாதத்திலேயே பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டின் முதலாம் தரத்துக்கு ஜனவரி மாதம் 4ஆம் திகதி மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், புதிய பாடத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான எந்தவொரு பயிற்சியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஆலோசனையொன்றுக்கு அமைய இந்த முறை பாடத்திட்டத்தினுள் "ஒற்றை றூல்" கொப்பியொன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதோடு ஏராளமான புதிய மொழி பெயர்ப்புக்களும் கூட இந்தப் பாடத்திட்டத்தினுள் உள்ளடங்கியுள்ளன.

புதிய பாட நெறியுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர் கைநூல்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்றப்படாதிருப்பதனால் முதலாம் தரத்தில் இணைந்து கொண்டுள்ள மூன்று லட்சங்களுக்கு மேற்பட்ட மாணவர்கள் போன்றே ஆசிரியர்களும்பெரும்சிரமத்துக்கு உள்ளாகியிருப்பதாக இலங்கை ஆசிரியர்சங்கம்தெரிவித்துள்ளது.

தற்போது கல்வித்துறையில் தலை தூக்கியுள்ள சிக்கலுக்குத் தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு இலங்கை ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், தேசிய கல்வி ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு கடிதம் மூலமான கோரிக்கை யொன்றையும் கூட விடுத்துள்ளது. (த-ஐ-22)

## வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரியிடம் வாக்குமூலம்

கொழும்பு, பெப். 23
மகர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவரிடம், வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரியொருவரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கு இலக்கம் காணப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மகர சிறைச்சாலை கைதிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது, குறித்த சிரேஷ்ட அதிகாரியின் வங்கிக் கணக்கு இலக்கம் அடங்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்பொழுது இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைத் திணைக்கள மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பின்னர், அடுத்த வாரத்துக்குள் குறித்த வெலிக் கடைச் சிறைச்சாலை அதிகாரியிடம் இது தொடர்பான வாக்கு மூலம் பெறப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (தி)

## மாகாண முதலமைச்சர்கள் கோரும் அதிகாரங்களை வழங்க முடியாது

### தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, பெப். 23
மாகாண முதலமைச்சர்கள் கோரும் சகல அதிகாரங்களையும் வழங்க முடியாதென்றும், அதிகாரங்களை வழங்குவது குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்குமெனவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



கடந்த 19ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண்டுமென பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே, தினேஷ் மேற்குறித்தவாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவிகளைக் கொலை செய்வதற்குப் பொலிஸ் அதிகாரத்தையும் காடுகளை அழிப்பதற்குக்காணி அதிகாரத்தையுமா கேட்கின்றீர்கள் என ஆவேசப்பட்டுள்ள தினேஷ், வடக்கு முதலவர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளாத இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஓர் தீர்மானமாக கருத முடியாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண முதலமைச்சர்கள் கோரும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கலாமென அமைச்சர் டிலான் பெரேராவும் குறிப்பிட்டிருந்த நிலையில், அதிகாரங்களை வழங்குவது குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் டிலான் பெரேராவுக்கு இல்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - முதலமைச்சர்கள் கோரும் அதிகாரங்கள் என்னவென்று தெளிவாக அறிவிக்க வேண்டுமென்றும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (தி)

## அரச ஊழியர் சம்பள அதிகரிப்பு அமைச்சரவையின் அனுமதிக்கு

கொழும்பு,பெப்.23
அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் 2 ஆயிரத்து 500 ரூபாவை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதற்கென அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தாம் அமைச்சரவைக்குமுன்வைத்திருப்பதாக அரச நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்துக்கு 2016 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து 2 ஆயிரத்து 500 ரூபாவை சேர்த்துக் கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்டிருந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா என்ற மாதக் கொடுப்பனவு முன்மொழியப்பட்டிருந்ததோடு, இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து அந்தக் கொடுப்பனவின் 2 ஆயிரத்து 500 ரூபாவை ஜனவரி மாதச் சம்பளத்துடன் வழங்குவதற்கும் முன்மொழியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-22)

# நுகர்வோர் அதிகார சபைக்கு விசாரணை அதிகாரிகள் தேவை

## திறைசேரியின் அனுமதி கோரப்பட்டுள்ளது

கொழும்பு,பெப்.23
நுகர்வோர் அதிகார சபைக்கு புதிதாக 100 விசாரணை அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு திறைசேரியின் அனுமதி கோரப்பட்டிருப்பதாக அதிகார சபையின் பணிப்பாளர் ஏ.கே.டீ.டீ. அரந்தா தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு முழுவதுமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்புக்கள் மற்றும் விசாரணைச் செயற்பாடுகளை மேற்கொள்ள அதிகார சபையில் அதிகாரிகள் 100 பேர் மாத்திரமே உள்ளனர்.

ஆனால் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களினதும் விசாரணைச் [illegible] கள் மற்றும் சுற்றிவ[illegible] களை மேற்கொள்ள விசாரணை அதிகாரிகள் 300 பேர் வரையில் தேவை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் 100 பேரைச் சேர்த்துக் கொள்வதற்கு அரசிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அரசிடமிருந்து சாதகமான பதிலொன்று [illegible] [illegible] அவர் தெரிவித்தார்.

நுகர்வோருக்கான சட்டத்தின் விதிகளை மீறும் வர்த்தகர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருவது தொடர்பாக மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்கள் மற்றும் விசாரணைகளுக்கு முன்னுரிமை வழங்கி விசாரணை அதிகாரிகள் செயற்பட்டு வருவதோடு, நுகர்வோருக்கான சட்ட திட்டங்கள் சம்பந்தமாக மக்களுக்கும் வர்த்தக சமூகத்துக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் அறிவூட்டுதல் அந்த அதிகாரிகள் மூலமாகமேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்தமுறை சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கையில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. (த-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புத் திருத்தம் குறித்து கருத்தறியும் அமர்வு நுவரெலியாவில்



கொழும்பு,பெப்.23
உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொது மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் இரண்டாம் நாள் அமர்வு நேற்றுமுன்தினம் நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் அமர்வில் சுமார் 45 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் அரசியல் தொடர்பாகவே கூடுதலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட அதேவேளை, பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த ஆசிரியர்கள், பொது மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள், அரசியல் மற்றும் தொழிற்சங்கவாதிகள் சிலர் தமது யோசனைகளை வாய் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் குழுவினரிடம் தெரிவித்தனர்.

இதில் முக்கியமாக மலையக ஆய்வகம், இலங்கைத் தொழிலாளர் முன்னணி, ஜனநாயகத்துக்கான சமாதான வழக்கறிஞர் அமைப்பு, சிங்கள, தமிழ் கிராமிய வலையமைப்பு, இளம் சமூக விஞ்ஞானிகள் அமைப்பு, சர்வமத மகளிர் அமைப்பு, 'அதிர்வுகள்' பெண்கள் அமைப்பு மற்றும் பல குழுக்கள் தமது யோசனைகளை உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் கருத்தைக் கேட்டறியும் நால்வர் அடங்கிய குழுவினரிடம் கையளித்தனர்.

அத்தோடு இடம்பெற்ற இந்த இரண்டு நாள் அமர்வுகளில் மொத்தமாக 75 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கருத்துகளும், யோசனைகளும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ)

## தனியாரின் சம்பள அதிகரிப்பு: அரசின் தீர்மானம் ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.23
தனியார் துறையின் ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானம் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

நாளையதினம் இது தொடர்பான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் விவாதிக் கப்பட இருந்தாலும் கூட, அது தொடர்பில் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக விவாதத்தை ஒத்திவைக்க நேர்ந்திருப்பதாக தொடர்பாடல் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் வீட்டுப் பணிப்பெண்கள் குறிப்பிடப்படாதிருப்பது தொடர்பில் நீதிமன்றுக்கு மனுவொன்று முன்வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அந்த மனுவின் விசாரணைகள் முடிவுறும் வரையில் அனைத்தையும் பின்தள்ளி வைக்க வேண்டி நேர்ந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## நல்லாட்சியில் குற்றவாளிகள் தண்டிக்கப்படப் போவதில்லை

### அனுரகுமார திஸநாயக்க கூறுகிறார்



கொழும்பு, பெப்.23
மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு நல்லாட்சி அரசு உரிய தண்டனை விதிக்கும் என் பதை எம்மால் எதிர்பார்க்க முடி யாது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் , முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையில் புதிய கட்சி அமைக்கும் முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும் அண்மைய நாள்களாக இந்தப் புதிய அரசியல் கட்சி தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சிக்குள் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொனராகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (து)

# சு.க. தலைமைத்துவத்தை அச்சுறுத்திப் பெறவில்லை

## நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, பெப்.23
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி அச்சுறுத்தி பெறப்படவில்லையென்றும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச முன்னிலை யிலேயே கட்சித்தலைமைத்துவம் கைமாற்றப்பட்டதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தலுக்குப் பின்னர் சபாநாயகர் இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சுமுகமான பேச்சின் பின்னரே சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதென இதன்போது நிமால் குறிப் பிட்டார்.

குறித்த சந்திப்பின்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த, ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச ஆகியோர், சபாநாயகர் இல்லத்தின் மேல் மாடிக்குச் சென்று கலந்துரையாடிவிட்டு வெளியில் வரும்போது இன்முகத்துடன் வந்ததாகவும், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் முன்னிலையிலேயே கட்சியின் தலைமைத்துவத்தைக் கையேற்குமாறு மைத்திரியிடம் மகிந்த குறிப்பிட்டதாகவும் அமைச்சர் நிமால் மேலும் கூறியுள்ளார்.

> 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இன்னும் நான்கரை வருடங்களுக்குத் தேர்தலை நடத்த முடியாதென சுட்டிக்காட்டியதோடு, இவ்வாறான நிலையில் அதற்கு முன்னர் ஆட்சியைக் கைப்பற்றுவது சாத்தியமற்ற ஒன்று எனவும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லையெனக் குறிப்பிட்ட நிமால், அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இன்னும் நான்கரை வருடங்களுக்குத் தேர்தலை நடத்த முடியாதென சுட்டிக்காட்டியதோடு, இவ்வாறான நிலையில் அதற்கு முன்னர் ஆட்சியைக் கைப்பற்றுவது சாத்தியமற்ற ஒன்று எனவும் குறிப்பிட்டார். தேர்தல் வெற்றியை அடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இருந்து, கட்சித் தலைமை பறிக்கப்பட்டதாக கூட்டு எதிரணியினர் குற்றஞ் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)

## பெருந்தோட்டத் தொழிற்றுறையிலிருந்து வெளியேறுகின்றனர் மலையக இளைஞர்

கொழும்பு,பெப்.23
மலையகத்தில் பெருந்தோட்டத் தொழிற்றுறையிலிருந்து இளைஞர்கள் பெருமளவில் வெளியேறி வருகின்றனர். உலக வங்கியின் அறிக்கையை மேற்கோள்காட்டி 'த ஹிந்து' பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பிலுள்ள பெருந்தோட்டப்பகுதிகளில் 19 ஆம் நூற்றாண்டின்நடுப்பகுதியிலிருந்து இந்திய வம்சாவளி மக்கள் குடியேற்றப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் தேயிலைத் தொழிற்துறையில் ஈடுபட்டனர்.

எனினும்கடந்த 2003ஆம்ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பெரும்பாலான இளைஞர்கள் பெருந்தோட்டத் துறையில் இருந்து வெளியேறியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.குறிப்பாக 15 வயது முதல் 24 வயதுக்கு இடையிலானவர்கள் பெருந்தோட்ட தொழிற்துறையை விரும்புவதில்லை எனசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(த-சி)

# கொழும்புடன் உறவைப் பலமாக்க வந்தது ஈரானின் உயர்மட்டக் குழு

கொழும்பு, பெப்.23
இலங்கையுடனான அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதற்காக உயர்மட்டத் தூதுக்குழுவொன்றை ஈரான் அரசு கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

அந்த நாட்டு மின்வலு அமைச்சர் ஹமீட் ஷிசியான் தலைமையில் நேற்று நண்பகல் இலங்கை வந்த குறித்த உயர்மட்டக்குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, மின் வலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய உள்ளிட்டவர்களுடன் பேச்சுக்களை நடத்த வுள்ளனர். இதற்குரிய ஏற்பாடுகளை இருநாட்டுத் தூதரகங்களும் மேற் கொண்டுள்ளன.

மகிந்த ஆட்சியின்போது இலங்கைக்கும் ஈரானுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. அனைத்துலக மட்டத்தில் மகிந்தவுக்காகக் குரல் எழுப்புவதற்கு ஈரான் பின்நிற்கவில்லை. அதே போல் அமெரிக்காவின் எதிர்ப்பலைகளையும்மீறி தெஹ்ரானுடன் உறவைப் பலப்படுத்துவதில் மகிந்த தீவிரம் காட்டினார்.

பொருளாதாரத்துறையிலும் பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இதில் குறிப்பாக ஈரான் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் 2008 ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தபோது மகிந்தவுடன் நடத்திய பேச்சுகளையடுத்து 450 மில்லியன் டொலர் செலவிலான உமா ஓயா திட்டத்துக்கு உதவ இணக்கம் காணப்பட்டு, அதுதொடர்பான உடன்பாடுகளும் கைச்சாத்திடப்பட்டன.

எனினும், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தடை விதித்ததால் அந்த நாட்டிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கும் உமா ஓயா திட்டத்தை முன்னெடுப்பதற்கும் கொழும்புக்குச் சிக்கல்நிலை உருவாகியது.

தற்போது ஈரான்மீதான தடைகளை அமெரிக்கா தளர்த்தியுள்ளது. இலங்கையிலும் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, முன்னர் இருந்தவாறு உறவுகளைப் புதுப்பித்துக்கொள்வதற்காக தற்போதைய ஜனாதிபதி ஹஸன் ருஹானி தலைமையிலான ஈரான் அரசு தீவிரம் காட்டி வருகிறது. அண்மையில் இலங்கைக்குப் புதிய தூதுவர் ஒருவரையும் ஈரான் நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஈரான் நாட்டின் ஆன்மிகத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலி காம்னியின் கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கான ஆலோசகர் செயித் அலிகாஸி அஸ்கர் கடந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டிருந்தார். உயர்மட்டக்குழுவின் பயண ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே அவர் கொழும்பு வந்திருந்தார் எனக் கூறப்படுகிறது.(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வர்த்தக முதலீடுகளைப் பெறவேனும் அப்பழுக்கு அற்ற ஆட்சி மேலெழுமா?

இலங்கையில், ஜனநாயகம் அப்பழுக்கு அற்று நிலவ வேண்டும் என்று எதிர்பார்க்கும் சகலரும், அங்குவந்து வர்த்தக முதலீடுகளை மேற்கொள்ளுங்கள்.

சமீபத்தைய தமது வெளிநாட்டுப் பயணத்தின் போது, ஒஸ்ரிய நாட்டின் வர்த்தகர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலீட்டு மாநாட்டில், மேற்சொன்ன வேண்டுகோளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்தார் என்பது செய்தி.

அவரது குறித்த திறந்த அழைப்புக்கு, பரந்த அளவில் வரவேற்பு இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்து சென்ற அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையின் ஆட்சித்தலைவர் ஒருவர் ஒஸ்ரியாவுக்குப் பயணம் செய்தமை இதுவே முதல் தடவை என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

மாநாட்டில் எமது நாட்டின் ஜனாதிபதி உரையாற்றியதைத்தொடர்ந்து, நிதிஅமைச்சர் ரவி கருணநாயக்க அந்த நாட்டின் வர்த்தகர்கள் மத்தியில் நீண்ட உரை ஒன்றை ஆற்றினார் என்பது தகவல்.

ஜனாதிபதியின் தலைமையில், இலங்கையில் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அங்கு விலாவாரியாக விளக்கினார்.

நல்லது; எமதுநாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி கருதி, இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பது, வேண்டுவது வரவேற்கத்தக்கதே.

உண்மையான, கனகாத்திரமான மக்கள் ஆட்சி இதுவரை இங்கு நடைபெற்றதா? இனிமேல் புதிய நல்லாட்சி அரசின் காலத்தில் அது மொட்டவிழ்ந்து மலருமா என்ற வினாவுக்கு உகந்த பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

அதற்கான அதியுச்சப் பின்புலம் இன்னமும் உருவாக்கப்பட இல்லையே ...?

உள்ளார்ந்து, ஊடுருவிப் பார்த்தால் - நோக்கினால் - உண்மையான - நிலையான - அமைதி நிலவும் நாடு ஒன்றுடனேயே, அனைத்துலக வர்த்தகர்கள் வியாபார சம்பந்தம் வைத்துக்கொள்வர்; நம்பிக்கைகொள்வர்.

நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பு உறுதியாக இருந்தால் மட்டுமே, அதனூடு அனைத்துப் பிரசைகளினதும் உரிமை களைப் பிசிறின்றி வழங்கும் நிலை உயர்ந்திருந்தால்மட்டுமே --

அவர்களுக்குச் சேரவேண்டிய, தவிர்க்கப்படக்கூடாத, உரிமைகள் அப்பழுக்கு இன்றிக் கிடைக்க வழி செய்தால் மட்டுமே--

நாட்டில் இன அமைதியும், அதனூடான பொருளியல், வாழ்வியல் மேம்பாடும் கைக்கு வரும்.

ஒரு வசனத்தில் சொல்வதானால், நாட்டின் சகல இனமக்களினதும் ஜனநாயக உரிமைகளை பாகுபாடு (Discrimination) காட்டாத --

எல்லோரதும் - இங்குவாழும் சகல, இன, மத மக்களினதும் -- உரிமைகள், பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்ற வேறுபாடின்றி வழங்கும் அப்பழுக்கு அற்ற நல்லாட்சி ஒன்று மேலெழுந்தாலே--

வெளிநாடுகள் தமது கைகளில் கரியைப்பூசிக் கொள்ளும் நிலை வராது என்று உறுதியாக நம்பும் நிலை உருவாகும்.

அதனை முழுஅளவில் கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும், இப்போதைய அரசு.

உள்ளார்ந்து மனம் கொள்ளுமா அது --?



# மகனுக்காக மகிந்த புலம்புவது எந்த வகையில் நியாயம்?

சேரலாதன்

காற்றுக்கூடப் புக முடியாத சிறைக்குள் தமது மகன் அடைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மனம் பொருமியுள்ளார். யோசித ராஜபக்ச சிறையில் அடைத்து வைக்கப்பட்ட தினத்தில் இருந்து அவர் புலம்பிக் கொண் டிருப்பதைப் பார்க்க முடிகின்றது.

புத்திர பாசம் எவருக்கும் உரிய ஒன்றுதான். அதிலும் மகிந்த ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அவரது குடும்பம் அரசபோகவாழ்க்கையை வாழ ஆரம்பித்து விட்டிருந்தது. குறை வில்லாத செல்வம், வரம்பு மீறிய அதிகாரம் எல்லாம் ஒன்று சேர்ந்து மகிந்த குடும்பத்தை எங்கோ எட்டாத உயரத்துக்குக் கொண்டு சென்று விட்டிருந்தது. கேட்பதற்கு எவருமில்லாத நிலையில் தலை கால் புரியாது ஆடிய மகிந்த இன்று தலை குனிந்து, கண்ணீர்விட்டு அழுகின்ற அளவுக்கு கீழே இறங்கிவிட்டார்.

மகிந்தவின் ஆட்சிக் காலம் இந்த நாட்டின் கறைபடிந்த நாள்களைக் கொண்டிருந்தது. கொலைகள், ஆள்களைக் காணாமற் போகச் செய்தல், கடத்திச் சென்று சித்திர வதைகளுக்கு உட்படுத் துதல், வேண்டாதவர்களின் பதவிகளைப் பறித்து அவமானப் படுத்துதல் என்பதெல்லாம் சாதாரணமாகவே அன்று நடந்தேறின. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட எல்லையில்லாத அதிகாரங்களை மகிந்த எல்லை மீறிய வகையில் பயன்படுத்திக் கொண்டார். நீதித்துறை அவரது காலடியில் வீழ்ந்து கிடந்ததும், அவருக்கு நெருக்கமானவர்கள் உயர் பதவிகளில் அமர்ந்ததும் அவரது சுதந்திரமான செயற் பாடுகளுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.

### பாரதூரமான குற்றச்சாட்டுக்கள்

மகிந்த மீதும், அவரைச் சார்ந்தவர்கள் மீதும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும், அவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்வதையே காண முடிகின்றது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிக்கின்றார். முன்னர் அந்தப் பதவியை மகிந்தவே வகித்து வந்தார். ஆனால் ஜனாதிபதி என்ற பதவி வழியாகத் தலைவர் பதவி மைத்திரியின் கரங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. முன்னாள் மற்றும் தற்போதைய ஜனாதிபதிகள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் சிக்கல்கள் தோன்றியுள்ளன. கட்சியைப் பாதுகாப்பதா? அல்லது அதே கட்சியைச் சேர்ந்த ஊழல் மோசடிக்காரர்களைத் தண்டிப்பதா? என்பதில் தற்போதைய ஜனாதிபதி குழம்பிப் போய்க் கிடக்கின்றார். இதை மகிந்தவும் தமக்குச் சார்பாகப் பயன் படுத்திக் கொண்டிருக்கின்றார்.

> கட்சியைக் காட்டிக் காட்டியே காலத்தைக் கடத்தி விடலாமென எண்ணிக் கொண்டிருந்த மகிந்தவுக்கு யோசிதவின் கைது நடவடிக்கை பேரதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

கட்சியைக் காட்டிக் காட்டியே காலத்தைக் கடத்தி விடலாமென எண்ணிக் கொண்டிருந்த மகிந்தவுக்கு யோசிதவின் கைது நடவடிக்கை பேரதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. தமது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகளில் இருந்து விடுபட வேண்டுமானால், மீண்டும் தாம் பதவியில் அமருவதே ஒரே வழியென அவர் எண்ணிக் காய்களை நகர்த்திய போதிலும், அதற்கும் பயன் கிடைக்காத நிலையில் வாய்க்கு வந்ததை எல்லாம் உளறிக் கொட்டுகின்றார்.

சோதிடர்களின் ஆலோசனையின் பிரகாரம் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கான காரியாலயத்தை அவர் எதிர்ப்புறமாகத் திரும்பி நின்று கொண்டு நாடாவை வெட்டித் திறந்து வைத்தமை அவரையொரு கோமாளியாகவே சித்திரித்துக் காட்டிவிட்டது. அவர் மனநிலை குழம்பிய நிலையில் இருப்பதையும் இது காட்டிவிட்டது.

மகிந்த தமது மகன் யோசிதவுக்காகக் கண் கலங்குகின்றார், வேதனையில் துடிக்கிறார். சிறைச்சாலைக்கும் வீட்டுக்குமாக அலைந்து திரிகிறார். ஆனால் இவரைப் போன்ற எத்தனை பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பிரிவைத் தாங்க முடியாமல் துடித்தனர், துடித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை மகிந்த இப்போதாவது உணர்ந்து கொண்டாரா? இவரது ஆட்சியில்தான் ஒன்றுமே அறியாத அப்பாவி மாணவர்கள் திருகோணமலையில் துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். இந்த மாணவர்களின் பெற்றோர் வலியும், வேதனையும் இல்லாமல் மகிழ்ச்சியுடனா இருக்கின்றனர்? தொண்டு நிறுவனமொன்றின் ஊழியர்கள் மூதூரில் படுகொலை செய்யப்பட்டதையும் மகிந்த அறிந்திருக்கவில்லையா? இறுதிப் போரின்போது தமிழர்களை வதைத்ததும், படுகொலை செய்ததும் மகிந்த அறியாத ஒன்றல்ல. இவ்வாறு ஏராளமான சம்பவங்களைப் பட்டியலிட முடியும்.

தற்போது தமது மகன் காற்றுப்புக முடியாத சிறைக்குள் அடைபட்டிருந்தாலும் உயிருக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை என்பதை எண்ணி மகிந்த மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக கண்ணீர் வடிப்பது எந்த வகையிலும் நியாயமாகத் தெரியவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# அரசியல் கைதிகளின் விடுதலையும் காணாமற்போனோர் விவகாரமும்

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரமும் காணாமற்போனோர் விவகாரமும் 30 வருட கொடூர போர் விட்டுச் சென்ற மிகப் பெரிய காயங்களாகும். அந்தக் காயங்களை ஆற்றுவதற்கான மருந்தைத் தேடி தமிழர்கள் உலகம் முழுவதும் ஓடித் திரிகின்றனர்.

மகிந்தவின் ஆட்சியில் இதற்கு வாய்ப்பே இருக்கவில்லை என்றபோதிலும், இந்த அரசில் அதற்கான வாய்ப்புக் கிடைக்குமா என அவர்கள் தேடிப் பார்க்கின்றனர். இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தேடி அவர்கள் இந்த ஆட்சியிலும் போராட்டங்களை நடத்தவே செய்கின்றனர்.

2009 இல், போர் முடிந்து 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டமை இந்த அரசியல் கைதிகளுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது.

அதனால், அவர்கள் அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தும் பார்த்தனர்; போராடியும் பார்த்தனர். ஆனால், அப்போதைய மகிந்த அரசு அவற்றுக்கெல்லாம் அடிபணியவில்லை.

போராட்டங்கள் முற்றாக அவமதிக்கப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவர்கள் புதிய ஆட்சியிலும் போராட்டங்களை மேற்கொண்டனர்.

**விசாரணைகள் இன்றிச் சிறைகளில்**

எந்தவித விசாரணைகளும் இன்றி வருடக் கணக்கில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இவர்கள் தங்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கித் தங்களை விடுதலை செய்யுமாறு இன்றைய அரசைக் கோரி கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள சிறைகளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

இந்த விடயத்தில் தலையிட்ட ஜனாதிபதி மைத்திரிபால இவர்களை விடுதலை செய்வது தொடர்பில் தீர்மானம் ஒன்று அறிவிக்கப்படும் என்று உறுதியளித்தார். அந்த வாக்குறுதியை நம்பி கைதிகள் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் நவம்பர் 5ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இது தொடர்பிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

“எந்தவித விசாரணைகளும் இன்றி வருடக் கணக்கில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இவர்கள் தங்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கித் தங்களை விடுதலை செய்யுமாறு இந்த அரசைக் கோரி கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள சிறைகளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர்.”

**அரசின் முடிவை ஏற்காத கைதிகள்**

முதற்கட்டமாக 62 கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்றும், அவர்களுள் 32 பேர் நவம்பர் மாதம் 9ஆம் திகதி விடுவிக்கப்படுவர் என்றும், மிகுதியானோர் இரண்டாம் கட்டமாக விடுதலை செய்யப்படுவர் என்றும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் பிரதமர் கூறியிருந்தார்.

ஆனால், அரசியல் கைதிகள் அரசின் இந்த முடிவை ஏற்கவில்லை.18 வருடங்களுக்கும் மேலாகப் பல கைதிகள் சிறைகளில் வாடுகின்ற நிலையில், அண்மையில் கைதுசெய்யப்பட்டு, அதாவது, போர் முடிந்த பின்னர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளையே இப்போது விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பட்டுள்ளது எனத் தெரிவித்து–அந்த முடிவை எதிர்த்து கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி, சட்டமா அதிபருடன் பேச்சு நடத்தி ஒரு தீர்மானத்துக்கு வந்தார். நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டுவரும் 85 கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்தல் என்பதே அந்தத் தீர்மானமாகும். ஆனால், இப்போது வரை எதுவும் நடக்கவில்லை.

**கூட்டமைப்பின் ஏற்பாட்டில் விவாதம்**

இந்தப் பிரச்சினைக்கான தீர்வை விரைந்து பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இது தொடர்பில் நாடாளு மன்றில் விவாதம் ஒன்று இடம்பெற இருக்கின்றது. இந்தப் பிரேரணை அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோருவது மாத்திரமன்றி, காணாமற்போனோர் விவகாரத்தையும் உள்ளடக்குகின்றது. மேற்படி இரண்டு பிரச்சினைகள் தொடர்பில் தாம் கோரி நிற்கும் தீர்வை மீண்டும் நினைவுபடுத்தப் போகும் சம்பந்தன், இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அரசு இதுவரை எடுத்த நடவடிக்கை தொடர்பில் கேள்வி எழுப்பவும் உள்ளார். இதற்கு முன் யாழில் இடம்பெற்ற தேசிய பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காணாமற்போனோரில் அதிகமானவர்கள் உயிருடன் இல்லை என்று கருத்துத் தெரிவித்தமையால், தமிழர்கள் இந்த நகர்வை இப்போது சந்தேகக் கண்கொண்டே பார்க்கத் தொடங்கியுள்ளனர். நாடாளுமன்ற விவாதத்தின்போது, பிரதமரின் இந்தக் கூற்றுத் தொடர்பில் அவரிடம் கூட்டமைப்பு விளக்கங்களைக் கோரும் என கூட்டமைப்பு வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.

## மனித நேயம் உள்ள அலுவலர்கள்

நான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கடமை புரிகின்றேன். கடந்த முதலாம் திகதி திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலைக்கும், கோண்டாவிலுக்கும் இடையில் எனது பணப்பையுடன், தேசிய அடையாள அட்டை, ஏ.ரி.எம். காட், சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட சகலதையும் தொலைத்து விட்டேன். இது வரைக்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. பணத்தை எடுத்துவிட்டு மிகுதி ஆவணங்களை தபால் பெட்டியில் போட்டாலே கிடைத்திருக்கும். ஆனால் எதுவுமே இடம்பெறவில்லை.

இது இப்படி இருக்க, ஒவ்வொரு ஆவணமாக புதிதாக எடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக சாரதி அனுமதி அட்டை எடுப்பதற்காக யாழ்.கச்சேரியில் இயங்கும் மோட்டார் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குகின்ற அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு மக்கள் தொடர்பாடல் அலுவலர் தொடக்கம் பிரதம மோட்டார் பரிசோதகர் வரை என்னை நன்றாக அனுசரித்து எனது தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டார்கள். இது இப்படி இருக்கும்போது எனது தேசிய அடையாள அட்டையின்படி எனது பிறப்புத் திகதியில் சில தவறுகள் நடந்து விட்டன.

ஆகவே புதிதாக சாரதி அனுமதிப் பத்திரம் செய்யும்போது தகவல்கள் வேறுபடுவதாகக்கூறி அங்குள்ள அலுவலர் புதிய அடையாள அட்டை கிடைத்ததும் வரும்படி கூறித் திருப்பி அனுப்பியதோடு ஆலோசனையும் வழங்கினார். அதாவது இப்போதே எல்லா ஆவணங்களையும் திருத்தி விடவேண்டும். இல்லையேல் ஓய்வூதியம் பெறும் வேளையில் சிலபிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியதுக்கு இணங்க, நான் புதிய தேசிய அடையாள அட்டையுடன் திரும்பவும் அந்த அலுவலகத்துக்குச் சென்றேன். அப்போதும் எல்லோரும் என்னை நல்மனதுடன் வரவேற்று சகல தேவைகளையும் பூர்த்தி செய்தார்கள். பின்பு எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு நான் வந்து விட்டேன். திடீரென தொலைபேசி அழைப்பு அங்கிருந்து வந்தது.

எனது விண்ணப்பத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியதால் உடனடியாக வரும்படி - அந்த அலுவலர் எந்தவித சிரமமும் பாராது என்னை அழைத்து இருந்தார். அவர்கள் அசண்டையீனமாக அனுப்பி இருந்தால் மீண்டும் ஒரு முறை நான் அலைய வேண்டியிருக்கும். அந்த சி5 இலக்கக் கவுண்டரில் உள்ள அலுவலர் நல்ல மனதுடன்சகல அலுவல்களையும் முடித்து விட்டு மறுபடியும் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து எனது மாற்றங்கள் தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாக அறிவித்திருந்தார்.

நான் அவரின் சேவை மனப்பான்மையைப் பாராட்டி நன்றி தெரிவித்தேன்.

கடந்த 16ஆம் திகதியன்று சரியாக இரண்டு கிழமைக்குள் சாரதி அனுமதி அட்டை கிடைத்து விட்டது. உண்மையில் கொழும்பு சென்று எடுப்பதாயின் பணம் நிறையச் செலவாகும். 2000 ரூபா மட்டும் செலுத்தி துரிதமாகக் கிடைக்கச் செய்த அலுவலர்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

உண்மையில் இப்பேற்பட்ட நல்ல உத்தியோகத்தர்கள் நாட்டுக்கு குறிப்பாக யாழ்.மாவட்டத்துக்குத் தேவை எனக்கூறி அவர்களுடைய சேவையைப் பாராட்டுகிறேன். இது யாழ்ப்பாணம் மோட்டார் சாரதி அனுமதிப் பத்திர திணைக்களத்துக்குச் சமர்ப்பணம்.

ப.குகராஜா

## வாலிபர் சங்கங்கள் கவனிக்குமா?

கடந்தகாலப் போரின் விளைவினால் எமது பிரதேசத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த இளம் பெண்கள், வீடு இழந்தவர்கள், சொத்துக்களை இழந்தவர்கள், பிள்ளைகளை இழந்தவர்கள் எனப் பலதரப்பட்டோர் வாழ்வாதார உதவிகளின்றி வறுமையில் வாடுவதை நாம் எல்லா இடங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகையோரின் வறுமையை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்வதற்காக வட்டுக்கோட்டையிலுள்ள இந்துவாலிபர் சங்கம் முன்மாதிரியாகச் செயற்படுவது பாராட்டுதலுக்குரியதாகும். சிறுதுளிகளே பெருவெள்ளமாவதை உணர்ந்த இந்தச் சங்கப் பிரதிநிதிகள், வெளிநாடுகளிலுள்ள தம் நண்பர் களிடம் சிறுசிறு தொகையாகப் பணம் சேர்த்து போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், புத்தகப்பைகள், காலணிகள், கற்றல் உபகரணங்களெனப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறார்கள். இதை விட எந்தவித வருமானமுமில்லாத ஏழைகளுக்கும் முடிந்தளவு பண உதவியும் செய்கிறார்கள்.

இவர்களைப் போல எமது பிரதேசத்தில் உள்ள ஏனைய வாலி பர் சங்கங்களும் செயற்பட ஏன் தயங்குகின்றன? இந்த மனிதப்பிறவியின் தலையாய நோக்கமே மனிதனுக்கு மனிதன் உதவி செய்தலேயாகும். இதைவிட இத்தகைய நற்செயல்களைச் செய்பவர்களின் மறுபிறவி மகிழ்ச் சிக்குரியதாக அமையும் என சைவசித்தாந்த நூல்களும் எடுத்துரைக்கின்றன.

இப்படிப் பல நன்மைகள் பெறுவதற்கும், ஏழை களுக்கும், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கொஞ்சம் உதவுவதற்குமாக எல்லா வாலிபர் சங்கங்களும் கவனமெடுப்பார்களா?

சி.காசிப்பிள்ளை,
அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BAJAJ RE THREE WHEELER

# சேமிக்கவே சிந்திப்பவர்களின் குடும்ப வாகனம் ....



உயர்வான, எரிபொருள் சிக்கனமான, சிறப்பான செயற்பாடு, குறைவான பராமரிப்புடன் பல விசேடம்சங்கள் மேம்படுத்தப்பட்ட பஜாஜ் ஆக அல்லவா இருக்க வேண்டும்....

## பஜாஜ் RE
## இக்காலத்து குடும்ப வாகனம்!

### என்ஜினின் விசேடம்சங்கள்
- ஸ்பார்க் பிளக் இரண்டுடனான, முழுமையான எரிபொருள் தகனத்தைக் கொண்ட சூழலுக்கு உகந்த என்ஜின்
- TPS (Throttle Position Sensor) உடனான டிஜிடல் இக்னீஷன்
- நவீனமயப்படுத்தப்பட்ட என்ஜினை குளிரூட்டும் தொகுதி
- மேம்படுத்தப்பட்ட என்ஜின் சிலிண்டர் பிலோக் மற்றும் பிஸ்டன்
- மேம்படுத்தப்பட்ட கிரங்கேஷ்

### உட்பக்க விசேடம்சங்கள்
- நவீனமயப்படுத்தப்பட்ட, அதிக இடவசதியுடைய சாரதி கூடத்தின் அடிப்பகுதி
- சீரான விண்ட்சீல்
- நிக்கல் பிரேமுடன் மேம்படுத்தப்பட்ட உட்பக்க கூடம்
- சீரான பக்கத்தோற்றம் மற்றும் சொகுசான ஆசனம்
- மேலதிக உபகரண தொகுதி

### உடலமைப்பின் விசேடம்சங்கள்
- அதிக பலமுடைய செசி
- மேம்படுத்தப்பட்ட செசி பம்பர்
- மேம்படுத்தப்பட்ட பலமான முகத்தோற்றம்
- நவீனமயப்படுத்தப்பட்ட திருப்பல் சமிக்ஞை விளக்குகள் மற்றும் பிற்பக்க விளக்குகள்
- மழை நீர் உட்புகாதவாறு மேம்படுத்தப்பட்ட கூரை
- பெரிதான பக்க கண்ணாடி

### இயந்திரங்களின் விசேடம்சங்கள்
- மேம்படுத்தப்பட்ட பிற்பக்கம் செலுத்தக்கூடிய கியர் தொழில்நுட்பம் (Reverse Gear)
- இரட்டை எரிபொருள் பில்டர்
- இலகு தொழிற்பாடுடைய கிலச்
- மேம்படுத்தப்பட்ட கியர் தொகுதி
- எரிபொருள் அளவு மீற்றர்
- மேம்படுத்தப்பட்ட என்ஜின் கவர் மற்றும் எரிபொருள் தாங்கி



சிறப்பான பலம்
சிறப்பான நீடித்த பாவனை
சிறப்பான சிக்கனம்
சிறப்பான பாதுகாப்பு
சிறப்பான சொகுசு

விலை ரூ. 610,000/- இவ்விலை முன்னறிவித்தலின்றி மாற்றமடையலாம். நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்கு அருகே உள்ள பிரதேச அலுவலகமொன்றினை நாடுங்கள்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடெட்
பதிவு இலக்கம்: PB270

75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. 011-4700600 011-4700677
info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

tradlanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச கட்டுப்பாட்டுப் பகுதியை சரமாரியாகத் தாக்கியது ஐ.எஸ்.

## சிரியாவில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பு

தமஸ்கு, பெப்.23
சிரியாவில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் ஐ.எஸ். அமைப்பினர் நேற்று முன்தினம் சரமாரியான தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களில் 122 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தனர் என உள்ளூர்ச் செய்தி மூலங்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பெறுப்பேற்றுள்ளது. இதனைத் தவிர தெற்கு தமஸ்குவில் கார்க் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு தமஸ்குவின் சயீதா சய்நப் பகுதியில் 3 குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 83 பேர் கொல்லப்பட்டதுடன், 178 பேர் காயமடைந்ததாக அங்கிருந்த தகவல்கள் வெளியாகின. ஹோம்ஸ் பகுதியில் இடம்பெற்ற 2 கார்க் குண்டுத் தாக்குதல்களில் 46 பேர் உயிரிழந்ததுடன், 100 பேருக்கு மேல் காயமடைந்ததாகச் சிரியாவில் உள்ள லண்டன் மனித உரிமைகள் அவதானிப்புக் குழுவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஹோம்ஸில் இடம்பெற்ற தாக்குதல் மிகவும் சக்தி வாய்ந்தது எனவும், அது மக்கள் நடமாட்டமுள்ள பஸ் தரிப்பிடத்தில் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் மாணவர்கள், அரச ஊழியர்களைக் குறிவைத்து நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் கட்டடங்கள், வாகனங்கள் என்பவை சேதமாகின. அனைத்துத் தாக்குதல்களுக்கும் ஐ.எஸ். அமைப்பு பெறுப்பேற்றுள்ளது. சிரியாவின் ஐ.நாவின் சிறப்பு தூதுவர் ஸ்டபான் டி மிஸ்டுறா, இந்தத் தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் இதனால் சிறுவர்கள் அனேகம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்துத் தாக்குதல்களுக்கும் ஐ.எஸ். அமைப்பு பெறுப்பேற்றுள்ளது. சிரிய அரசுக்கு எதிராகவே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(த-ரி4)

# இந்துக்கோவிலின் மீது பங்ளாதேஷில் தாக்குதல்

**இந்து மதகுரு ஒருவர் சாவு**

டாக்கா, பெப்.23
பங்களாதேஷில் இந்து மதகுரு ஒருவர் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சிறுபான்மையினரான இந்துக்கள் மீது பெரும்பான்மையினரான இஸ்லாமியர்கள் தாக்குதல் நடத்தினர் என அதிகாரிகள் தரப்பால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய அமைப்பான ஜமாடுல் முஜாகிதீன்தான் இந்தக் கொலைக்குக் காரணம் என பங்களாதேஷ் பொலிஸ் அதிகாரி மொனிறுல் இஸ்லாம் தெரிவித்தார்.

50 வயதான இந்து மதகுரு கோவில் வளாகத்தினுள் இருவரால் தாக்கப்பட்டார். மோட்டார்சைக்கிளில் வந்த இரு தாக்குதல்தாரிகள், கையெறி குண்டுகளை வீசியதுடன், கோவிலுக்குள் துப்பாக்கியால் சுட்டனர். இதன் பின்னர் மதகுருவின் தொண்டையைக் கிழித்துக் காயப்படுத்திவிட்டுச் சென்றனர் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இதன்போது கோவிலில் இருந்த பக்தர் ஒருவரும் தாக்கப்பட்டார். இதுவரை எந்தக் கைது நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனம்தெரியாதோரால் இடம்பெறும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையால் இந்துக் கோவில்களைச் சூழ பொலிஸார் காவல் காத்து வருகின்றனர்.

சமீபகாலமாக சிறுபான்மையின மதத்தினர் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் தாக்கப்பட்டார். அதே மாதத்தில் வட பங்ளாதேஷின் பொக்ராவில் அமைந்துள்ள பள்ளிவாசலும் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (த-ரி4)



# பாதுகாப்பையும் மீறி எரிமலையின் வாய் வரை சென்ற சாகச விரும்பிகள்



ஜகார்த்தா, பெப்.23
இந்தோனேசியாவில் புரோமோ எரிமலை கொந்தளிக்க ஆரம்பித்துள்ளது. ஜாவா பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த எரிமலைப் பிரதேசம் மக்கள் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சாகசப் பிரியரான கியோவ் வீ லூங் 7 ஆயிரத்து 641 அடி உயரமுள்ள இந்த எரிமலைக்கு தடைகளைக் கடந்து சாகசப் பயணம் செய்துள்ளார். அவரது நண்பரான சின் -கானனும் அவருடன் அவர் பயணித்ததுடன், கியோவின் துணிச்சலான செயலை படம் பிடித்துள்ளார்.

எரிமலைக்குச் செல்ல அணியும் உடைகள் அணியாமலும், எந்த வித பாதுகாப்பும் இன்றியும் இவர்கள் இந்தச் சாகச முயற்சியை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். சாதாரண கண்ணாடியுடன், பனிச் சறுக்குப் பலகையைப் பயன்படுத்தி எரிமலை வாய் வரையில் பயணித்துள்ளனர். இவர்கள் இதற்கு முன்னர் எரிமலைப் பிரதேசத்தில் நுழைய முயற்சித்த போது பாதுகாவலர்களால் தடுக்கப்பட்டு துரத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் அதீத ஆர்வத்தினால் உயிரைப் பணயம் வைத்து இதனை நிறைவேற்றியுள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி 2.5 மீற்றர் தொலைவுக்கு மக்கள் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று பல தினங்கள் தங்கியிருந்து தமது இயலுமையை வெளிப்படுத்தியுள்ளனர். நாம் மிகவும் மகிழ்ச்சியான சூழலை உணர்கிறோம். 100 கிரனைட்டுகள் வெடிக்கும் சத்தத்துடன் எரிமலை கொந்தளிக்கிறது. இந்தப் பயணம் ஆபத்தானதும், சவாலானதுமாகும். எரிமலை வாயிலின் அண்மையில் தோலை எரிக்கும் அளவில் வெப்பத்தை உணர்ந்தேன் [illegible] தெரிவித்தார். (த-ரி4)

# வன்முறையாக மாறியுள்ளது ஜாட் இனத்தவர் போராட்டம்

## வட இந்தியாவில் சம்பவம்

புதுடில்லி, பெப்.23
வட இந்தியாவில் ஹரியானா மா நிலத்தில் கடந்த ஏழு நாள்களாக ஜாட் இனமக்கள் தங்களுக்குச் சிறப்புப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கோரிப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்தப் போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறையில் இது வரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். 150 பேர் காயம் அடைந்துள்ளனர். வன்முறையைக் கட்டுப்படுத்த ஆயிரத்து 200 இராணுவப் படையினர் ஹரியானா மா நிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



தலைநகர் புதுடில்லியிலும் ஜாட் இனத்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது டில்லிக்கு நீர் விநியோகம் செய்யும் முனாக் கால்வாயையும் சேதப்படுத்தினர். அத்துடன் டில்லி - ஹரியானா நெடுஞ்சாலையை இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெற்றோல் நிலையங்களின் சேவைகளை முடக்[illegible] அங்கு விரைந்த இராணுவத்தினர் நிலமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களினால் 800 ரயில் சேவைகள் தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளன. பொது இடங்களில் நிறுத்திவைக்கப்பட்ட வாகனங்கள், அரச சொத்து கள் என்பவற்றுக்கு தீ வைக்கப்பட்டன. கடைகளும் தீக்கிரையாகின. ஜாட் இனப் பெண்களும் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிலையால் ஹரியானா மாநிலம் போர்க்களம்போல காட்சியளிக்கிறது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை ஜாட் சமூகத்தின் முக்கிய தலைவர்கள், மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.


(த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# "தெய்வப்புலவர் தந்த திருக்குறளை எண்ணி உய்வோம் வாரீர்"

மதுரகவி. காரை.
எம்.பி. அருளானந்தன்.



> திருக்குறள் மக்கட் சிந்தனையின் முதல் நூலாகவே திகழ்கிறது. அறிஞர்களால் புகழப்படுகின்றது, 1330 அழகிய குறள் வெண்பாக்களும் தம் பரந்த பொருளெல்லாம் பாரறிய ஒலித்து வரும் வள்ளுவரின் குரலொலி யாகும்.

தெய்வப் புலவராம் திருவள்ளுவரின் புகழ் வையகமெல்லாம் மாண்புறப் பரவி வளர்ந்து வருகின்றது. பகலவன் ஒளி போல் யாண்டும் அவர்யாத்த குறள் பற்றியே உரையாடப்படுகிறது. வள்ளுவர் வாய் மொழியை எடுத்தாளாத எழுத்தாளர்களோ, புலவர்களோ, பேச்சாளர்களோ, கவிஞர்களோ, அமைச்சர்களோ ஏன் அரசியல் வாதிகளோ இன்று இந்த நாட்டில் இல்லை யென்றே இறுமாந்துசொல்லலாம். இன்றென்ன? ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப் பட்டுள்ள எங்கள் தங்கம்நிகர் சங்க இலக்கியங்களிலெல்லாம் குறளும், குறட்கருத்துக்களும் நடமிடுவதை நாம் இன்றும் கண்கூடாகக் காணலாம்.

தெய்வப்புலவர் வள்ளுவரின் கருத்துச் செல்லாத இடமே இல்லை... அவர் சொல்லாதுவிட்ட பொருளே இல்லை. குறளில் இல்லாத எப்பொருளும் இல்லை. புலவர் பெருமகன் செய்த திருக்குறளின் பெருமையைப் பற்றி ஒரு மேல்நாட்டு அறிஞர் குறிப்பிடும் பொழுது.

"வெள்ளிப் பேழையுள் இட்ட தங்க ஆப்பிள்"

என்று போற்றியுள்ளார். திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நூலாகும். மக்கட்சிந்தனையின் மிக மேலானதும் தூய்மையானதுமான வரலாற்று ஆவணம் அது. திருவள்ளுவர் குலம், இன்பம், கொள்கை முதலியவற்றைக் கருதாது மனித இனம் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு திருக்குறளை இயற்றியுள்ளார். ஒப்புயர்வற்ற ஒழுக்க விழுமிய முறையையும், எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய நெறிகளையுமே வகுத்துள்ளார். இல்லற சமுதாய வாழ்வியல்களின் உயர்ந்த விதிகளை ஒரே தொகுதியாக வள்ளுவர் வகுத்துத் தந்துள்ளார்.

திருக்குறள் மக்கட்சிந்தனையின் முதல் நூலாகவே திகழ்கிறது. அது அறிஞர்களால் புகழப்படுகின்ற 1330 அழகிய குறள் வெண்பாக்களும், அவற்றின் பரந்த பொருளெல்லாம், பாரறிய ஒலித்து வரும் வள்ளுவரின் குரலொலி யாகும். வள்ளுவர் தன்னுடைய குறைந்த ஒலியால் உலகுக்கு நிறைந்த பொருளை நவின்றுள்ளார் என்று அவரது நூலின் நயமறிந்தோர் எக்காலத்திலும் வள்ளுவரின் குறளில் குறையைக்காண இயலாது. எனவேதான் நிறையைக் கண்டார்கள், காண்கிறார்கள்.

வள்ளுவரின் உள்ளத்தில் இருந்து எழுந்த அழகிய இந்தக் குறளொலிக்குப் பொருளுணர்ந்து அதன் மேன்மையை அவனிக்கறிவிக்க வந்த பெரியார்கள் பலர் அப்பெரியார்களுள் தலைசிறந்தவர் எனப் போற்றும் நிலையில் உள்ளவர் உரையாசிரியர் பரிமேலழகரே யாவார். திருவள்ளுவரின் திருவாக்கு " எண்ணித் துணிக கருமம் " என்பது. அதாவது செய்யத் தக்க எந்தச் செயலையும் நன்கு சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்த்து மேற்கொள்க என்பதாகும். எவ்வாறெனில் மாநிலத்தில் மனிதனாகப் பிறந்தவன் எங்ஙனம் வாழ்வது? அந்த வாழ்க்கைக்குள்ள துணையாவது எது? எவையெவை செயல் நெறிகள்? மனிதன் மேன்மையுடன் வாழவும், அந்த வாழ்க்கை வளம் பெறவும் வேண்டுவது யாது? என்று பலவற்றையும் பன்முறை எண்ணினார்.

எண்ணியதன் பயனாக, மனிதனின் வல்லமைக்கும் மேலான வல்லமை பெற்று, மனித வாழ்வுக்கும் மற்றைய உயிர்த்திரளுக்கும், உலக நிலைக்கும் உற்ற மாண் பளிக்கும் தகவுடையது எதுவுண்டோ, அதைத் தான் வணங்க வேண்டும். அதை வழிபடல் தான் வாழப் பிறந்த வனின் கடனாகும். பண் பாகும் என்றெல்லாம் பன்முறை எண்ணி தெளிவுற்ற பின்னர்தான்.

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று முதற்கண் வாழ்த்தினார். இதன் பொருள் எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோன்று உலகிலுள்ள உயிர்களெல்லாம் முதன்மையானவனாகிய பகலவனை முதலாகக் கொண்டவை என்பதாகும். இத்தகு பெருமைமிகு திருக்குறளை எல்லோரும் படித்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

செ. மகேஷ்

## மனவலிமையும் தமிழ்ப் பற்றுங் கொண்ட
# அமரர் மேரி திரேசா பசுபதி

வாழ்க்கையின் பொருள் உணர்ந்து வாழுங் காலத்தில் துணிவுடன் வாழ்ந்தார் என்பதற்கு அடையாளமாக வாழ்ந்தவர்களுள் மேரிதிரேசா பசுபதியின் வாழ்க்கையும் கவனத்திற் கொள்ளப் பட வேண்டிய தொன்றாகும்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த ஆசிரியயை யாகவும் பாடசாலை அதிபராகவும் கடமையாற்றி மாண வர்களினதும் சமூகத்தினதும் அன்பையும் ஆதரவையும் பெற்றவர். தமிழையும் கல்வியையும் தனது சேவைக் காலத்தில் உயர்வாக மதித்து அவற்றின் சிறப்புக்கள் வழி பணியாற்றியவர்.



அவர்தம் வாழ்வில் எதிர்கொண்ட இழப்புக்கக்களைப் பொறுமையோடு ஏற்று வேதனைகளை இறைபக்தியால் வென்றவர். அமைதியும் சாந்தமும் கொண்ட அவரது வாழ்வு அவரைச் சமூகத்தில் உயர்த்தி வைத்திருந்தன. 1990ஆம் வருடம் இவரது மூத்த புதல்வரான இரகுபதி, இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த ஒரேயொரு தமிழராக பயிற்சிகள் நிறைவேறிய நிலையில் எதிரபாராத விதமாக உயிரிழந்தார். தாயாரது வாழ்வில் ஏற்பட்ட பெரிய இழப்பு இது வாகும். அத னைச் சகித்து நடந்தாலும், தொடர்ந்த குமுதினிப் படகுப் படுகொலையிற் சிக்குண்டோர் பட்டியலில் கல்வியில் ஈடுபாடு கொண்டு பயணித்த இவரது அழகு மகளின் பெயரும் இடம் பெற்றபோது அதிர்ந்து போனார். தொடர்ந்த போராட்டச் சூழலில மகள் சகுந் தலா செல தாக்குதலால் காலமானார். மகனான ஜெயபதி மாவீரரானார். இத்தனை இழப்புக் களையும் தனதெனக் கண்டவர் அவற்றைத் தனது உளவலிமையால் ஏற்றுக்கொண்டு சமூகப் பணியில் ஆர்வத்தோடு செயற் பட்டவர். தமிழ்மொழியிலே பேசும் ஆற்றலும் எழுத்துத் துறையில் ஈடுபாடும் கொண்டிருந்தார். ஆங் கிலமொழி அறிவும் நிரம்பவே பெற்றிருந்தார். இவரது தமிழ் மொழி ஆக்கங்கள் பலவும் பத்திரிகைகளிலும் நூல்களிலும் பிரசுரமாகியிருந்தன. அவை பலராலும் பாராட்டப்பட்டன.

கல்விப் புலமும், தமிழர்தம் உரிமைப் போராட்டமும் சூழ்ந்திருந்த நிலையில் அவற்றின் வெற்றிக்காகத் தன்னை அர்ப்பணித்து இவர் ஆற்றிய பணிக்காய் வன்னிப் பிரதேசத்தில் விருதுகள் பலவற்றையும் பெற்றார்.

பேச்சாற்றலும், மொழித்தேர்ச்சியும், சேவை மனப்பாங்கும், அவர் வாழ்ந்த நெடுந்தீவு மல்லாவி போன்ற பிரதேசங்களில் இவரது சேவைத் தேவையை நாடி வாழ்ந்தோருக்குப் பேருதவியாக அமைந்தன. போர்ச்சூழல் அவரைச் சீர் குலைத்த போதும், தமது பிள்ளைகளின் உதவியோடு ஊர் போற்ற உதவி வாழ்ந்த இவரது பண்பு என்றும் நினைவில் நிற்கும். இவர் ஊரவர்களுடனும் உறவுகளுடனும் வாழ்ந்தாற்றிய சேவையுடன் பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக, ஆற்றிய கல்விப் பணியால் உயர்ந்திருக்கும் பலரது பாராட்டுக்கள் அவரைப் புகழோடு வாழ வைக்கும். இவரது கணவர் பசுபதி சிறந்த கிராம சேவையாளராகப் பணியாற்றியவர். இவரது பிள்ளைகளில் ஒருவர் அதிபராகவும் மற்றையவர் ஆசிரியராகவும் பணியாற்றுகின்றனர்.

வேதனைகளும் சோதனைகளும் ஆழவருத்தியபோதும் உன்னதமான வாழ்வுக்கு உயர்ந்து ஒளிவிளக்காய்த் திகழ்ந்தார். அன்னை திரேசாவின் மீது கொண்டிருந்த பற்றும் பக்தியும் மேரி திரேசாவின் வாழ்வுக்கும் உதவி நின்றதெனலாம். நீண்டதோர் பயணத்தை வெற்றியோடு நிறைவு செய்த மேரி திரேசா அவர்களின் வாழ்வு என்றும் சேவையின் மகிமையை உணர்த்தி ஒளிருமெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தேசிய ஜம்போறி






"செல்பி புள்ள"

ஜனாதிபதியுடன் செல்பி எடுத்துக் கொண்ட நேபாள சாரணியப் பெண் ஒருவர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வர்ணம் தீட்டுவோம்... வாங்க....





## வரலாற்றில் இன்றைய தினம்

1820 - பிரித்தானியாவில் அனைத்து கபினட் அமைச்சர்களையும் கொல்வதற்கான இரகசிய சதித் திட்டம் வெளிச்சத்துக்கு வந்தது.

1861 - மேரிலான்ட் பால்டிமோர் கொலைச் சதி முயற்சி மற்றும் குழப்பத்தின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் ஆபிரகாம் லிங்கன் இரகசியமாக வோஷிங்டனுக்கு வந்து சேர்ந்தார்.

1885 - சைனோ - பிரான்ஸ் போர், வியட்னம் ரோன்கின் பகுதியில் பிரான்ஸ் படைகள் முக்கிய வெற்றி ஒன்றை ஈட்டிக் கொண்டன.

1887 - பிரான்ஸின் றிவேறியா மிகப்பெரிய நில நடுக்கத்தை எதிர்கொண்டது. 2000 பேர் வரை சாவு.

1903 - குவான்ரனமோ குடாவை கியூபா. அமெரிக்காவுக்கு காலவரையறையற்ற குத்தகைக்கு வழங்கியது.

1905 - சிக்காகோ சட்டத்தரணி போல் ஹாரீஸ் மற்றும் வேறு மூன்று வர்த்தகர்கள் உலகின் முதலாவது சேவை அமைப்பான றோட்டரிக் கழகத்தை உருவாக்குவதற்காக மதிய போசனம் ஒன்றின்போது ஒன்று கூடினர்.

1917 - ரஷ்ய பீட்டர்ஸ் போர்க்கில் முதல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பெப்ரவரி புரட்சியின் தொடக்கம்.

1934 - மூன்றாம் லியோபோல்ட் பெல்ஜியத்தின் அரசரானார்.

1942 - இரண்டாம் உலக மகாயுத்தம். கலிபோர்னியா கரைக்கப்பால் சாந்த பார்பராவுக்கு அண்மையில் ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல்கள் ஆட்லறி ஷெல்களை வீசின.

1943 - அயர்லாந்து சென். யோசப் அநாதைகள் விடுதி தீப்பற்றியதில்34சிறுவர்கள் உட்பட 35 பேர் சாவு.

1945 - பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா. அமெரிக்க - பிலிப்பைன்ஸ் இணைந்த படைகளால் விடுவிக்கப்பட்டது.

1947 - உலக தர ஸ்தாபனம் ஐ.எஸ்.ஓ. தொடங்கப்பட்டது.

1974 - பயணக் கைதியாக்கப்பட்ட பற்றி ஹார்ஸ்ட்டை விடுவிக்க சிம்பயோனெஸ் புரட்சிப் படை மேலும் 4 மில்லியன் டொலர் கோரியது

## தற்புகழ்ச்சி கூடவே கூடாது

படை வீரர்கள் பலர் அரசரைச் சுற்றி இருந்தபடி விருந்துண்டபடியே பேசிக்கொண்டிருந்தார்கள். தெனாலிராமனும் அந்த விருந்தில் கலந்து கொண்டான்.

வீரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீரதீர பராக்கிரமச் செயல்கள் பற்றிக் கூறி மன்னரின் பாராட்டைப் பெற விரும்பினார்கள். படைத்தலைவன் வீரர்களை நோக்கி அவரவர் செய்த வீரச் செயலைப் பற்றி மன்னருக்குக் கூறுங்கள் என்றான்.


ஒரு வீரன் ஆரம்பித்தான். "நான் எதிரிகள் பலரிடம் அகப்பட்டுக் கொண்டேன். நான் ஒருவன். அவர்கள் ஆறுபேர். என்னைச் சூழ்ந்துவிட்டார்கள். தாமதம் செய்யாமல் வாளை எடுத்து வீசினேன். சக்கரமாகச் சுழன்று ஆறுபேரையும் கொன்று விட்டுத் திரும்பினேன்" என்றான்.

மற்றொருவன் "எதிரிகளின் குதிரைப் படைக்குள்ளே புகுந்து பத்துக் குதிரைகளையும் எதிரிகளையும் ஒரே மூச்சில் சின்னாபின்னப் படுத்திவிட்டு வந்தேன்" என்றான்.

இன்னொருவன் "நான் எதிரிகளின் யானைப் படைக்குள் புகுந்து நாட்டு வெடி குண்டை வீசி பட்டத்து யானையைக் கொன்றுவிட்டு வந்தேன்" என்றான்.

அரசர் அவற்றையெல்லாம் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். தெனாலிராமனுக்கு அவர்களது தற்புகழ்ச்சி எரிச்சலை உண்டு பண்ணிற்று.

"இதெல்லாம் பெரிய வீரமல்ல. என் அனுபவத்தைக் கேளுங்கள்" என்று தெனாலிராமன் கூறியதும் அரசர் ஆச்சரியத்துடன் "நீ எப்போது போர்க்களத்துக்குப் போனாய்?" என்றார்.



உடனே படைத் தளபதி "வீரர்களுக்குச் சமையல் காரனாகப் போயிருப்பார்" என்றான். எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தனர். தெனாலிராமன் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நான் எதிரிகளின் பலத்தை அறிய ஒற்றனாக எதிரிகளின் முகாமுக்குள் சென்றதோடு சாமர்த்தியமாக படைத் தலைவனது காலை வெட்டி வந்து விட்டேன் என்றான்.

"அவ்வளவு துணிச்சலாக எதிரியின் முகாமுக்குள் சென்ற நீ, படைத் தலைவனின் தலையை வெட்டாமல் காலை ஏன் வெட்டிக் கொண்டு வந்தாய்" என்றார் அரசர்.

எல்லோரும் தெனாலிராமனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள். தெனா லிராமனோ அவர்களை விடச் சத்தமாகச் சிரித்தபடி

"நான் ஏன் எதிரிகளின் படைத் தலைவனது காலை வெட்டினேன் தெரியுமா?" என்றான்.

எல்லோரும் ஆவலுடன் அவனைப் பார்த்தார்கள். "ஏற்கனவே படைத்தலைவன் தலையை வேறு எவரோ வெட்டிக் கொண்டு சென்றிருந்தார்கள்" என்றான்.

அரசர் சிரித்தார்; வீரர்கள் வெட்கத்தால் தலை குனிந்தனர். வீரர்கள் விடைபெற்றுச் சென்றதும் தெனாலிராமனிடம் "ஏன் இப்படி ஒரு பொய்க்கதை கூறினாய்" என்றார் அரசர்.

"சுத்தமான வீரர்கள் தங்கள் திறமையை வெளியே கூறமாட்டார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ளும் தலைக் கனம் பிடித்தவர்கள். அவர்களை மட்டம் தட்டவே இந்தக் கதை" என்றான்



## நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம்பானை -அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா

உள்ளே புகுந்து நெல் தின்று தின்று - வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா
மெள்ள வெளியில் வருவதற்கும் - ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா

பானையைக் காலை திறந்தவுடன் - அந்த
பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியைக் கண்டதடா - ஓடிப்
போய் அதைக் கௌவியே சென்றதடா

கள்ள வழியினிற் செல்பவரை - எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ள படியே நடப்பவர்க்குத் - தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா

## தெரிந்து கொள்வோம்

1. இந்தியாவில் கனிவளம் மிக்க மாநிலம் - பீகார் மாநிலம்
2. அந்தமான், நிக்கோபார் தீவுகளின் தலைநகர் - போர்ட் பிளேயர்
3. இந்தியாவின் மிகப் பெரிய (மியூசியம்) தொல்பொருள் காட்சிச்சாலை இருப்பது - கல்கத்தாவில்
4. பாகிஸ்தானின் பிரதான துறைமுகம் - கராச்சி
5. ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களில் 'நைட்' பட்டம் பெற்றவர் - டொன் பிரட்மன்
6. உலகின் தங்க உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடு - தென் ஆபிரிக்கா
7. தாய்லாந்தின் முன்னைய பெயர் - சயாம்
8. இறக்கை இருந்தும் பறக்க முடியாத ஆபிரிக்கப் பறவை - நெருப்புக் கோழி
9. தரையில் மிக வேகமாக ஓடக் கூடிய பிராணி -சிறுத்தைப் புலி (மணிக்கு 70 மைல் வேகம்)
10. உலகிலேயே கொடிய விசம் கொண்ட பூச்சி - கறுப்பு விதவைச் சிலந்தி (தென் அமெரிக்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணிகள் மக்களுக்கே உரியவை

தமிழ் மக்களின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த நிலங்களைக் கையகப்படுத்தும் இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இராணுவரீதியாக தன்னைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் மூலமாகத் தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பில் வைத்து ஒடுக்குவதே இதன் நோக்கமாகும். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தமிழர்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவத்தை நிலைநிறுத்தலில் எந்த மாற்றமும் இல்லை என்பதே இதன் ஊடாக வெளிப்படுகின்றது.

இலங்கையின் தற்போதைய அரசு பதவியேற்று ஒரு வருடத்தைக் கடந்துள்ளபோதிலும், சுமார் 1,700 வரையான ஏக்கர் காணிகள் மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னமும் வலி. வடக்கில் மாத்திரம் சுமார் நாலாயிரம் ஏக்கர் காணிகள் அரச படையினர் வசமுள்ளன. இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் எங்களை எங்களுடைய சொந்த நிலங்களில் சித்திரைப் புது வருடத்துக்கு முன்பாக மீள்குடியேற்றுங்கள். இல்லையேல் சொந்த நிலங்களுக்குள் கடல் வழியாகவும், தரை வழியாகவும் உள்நுழைவோம். படையினரின் துப்பாக்கிச்சூட்டையும் வாங்கிக்கொள்ள நாங்கள் தயார் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

வடக்கு காணி விவகாரம் தொடர்பில் அண்மையில் கருத்துத் தெரிவித்த இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கில் வெறும் 4600 ஏக்கர் காணிகளை மாத்திரமே படையினர் ஆக்கிரமித்திருப்பதாகக் கூறினார். ஆனால், வடக்கில் அரச மற்றும் தனியார் காணிகள் 65ஆயிரம் ஏக்கரை இராணுவத்தினர் அபகரித்து வைத்துள்ளனர் என்ற அதிர்ச்சிகரமான புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கில் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக, அவர்களை நிலமற்றவர்களாக்கி ஓர் அபிவிருத்தியை இலங்கை அரசு முன்னெடுக்கத் தேவையில்லை. வலி. வடக்கு அகதிகள் தங்கியுள்ள அகதிமுகாம் ஒன்றுக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால, இப்படி ஒரு முகாம் இருப்பதை அன்றுதான் தாம் அறிந்ததாகக் கூறினார். அந்த மக்களுக்கு ஆறுமாதத்தில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாக அந்த மக்களிடமும் சர்வதேச ஊடகங்களுக்கும் வாக்குறுதி அளித்திருந்தார். ஜனாதிபதி வழங்கியுள்ள இந்த உத்தரவாதத்தை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது.

காரணம், இராணுவம் தனது திட்டமிட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இராணுவம் ஆட்சித் தரப்புடன் இணைந்து




போவதாகத் தெரியவில்லை. இவர்கள் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பார்கள் எனக் கருதமுடியவில்லை. போதாக்குறைக்கு இந்திய அரசின் நிதியுதவியு டன் பலாலி விமான நிலையத்தைப் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். குறித்த விமான நிலையத்தின். புனரமைப்பின் போது நிலத்தின் அளவானது விரிவாக்கப்படும். அவ்வாறு விரிவாக்கப்பட்டால் பொதுமக்களின் நிலங்களை அபகரிக்கும் நிலை உருவாகும். இதனால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும் என முதலமைச்சர் தெரிவித்திருப்பது கருத்தில்கொள்ளப்பட வேண்டியதே.



# தோல்விகள் வெற்றிக்கான படிக்கற்கள்

சி.நற்குணலிங்கம், நெல்லியடி

உலகத்தில் உள்ள வெற்றிகள் அனைத்தும் ஏதோ ஒரு தோல்வியில் இருந்து தான் தோன்றியிருக்கும். எம்மில் பலரும் ஒப்புக் கொள்ளும் விடயம் இது. தோல்விகள் ஒரு தற்காலிக சரிவுகளே. இதை ஒரு முடிவாகப் பார்த்தால் அதில் இருந்து எதுவுமே கிடைக்கப் போவதில்லை. என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று யோசித்துக் கொண்டிருப்பதைவிட, முயற்சித்துப்பார், கிடைத்தால் வெற்றி. இல்லையேல் அனுபவம். இரண்டுமே எமக்குத் தேவைதானே? சாதனை படைக்கப் பிறந்தவர்கள் சாதகம் பார்ப்பதில்லை. முயற்சியைத்தான் பார்க்க வேண்டும். முயற்சி நிறுத்தப்பட்டால் தோல்வி. தொடரப்பட்டால் வெற்றி. தோல்விகள் எமக்கான பாடங்கள். தோல்விகள் வெற்றிக்கு முன்னைய இடைநிலையே. மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.

தோல்வி வாழ்வின் உண்மைகளைப் பற்றிய உப யோகமான அறிவைத் தருகிறது. தோல்வி புதியவாய்ப்புக்களின் கதவுகளைத் திறக்கிறது. தோல்விக்குள்ளும் வெற்றி என்பது சிறுவிதைபோல் இருக்கும். அதை நாம்தான் வளர்த்தெடுக்க வேண்டும். வளர்த் தெடுக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்ததே. வாழ்வில் நீங்கள் எதிர்கொண்ட தோல்விகளை எண்ணிப் பாருங்கள். அவற்றைத் தகர்க்க மேற்கொண்ட வழிகள், அவை மூலம் பெற்ற வெற்றி எப்படி என்பதை உணர்ந்து கொள்வதன் மூலம் தோல்வியை விடுத்து தொடர் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

> **மற்றொருவருடைய வெற்றியிலிருந்தோ அல்லது தோல்வியிலிருந்தோ உங்களுக்கு தேவையானதை கற்றுக் கொள்ள வேண்டும்.**

தோல்வியை நேர்மறையான மனோபாவத்துடன் எடுத்துக்கொண்டால் அதை வெற்றிக்கான வழியாக மாற்றலாம். எதிர்மறையாகவே சிந்தித்தால் மென்மேலும் தோல்வியையே சந்திக்க நேரிடும். வாழ்க்கையில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். தோல்வி அடையும் வேளைகளில் நாம் எப்போதும் தோல்வியையே சந்திக்கின்றோம் என எண்ணி அடுத்த கட்ட முயற்சியைக் கைவிட்டு விடக்கூடாது. மருத்துவர் அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தனது மனைவியின் காதைக் கேட்க வைக்க ஒரு கருவியைக் கண்டுபிடிப்பதில் தோல்வி அடைந்தாலும், இறுதியில் தொலைபேசியைக் கண்டுபிடித்தார். வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமல்ல. அதைப் புரிந்து கொண்டு வெற்றிகாண தேடலைத் தொடங்க வேண்டும். தோல்வியைக் கண்டு துவண்டுவிடக்கூடாது. இதற்கு எடுத்துக்காட்டாக தோமஸ் அல்வா எடிசன், சேர்.ஐசாக் நியூட்டன், அமெரிக்க ஜனாதிபதிஆபிரகாம் லிங்கன் ஆகியோர் விளங்கினர். ஒருவரது வெற்றியைப் பார்த்து பொறாமை கொள்ளாது அவரது வெற்றியில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் இதன் மூலம் அவர் பெற்ற வெற்றி ஒரு நாள் உங்கள் பக்கமும் திரும்பும். அனுபவம் இல்லாமல் திடீர் என ஒரு செயலில் இறங்கினால் தேல்விதான் கிட்டும். உங்களை நீங்கள் உயர்வாக மதியுங்கள். ஒவ்வொரு செயலையும் செய்யும்போது கற்றுக்கொண்ட பாடங்களை நினைவில் நிறுத்தி அர்ப்பணிப்புடனும் தெளிவான குறிக்கோளுடனும் தன்நம்பிக்கையுடனும் செயற்பட்டால் தோல்விகள் தூரத் தள்ளிப்போகும்.

தோல்விகள் புதிய வாழ்வை உருவாக்கித் தரும். புதிய அனுபவங்களைச் சொல்லித் தரும். மற்றொருவரது வெற்றியிலிருந்தோ அல்லது தோல்வியிலிருந்தோ உங்களுக்குத் தேவையானதை கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் வாழ்க்கை இருக்கிறது என்பதை மறக்காதே. நீ இன்னும் வெற்றியைக் காணவில்லையா? நீ தோல்விகளை மட்டும் தான் சந்தித்திருந்தால் அதை வெறும் அனுபவ பாடமாக மட்டுமே ஏற்கும் மனோபாவத்தை வளர்த்துக்கொள். எதையும் கையாளும் விதம்தான் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணம். தோல்வியை எண்ணிக் கொண்டிருப்பின் வாழ்க்கை வெறுமையாகிவிடும். தோல்விகளை தொடர் தோல்விகள் ஆக்காதீர்கள். அதனால் மனநலம் பாதிக்கப்படும். இது இறுதியில் சிலரைத் தற்கொலைக்கும் அழைத்துச் செல்லும். எனவே தோல்வியை அவதானமாக முகாமை செய்யுங்கள்.

தோல்வியை தழுவுபவர்களில் பெரும்பாலானவர்கள் நான்கு குணாதிசயங்களைக் கொண்டிருப்பர். தோல்விகள் எமக்கான பாடங்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ளாமை, வெற்றி வரும்வரை காத்திருக்காது தற்காலிக தோல்விகளிலிருந்து பின்வாங்குதல், எடுத்துக்கொண்ட விடயத்தில் ஈடுபாடும் தொடர் முயற்சியும் பின்பற்றப்படாமை, வெற்றி பெற வேண்டும் என்ற முயற்சி குறைவாக இருத்தல், என்பவற்றை வெற்றியாளர்கள் பெரிதும் கவனத்தில் எடுத்து கொள்வதில்லை தோமஸ் அல்வா எடிசன் ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலும் முயற்சி செய்யாமல் இருப்பது எமது பலவீனம். இன்னொரு முறை முயற்சி செய்து பார்ப்போம் எனும் எண்ணம்தான் வெற்றிக்கு வழிவகுக்கும் எனக் கூறியுள்ளதில் இருந்து முயற்சி திருவினையாக்கும் என்பதை வலியுறுத்தியுள்ளார். தளராத இதயத்தைப் பெற்றவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்பது எதுவுமில்லை என்கிறார் கிறேஸில் எனும் அறிஞர். வெற்றிகள் யாவும் ஒரு ஊக்கத்தின் அடிப்படையில் தான் ஆரம்பிக்கின்றன என்கிறார் ஆண்ட்டுகார்னகி. ஊக்கத்தைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு என்கிறார் அறிஞர் அண்ணா. உங்கள் சொந்த விதியைப் படைப்பவர்கள் நீங்கள்தான் என்பதை எப்போதும் மறவாதீர்கள். உங்கள் எதிர்காலத்தை நீங்களே உண்டாக்கிக் கொள்ளுங்கள் என்கிறார் சுவாமி விவேகானந்தர். இவர்களது கூற்று தோல்வியை விரட்டுதாக உள்ளது.

# மன்னிப்பே மகத்தான மனமாற்றம்

தவக்காலம் என்பது வெறுமனே வருடாவருடம் வந்து போகும் சடங்குகளோ அல்லது சம்பிரதாயங்களோ அல்லது வாடிக்கையான ஒன்றோ அல்ல. அது புனிதமான மனமாற்றத்தின் காலம்.

தவக்காலம் என்று சொன்னவுடன் மனதில் தோன்றும் முதல் எண்ணம் சிலுவைப் பாதை, ஒறுத்தல், மாமிசத் தவிர்ப்பு என்று பல துன்பமான கஷ்டகாலம் என்று எண்ணுபவர்கள் இன்று எம்மிடையே உள்ளனர் என்பதை எம்மால் மறுக்க முடியாது. காலங்களில் சிறந்தது வசந்தகாலம். வழிபாட்டுக் காலத்தில் சிறந்தது தவக்காலம். இதை உணர்ந்து செயற்படுபவர்களே இதற்கு சாட்சிகள்.

பரபரப்பும் அவசரமும் நிறைந்த இந்த நவீன உலகிலே, மனிதர்கள் மனதைத் தொலைத்து நிம்மதி இன்றி, தலை கீழாக வாழ்விலே பயணிக்கிறார்கள். இதற்குக் காரணம் மனநிலைதான். எமது மனநிலை மாசற்றது, சீராகவும் நேர்மை என்னும் பாதையில் நேராகவும் பயணிக்கும்போது எமது வாழ்வு வண்ணத்துப்பூச்சிகளின் வசந்தகாலம்போல் இருக்கும். எமது மனதை நல்வழியிலே மாற்றவே இந்தத் தவக்காலம் மனமாற்ற காலமாகக் கொள்ளப்படுகிறது. இக்காலத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு நற்காரியங்களும் எமது மனசாட்சியை வலுப்படுத்தி, சீர்படுத்தி, உறுதிப்படுத்தும். அதற்காக நாம் பகிர்ந்து வாழும்போது எம்மைப் போன்று ஒருவன் என் அருகில் இருக்கின்றான் என்ற உணர்வு கொள்வோம், பிறரை அன்பு செய்யும் போது எனக்காக ஒருவன் இருக்கின்றான் என்ற உணர்வும் நாம் விட்டுக்கொடுக்கும் போது என்னால் ஒருவன் இருக்கின்றான் என்ற உணர்வும் மேலெழுகின்றன.




குருமட மாணவன் அ.அனுசன்,
திருவுளச்சபை, கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 6 | | | | |
| | 3 | | | | | 7 | 8 | |
| | 4 | 8 | | 2 | | | 6 | |
| 2 | | | 8 | 1 | | | 7 | |
| 5 | 9 | | | | | | | |
| 8 | | | 5 | | | 9 | | 1 |
| | | | 9 | | | | | |
| 4 | 5 | | | | | 6 | | |
| | | | | | | 4 | | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 6 | 5 | 9 | 3 | 2 | 7 | 4 |
| 5 | 3 | 9 | 7 | 4 | 2 | 1 | 8 | 6 |
| 2 | 4 | 7 | 1 | 6 | 8 | 9 | 3 | 5 |
| 6 | 1 | 8 | 3 | 2 | 4 | 5 | 9 | 7 |
| 9 | 2 | 4 | 8 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 7 | 5 | 3 | 9 | 1 | 6 | 4 | 2 | 8 |
| 4 | 7 | 5 | 2 | 8 | 9 | 6 | 1 | 3 |
| 3 | 9 | 1 | 6 | 5 | 7 | 8 | 4 | 2 |
| 8 | 6 | 2 | 4 | 3 | 1 | 7 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# சூர்யாவின் 24

சூர்யா மூன்று வேடங்களில் நடிக்கும், 24– படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிவடைந்து விட்டது. படத்தொகுப்புச் செய்த நேரத்தில் இன்னும் சில நாள்கள் படப்பிடிப்பு நடத்தவேண்டிய தேவை ஏற்பட்டதாம். அதனால் கடந்த சில நாள்களாக அந்தப் படத்தின் படப்பிடிப்பு நடந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.
இந்தப்படம் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும். படத்தின் பெயர் 24 என்பதால் 24 ஆம் திகதியே முன்னோட்டம் வெளியிடப்படவுள்ளது.










படித்ததில் பிடித்தது

WhatsApp

ஒரு இளைஞன் முதுமையடைந்த தனது தாயைச் சுமந்து கொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். தாய், மகன் இருவருமே எதுவும் பேச வில்லை!
ஆனால், சிறிது நேரத்தில் தனது தோளில் இருந்த தாயார். ஏதோ ஒரு வித மணம் கொண்ட 3 மரங்களின் சின்னச் சின்னக் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருவதை மகன் உணர்ந்தான். உடனே, அம்மா, ஏதோ ஒரு மாதிரியான மரத்தின் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருகிறீர்களே! ஏன்? என்று கேட்டான்.
அதற்கு தாயார், மகனே, நீ என்னை மலை மீது விட்டுவிட்டு வீடு திரும்பும் போது வழி தெரியாமல்திண்டாடக் கூடாதல்லவா?
இங்கே போடப்பட்டுள்ள கிளைகளைக் கவனித்து நடந்தால், வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய்ச் சேரலாம். அதற்காகவே கிளைகளை அடையாளமாகப் போடுகிறேன் என்றாள்.
வயதாகிவிட்ட தன்னைத் தவிக்க விட்டுச் சென்றாலும், மகன் பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டும் என்று நினைக்கும் பாசமிகுந்த இந்தத் தாயா பயனற்றவர் என்று உள் மனம் கேட்க, அவன் தனது தாயை மீண்டும் தனது வீட்டுக்கே கொண்டு வந்து பாசத்துடன் பராமரிக்கலானான்.

மழைச்சாரல் @jeemeh1831 · 49m
நம்பவே முடியாத விடயங்கள் அது நன்மையோ... தீமையோ... வாழ்வில் நடக்கும் போதுதான்... நம்பவே முடிவதில்லை...!

ACHCHJU ღ THURKA @achchju · 16m
பெரும்பாலான வீட்டில் ஆண் பிள்ளையின் விருப்பத்தை விட பெண் பிள்ளையின் விருப்பம் தான் தந்தைமாரின் விருப்பமாக அமைகிறது.








**மேடம்:** நண்பர்களிடம் அதிருப்தி உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனப் பயணத்தில் நிதானம் வேண்டும்.


**இடபம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை உருவாகலாம். வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்குத் திண்டாட நேரிடலாம்.


**மிதுனம்:** எதிர்பாராத வகையில் முயற்சி வெற்றி பெறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெற்றோரின் அன்பும், ஆசியும் மகிழ்ச்சியளிக்கும்.


**கடகம்:** சிலர் உங்களைப் பரிகாசம் செய்யலாம். எதிரியிடம் விலகுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும்.


**சிங்கம்:** திறமையுடன் செயற்பட்டு நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவுடன் முன்னேறுவர். சுப விடயம் குறித்த பேச்சில் நல்ல முடிவு கிடைக்கும்.


**கன்னி:** பகைவரிடம் விலகுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். உணவு விடயத்தில் கவனம் தேவை.


**துலாம்:** கடந்த கால இனிய நினைவுகளில் மகிழ்வீர்கள். உழைப்பின் பலம் [illegible] தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் அதிகரிக்கும். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.


**விருச்சிகம்:** பெரியவர்களின் வழிகாட்டுதல் நன்மையளிக்கும். புதிய முயற்சி வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தித் தரும். ஆன்மிகச் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு.



**தனுசு:** உங்கள் செயல்களில் மற்றவர்கள் குறை காண்பர். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.


**மகரம்:** பொது இடங்களில் நிதானத்தைப் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிடலாம். இலாபம் சுமார். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.


**கும்பம்:** உறவினருக்கு உதவுவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். கடனில் பெரும்பகுதி அடைபடும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.


**மீனம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆண்களுக்கானது

ஆண்களுக்கான பெல்ட் அறிமுகமாகியுள்ளது. இவை நெடுநாள் பாவனையுடன் தரமான தோலில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விலை 400 - 600 ரூபா ஆகும். அத்துடன் கைகளுக்கணியும் அலங்கார பாண்ட்டும் அறிமுகமாகியுள்ளது. இதன் விலை 100 இலிருந்து150 ரூபா ஆகும்.

## இட்லி மிருதுவாக இருக்க



மல்லிப்பூ போன்ற இட்லி வேண்டுமானால், உளுந்தை அதிகமாகத்தான் போட வேண்டும் என்ற அவசியமில்லை.

இட்லிக்கு உளுந்தைக் குறைத்து, கெட்டியாக அரைத்து வேக வைக்கும்போது சிறிது நல்லெண்ணெய் விட்டுக் கொண்டால், இட்லி மிருதுவாகக் காணப்படும்.

இட்லி செய்யும் போது வாசனை தூக்கலாக காணப்பட வேண்டுமானால், இட்லியை குக்கரில் வேகவிடும் போது தண்ணீரில் எலுமிச்சம் பழத் தோல் இவற்றைப் போட்டால் இட்லி வாசனையாக இருக்கும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 50 | 30 | 40 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 70 | 60 | 80 | 50 | 60 | 70 | 30 |
| கரட் | 150 | 240 | 200 | 180 | 120 | 240 | 130 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 100 | 120 | 70 | 80 |
| பாகல் | 80 | 80 | 80 | 100 | 100 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 60 | 50 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 90 | 40–60 | 80 | 60 | 80 | 70 | 70 |
| பூசணி | 80 | 60 | 60 | 60 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 | 40 | 40 | 50 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 60 | 60 | 45 | 40 |
| கீரை | 30 | 30 | 30 | 10 | 20 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 150 | 100–150 | 120 | 100 | 300 | 110 | 200 |
| புடோல் | 60 | 80 | 70 | 60 | 40 | 80 | 40 | 60 |
| கோவா | 60 | 80 | 60 | 80 | 60 | 120 | 50 | 60 |
| வெண்டி | 100 | 100 | 60 | 80 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 100 | 60 | 80 | 60 | 100 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 80 | 140 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 45 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 80 | 60 | 60 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 160 | 120 | 120 | 140 | 120 | 120 | 200 |
| இராசவள்ளி | 150 | 110 | 160 | 100 | 120 | 160 | 100 | 75 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 | 350 | 400 | 300 | 400 | 500 |
| பனங்கிழங்கு | 05 | 02.70 | 04 | 02 | 07 | – | 02.50 | 02 |



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 600 | 700 | 800 | 400 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 400 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 400 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 600 | 600 | – |
| சீலா | 250 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 500 | 400 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 500 | 300 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 450 | 200 | 350 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | 400 | – |
| ஒரா | 300 | 350 | – | – | 450 | 300 | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 100 | 350 |
| நகரை | 150 | 300 | – | 250 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 200 | 200 | 200 | 100 |
| ஒட்டி | 250 | 250 | 150 | 200 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 100 | 250 | 180 | 300 | 300 | 200 | 300 |
| கொய் | 80 | 100 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 300 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 200 | 250 |

## புளியோதரை



### தேவையானவை:

அரிசி ஒரு சுண்டு
சிவப்பு மிளகாய் - 4
உப்பு - தேவையான அளவு
புளி - நெல்லிக்காய் அளவு
மஞ்சள் பொடி - 2 சிட்டிகை
நெல்லெண்ணெய், கடுகு - தாளிக்க
உ. பருப்பு, க. பருப்பு - தலா ஒரு தேக்கரண்டி
வேர்க்கடலை - 3 தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிது

### செய்யும் முறை:


- சாதத்தை உதிரியாக வடித்து எடுத்துக் கொள்ளவும்.
- சிவப்பு மிளகாய், உப்பு, புளி, மஞ்சள் பொடி இவை அனைத்தையும் விழுதாக அரைத்துக் கொள்ளவும்.
- இந்த விழுதை சாதத்தில் போட்டு கலந்து ஒரு 10 நிமிடம் ஊற விடவும்.
- பிறகு சட்டியில் நல்லெண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, வேர்க்கடலை, கருவேப்பிலை என்பவற்றைத் தாளித்து சாதத்தில் கொட்டி நன்றாகக் கிளறி மூடி வைத்துவிடலாம். அவ்வளவுதான் புளியோதரை ரெடி.

### நாளை

மாசி-12
புதன்கிழமை 24.02.2016
திதி: துதியை பி.இ.03.24 வரை
நட்சத்திரம்: பூரம் மு.ப.09.46
ராகுகாலம்: 12.30-02.00 வரை
சுபநேரம்: 05.00-06.30 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## திரைகள் இன்றி விம்பங்கள்

சிறிய புறொஜெக்டர்களின் ஊடாக பெரிய திரைகளில் விம்பங்களை உருவாக்கும் தொழில்நுட்பம் தற்போது பல்வேறு துறைகளிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

அவ்வாறிருக்கையில், திரைகள் இன்றி காற்றிலேயே விம்பங்களை உருவாக்கக்கூடிய தொழில்நுட்பத்தை மிட்சுபிஸி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

ஏரியல் டிஸ்பிளே எனப்படும் இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக 142 சென்ரிமீற்றர்கள் வரையான விம்பங்கள் உருவாக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டுள்ளன. நிழற்படங்கள் மட்டுமின்றி, காணொலிக் காட்சிகளின் விம்பங்களையும் காற்றில் உருவாக்கக்கூடிய இந்தத் தொழில்நுட்பம் மேலும் மேம்படுத்தப்பட்டு வரும் நிலையில் 2020ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்பம் செயற்படும் விதத்தை விளக்கும் படம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.




## செவ்வாயின் புதிய காணொலி

செவ்வாய்க் கிரகம் தொடர்பான ஆய்வில் முழு மூச்சில் செயற்பட்டுவரும் நாசா விண்வெளி ஆய்வு மையம் புதிய காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது.

தற்போது செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொண்டுவரும் கியூரியோசிட்டி ரோவர் விண்கலம் மூலம் 360 டிகிரியில் எடுக்கப்பட்ட இந்த வீடியோ காட்சியானது, செவ்வாய்க் கிரகத்திற்கு பயணிக்க விரும்புபவர்களுக்கு அங்கிருப்பது போன்ற அனுபவத்தை வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை 96 மைல்கள் தூரத்தை உள்ளடக்கி வீடியோ பதிவு செய்து அனுப்பியுள்ள ரோவர் விண்கலம் தற்போது விஞ்ஞானிகளால் நமிப் டுனே என அழைக்கப்படும் 13 தொடக்கம் 17 மீற்றர் வரை உயரமான இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



## விண்வெளிக்கு ரோபோ

விண்வெளி ஆராய்ச்சியில் முதன் முறையாக விண்கலத்தை அனுப்பும் புதிய புரட்சியை மேற்கொண்டிருந்தது ரஷ்யா.

தற்போது இந்த நாடு மற்றுமொரு விண்வெளிப் புரட்சியை நடத்துவதற்கு முழு வேகத்தில் தயாராகி வருகின்றது.

இதுவரை காலமும், ஆராய்ச்சிகளுக்காக விண்வெளி ஓடங்களில் நாய், குரங்கு, எலி என்பனவும், மனிதர்களும் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இவற்றில் மனிதர்களைக் கொண்டு மேற் கொள்ளப்படும் ஆய்வுகளில் இருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக எதிர்காலத்தில் மனித உருக்களைக் கொண்ட ரோபோக்களை அனுப்ப ரஷ்யா முனைப்புக் காட்டி வருகின்றது.

இந்த ரோபோக்களை விண்ணில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி, பின்னர் அங்கிருந்து தேவைகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# றியல் ஈ ஹேர் ஒயில்

> தலைமுடிநுனி உடைதல், தலைமுடி வெடிப்பு, தலைமுடி நிறமாற்றம் இவற்றையும் படிப்படியாக நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு சிறந்த கலவை தான் "றியல் ஈ ஹேர் ஒயில்". இன்றைய நாள்களில் பெண்களுக்குரிய தனி அழகை மெருகூட்டுவது அவளது கூந்தல்தான்.

கோதுமை விதை எண்ணெய், சன்ஸ்கிரீன், விட்டமின் O, சிலிகோன் கண்டிசனர் ஆகிய மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிறந்த ஒரு எண்ணெய் 'றியல் ஈ ஹேர் ஒயில்' ஆகும். தலைமுடியின் அடி முதல் நுனிவரை வழங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவசியமான கேசப் பராமரிப்பு பொருள்களின் கலவை இதுவாகும். ஸ்கால்ப் மஸாஜ் முறையில் தலையில் தடவி விரல்களால் 5-10 நிமிடங்கள் 'மஸாஜ்' செய்து வர தலைமுடியின் வேர்களுக்கு நல்ல போசாக்குக் கிடைக்கும்.

நாம் எப்போதும் தலைமுடிகளுக்கு மட்டுமன்றி, முடிவேர்களுக்கும் முடியின் நுனிகளுக்கும் எண்ணெய் தேய்த்து 'மஸாஜ்' செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். இப்படியான சரியான முறைகளை நாம் கையாள்வதனால், சிறந்த பிரதிபலனை எளிதில் பெற்றுக் கொள்ளலாம்.

அத்தோடு தலைமுடிநுனி உடைதல், தலைமுடி வெடிப்பு, தலைமுடி நிறமாற்றம் இவற்றையும் படிப்படியாக நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு சிறந்த கலவை தான் 'றியல் ஈ ஹேர் ஒயில்'.

இன்றைய நாள்களில் பெண்களுக்குரிய தனி அழகை மெருகூட்டுவது அவளது கூந்தல்தான். ஆகவே தான், பெண்கள் பல செயற்கை இரசாயன மூலிகை களைக் கொண்ட தயாரிப்புகளை நாடி, அதன் மூல மாக பல விளைவுகளை எதிர்நோக்குகின்றார்கள். அத்தோடு நாம்விரைவாக எந்த ஓரு பிரதிபயனையும் எதிர்பார்ப்பதைக் கைவிட்டு, எப்போதும் இயற்கைத் தயாரிப்பை நாடுவது சாலச்சிறந்தது.

மேலதிகமாக சூரியக்கதிர்களிலிருந்து தலைமுடியின் நிறத்தை அதிகளவில் பாதுகாக்கும் தன்மை 'றியல் ஈ ஹேர் ஒயிலின்' ஒரு தனிச் சிறப்பம்சமாகும்.

உண்மையான போசாக்குக்கு நிஜமான தீர்வு என்பது போல, பல வர்ணங்களை தலை முடிக்குப் பூசி, அதன் விளைவு களை எதிர்நோக்காமல் என்றும் தலைமுடியின் இயற்கை நிறத்தைத் தனதாக்கி எமது அழகை மெரு கூட்டுவோம்.

இந்த வில்லைகளைத் தினந்தோறும் காலை மாலை உணவின் பின் உட்கொண்டு வர, நாம் இழந்த தலைமுடி, சருமப்பொலிவு எல்லாவற்றையும் திரும்பப்பெறும் வாய்ப்புக் கிட்டுகிறது. மென்மையான மிருதுவான சருமத்தையும் பெற்றுக்கொடுக்கும்.

செயற்கை அழகை விட எமது இயற்கை அழகே அழகு. ஆகையினால், நாம் அனைவரும் இயற்கை அழகைப் பெறும் வழிமுறைகளைக் கையாள்வது சிறந்தது. இதற்கு இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் தயாரிப்புகளை இன்றே நாடுங்கள்.

**வணிகம்**

உங்கள் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவுபெற 'றியல் ஈ ஹேர் ஒயில்' வில்லைகள் என்றும் உறுதுணையாகும்.

15 வருட காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இந்தத் தயாரிப்புக்கள் என்றென்றும் எமது பாவனையாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு சிறந்த தயாரிப்பு என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. ஆரோக்கியமான, நீளமான கருமையான, தலைமுடி வளர "றியல் ஈ ஹேர் ஒயில்" வில்லைகளை பாவியுங்கள். பயன் அடையுங்கள்.

# பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்காவின் பயிற்சிப் பண்ணை




உள்நாட்டுப் பால் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்காக 'டெய்ரி கோப்பரேடிவ்' அறிமுகப்படுத்தும் மாபெரும் திட்டம். பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்கா நிறுவனம், உள்நாட்டு பால் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்காக தனது நிறுவனத்தின் நீண்ட கால முதலீட்டின் ஒரு அங்கமாக முதல்செயல்முறை விளக்கப் பயிற்சிப் பண்ணையை நிறுவுவதாக அறிவித்துள்ளது.

38 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் இயங்கிவரும் 'டெய்ரி கோப்பரேடிவ்' கடந்த இரண்டு வருடங்களுக்கு மட்டும் உள் நாட்டு பால் உற்பத்தியின் அபிவிருத்திக்காக 380 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. மேலும் அதன் பங்காளர்களுடன் இணைந்து செயற்பட்டு, பால் சேகரிப்பை அதிகரித்து, பாலின் தரத்தை மேம்படுத்தி, பாற் பண்ணையாளர்களின் வருமானத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க அர்ப்பணிப்புடன் உள்ளது.

பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்கா நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் லியோன் கிளமன்ட் கூறும் போது, இலங்கையின் பால் உற்பத்தித் துறையில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். அரசாங்கமானது பசுமாடு மரபணு இறக்குமதி செய்தல் மற்றும் பாற்பண்ணையாளர்களுடன் இணைந்து செயற்படுதல் ஊடாக பால் உற்பத்தித் துறையில் அர்த்தமுள்ள மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றது.

எனவே பால் உற்பத்தி நடவடிக்கைகளையும், கால்நடை நலப்பராமரிப்பையும் மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சிக்கான முதலீடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு, இந்த மாற்றத்துக்கு வலுச்சேர்க்க எம்மால் முடியும் என நாம் நம்புகின்றோம். என்றார்.

117 மில்லியன் ரூபா செலவில் 'பன்னல' எனும் இடத்தில் முதல் செயல்முறை விளக்கப்பாற் பண்ணையை நிறுவி, அதனைச் செயற்படுத்துவதே இந்த அர்ப்பணிப்பின் அடுத்த கட்ட மைல்கல்லாகும்.

பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்காவானது, உள்நாட்டுப் பால் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்காக, அதன் முதலீடுகளை தொடர்ச்சியாக அதிகரிக்கும். மேலும் 2017 ஆம் ஆண்டளவில், பாற் பண்ணையாளர்களுடன் இணைந்து செயற்பட்டு, சிறந்த பயிற்சிகளை வழங்கும் விநியோக தொடர்பு அதிகாரிகளை 20 இல் இருந்து 40 ஆக அதிகரிக்கவும், புதிய 5 பால் குளிர்விக்கும் நிலையங்களை நிறுவவும் எதிர்பார்த்துள்ளது.

இந்த நடவடிக்கையால் பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்காவுக்கு பால் விநியோகம் செய்ய மேலதிகமாக 2000 பால் பண்ணையாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதுடன், நாடு முழுவதும் பரந்திருக்கும் பாற் பண்ணையாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவும். 'பன்னல' செயல்முறை விளக்கப் பயிற்சிப் பண்ணையானது இம்மாத இறுதியில் செயற்படத் தொடங்கும்.

இதில் நிர்வாக முகாமையாளர், கால்நடை பராமரிப்பு நிபுணர்கள் மற்றும் ஏனைய பால் உற்பத்தி தொடர்பான பணிகளுக்கு பணியாளர்கள் உள்வாங்கப்படுவார்கள். ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 2000 பாற் பண்ணையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். 180 நாள்கள் பயிற்சிக்காக ஒதுக்கப்படும். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசியல்

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.கரவெட்டி வடக்கு, கரணவாயைச் சேர்ந்த மதியரசன் சுலக்சன், நாவலப்பிட்டி, மக்கும்பரவைச் சேர்ந்த கணேசன் சந்திரன் ஆகியோரே நேற்றுக் காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மகஸின் சிறைச்சாலையின் ஜே' பிரிவிலுள்ள 14 ஆண் தமிழ் அரசியல் கைதிகளும், பெண்கள் பிரிவிலுள்ள ஒரு பெண் தமிழ் அரசியல் கைதியுமாக 15 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி இன்று தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

பிரமசகாயம் உதயகுமார், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், நடேஸ் குகநாதன், மு.சிவநாதன், மா. நீதிநாதன், க.வேதநாயகம், ந.தர்மராஜா, சு.ஞானசீலன், தயாபரன், செல்லத்துரை கிருபானந்தன், தி.மனோகரன், யோசப் செபஸ்தியான், சுப்பிரமணியன் கபிலன், இராசதுரை திருவருள், இரவீந்திரன் மதனி ஆகியோரே இன்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

தமது விடுதலை குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரையில் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும், நீண்டகாலமாக விசாரணைகளின்றி சிறைச்சாலைகளில் தங்கியிருந்து சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்துவரும் நாம் விடுதலையை வலியுறுத்தி உயிரைத் துச்சமென மதித்தே இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல், அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(த-சி)

## பலாலி

அபிவிருத்தி தேவை யில்லை. மக்களின் மீள்குடியமர்வே முக்கியம் என்றுதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக யாழ்.மாவட்டச் செயலகத்திலும் இது தொடர்பிலான கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராஜா, இ.அங்கஜன் மற்றும் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு இப்போது தேவையில்லை என்றும், மக்களின் குடியமர்வே முக்கியமானது என்றும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இந்தியாவின் நிதியுதவியுடன் பலாலி விமான நிலைய விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, வடக்கில் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொள்ளும் அரசின் திட்டத்தின் கீழ் பலாலி விமான நிலையம், பிராந்திய விமான நிலையமாக விரிவாக்கப்படவுள்ளதாக அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் நிறைவடைந்த பின்னர் பலாலிக்கும் – இந்தியாவுக்கும் இடையில் நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டம், சுற்றுப்புற மக்களுக்கோ மீன்பிடி சமூகத்துக்கோ தடையாக இருக்காது என்று அரசு நம்புகிறது. அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்படும்.

இது தொடர்பான உடன்பாடு கையெழுத்திடப்படும்போதே, எப்போது திட்டத்தை ஆரம்பிப்பது, மற்றும் நிதி தொடர்பாக முடிவு செய்யப்படும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(த-5)

## கலப்புத்

கலப்புத் திருமணத்துக்கு எதிரானவன் அல்ல. என்னுடைய இரண்டு பிள்ளைகளும் சிங்களவர்களையே திருமணம் செய்திருக்கின்றார்கள். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழ் மக்களுடைய உரித்துக்களைக் கொடுங்கள். அவர்களுக்கு கொடுக்கவேண்டிய அத்தனை உரித்துக்களையும் கொடுங்கள். அதன் பின்னர் கலப்புத் திருமணங்கள் நடைபெறட்டும்' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சாரணியர்கள் இங்கு எல்லோரும் ஒருமித்து இருக்கின்றனர். ஒன்று சேர்ந்திருந்தால் எங்களால் எதையும் செய்ய முடியும் என்ற செய்தியைச் சொல்லியுள்ளீர்கள். சாரணியம் மிகவும் முக்கியமானது. இதனை நீங்கள் நாட்டுக்காக உங்களுடைய மக்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் எங்களுடைய நாட்டில் சகல இன மக்களும் ஒன்று சேர்ந்து ஒருமித்து இந்த நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் என்றால், இந்தச் சாரணிய இயக்கத்தினுடைய குறிக்கோள்கள் எங்களுக்கு முக்கியமானது - என்றார்.

(த-5-21)

## இலங்கை

ஆரம்பமாகவுள்ளது. இதன் போது, இலங்கை விவகாரம் தொடர்பில் எந்தவொரு நிகழ்ச்சி நிரலும் உள்ளடக்கப்படவில்லை.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன் இலங்கைக்கு நான்கு நாள் பயணமாக கடந்த 6 ஆம் திகதி வந்திருந்தார். இந்தப் பயணம் தொடர்பிலும், இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாகவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உரையாற்றவுள்ளார்.

31 ஆவது அமர்வின் தொடக்க உரையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நிகழ்த்தவுள்ளார். இதன்போதே இலங்கை தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கும் நேரம் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

31 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பாக விவாதம் நடத்துவதற்கு வேறெந்த நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்படவில்லையாயினும், பொது விவாதங்களில், நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றும்போது அவ்வப்போது இலங்கைகள் குறித்து கேள்விகளை எழுப்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தொடரில், இலங்கையின் சார்பில், ஜெனிவாவில் உள்ள நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

(த-5)

## வவுனியா

கள், ஆசிரியர் ஒன்றியம், மாணவர் ஒன்றியம், தனியார் கல்வி நிலையங்கள், தொழில் நுட்பக் கல்லூரி, விவசாய கல்லூரி, அரசியல் கட்சிகள் உட்பட 30 ற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்று கூடி குறித்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

இந்தப் போராட்டம் இடம்பெறும் அதேவேளை, வவுனியா பாடசாலைகளுக்கு முன்பாகக் கறுப்புக் கொடி கட்டப்பட்டு மாணவிக்கு நீதி வேண்டிப் பதாகைகளும் காட்சிப்படுத்தபடும்.

(த-21)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராணி ஐயாத்துரை



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி ஐயாத்துரை 22.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பெருமாள் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பெருமாள் ஐயாத்துரையின் (முன்னாள் உரிமையாளர் உடுப்பிட்டி சந்திரா ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரராஜா, தர்மராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அமுதராணி, பரிபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சந்திரவதனா, பாலச் சந்திரன் (ஜேர்மனி), கமலவதனா, புனிதவதனா, புஸ்பவதனா, பிறேம வதனா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவேஸ்வரன், பா.ஜெயக்குமாரி (ஜேர்மனி), லின்ரன் தேவராஜா, கந்தசாமி (உரிமையாளர் பிரியங்கா ஸ்ரோர்ஸ் உடுப்பிட்டி), காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் கணேஷ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நவரத்தினத்தின் சிறிய தாயாரும், சர்வேஸ்வரன் (மனோ), நவேந்திரன் (பவா) ஆகியோரின் பெரிய தாயாரும், சர்மிளா (U.K), நிர்மிளா (U.K), தர்ஷன் (மலேசியா), லக்ஷிதா (ஜேர்மனி), பிரிந்தா (ஜேர்மனி), நிக்கலஸ் (அமெரிக்கா), பிறின்ஸ்பிரதீபன், பிரவினா, பிரசாந்தினி, பிரவாகினி, பிரமிளா (ஆஸ்திரேலியா), புனிதகாந், பிரியங்கா, கிருஷாந், பார்த்தீபன், சோபிதா, சேல்விழி (மீரா), ஷாளினி (கனடா), வர்ஷினி (கனடா), கவின் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஸ்வின் (U.K), அட்ஷியன் (U.K), வைஸ்ணவி (U.K), விஷானவி (U.K), ரேபாக்கா, அலிஷா, லயன், கபிரியேல், பெனடிக், கருண்யா, ஆராதனா, தபீஷன், வர்ஷிகன், ஷஜானா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

போக்காலை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தொடர்புகளுக்கு:
077 728 6008

தகவல்:
குடும்பத்தினர்.

(65936)
(11,19,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்கள்

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்
இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது" வெளி:14:13

### திருமதி சுபிதா ஜெரல்ட் ஜோர்ஜ்



பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இல 84/15, கலாசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுபிதா ஜெரல்ட் ஜோர்ஜ் நேற்று (22.02. 2016) திங்கட்கிழமை அதிகாலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் காமாட்சி தம்பதியரின் பேர்த்தியும், கணேஸ் காலஞ்சென்ற சித்திராதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற G.S.A ஜோசப் மற்றும் கிறேஸ் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெரல்ட் ஜோர்ஜ் இன் (போதகர், சர்வ வல்லவர் தேவ சபை, குப்பிளான்) அன்பு மனைவியும், செரூஜ் மிசாயேல் (தரம் 5, மாணவன், சென். ஜோன்ஸ் கல்லூரி), எரிக் அபிஜேல் (தரம் 1 மாணவன், சென். ஜோன்ஸ் கல்லூரி), கெவின் கபிரியேல் ஆகியோரின் அன்புத் தாயும், அமுதா, பிருந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜோன்சனின் (போதகர், கல்வாரி தேவாலயம், அளவெட்டி) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.02. 2016) செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணியளவில் 84/15, கலாசாலை வீதி, திருநெல்வேலியில் (முத்துத்தம்பி மகா வித்தியாலயத்துக்கு அண்மையில்) உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

84/15, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
0777 917 568
(69521) (10.17.20)



### இளையதம்பி செல்வராசா

(முன்னாள் ஆனையிறவு உப்பள சாரதி)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்வராசா (முன்னாள் ஆனையிறவு உப்பள சாரதி) நேற்று (22.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், சதீஸ்வரன், ஜனார்த்தனன், நர்மதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகலிங்கத்தின் (கனடா) மாமனும், திவிதாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02. 2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுவிதி, ஆறுகால்மடம்.

தகவல்: குடும்பத்தினர்.
0775119279
(69527) (10.20)

## மரண அறிவித்தல்கள்

### இராமேஸ்வரம் பாலேந்திரன் (Navy)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி பேரம்பலம் அவனியூவை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான இராமேஸ்வரம் பாலேந்திரன் நேற்று (22.02. 2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில் முன்னாள் உரிமையாளர் காலஞ்சென்ற இராமேஸ்வரம்-முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசிரியர் பேரம்பலம்-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், யுகவதியின் அன்புக் கண வரும், ஜெயசங்கர், சுமுதினி, ரவிசங்கர், உமாசங்கர் ஆகியோரின் அன்பு தந்தையும், பவானி, சிவகெங்கன், வசந்தராணி, சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமனும், அருள்மொழிவர்மன், தீனா, பவித்திரா, லம்போதரன், அபிமன்யு, சகானா, நேத்திரன், தீரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பேரம்பலம் அவனியூ,
சங்குவேலி, மானிப்பாய்.

தகவல்: கு.விஜயசுந்தரம்
(மைத்துனர்)
(69523) (1020)

### திருமதி மார்க்கண்டு பொன்னம்மா

பிறப்பு: 04.10.1934 இறப்பு: 22.02.2016



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பொன்னம்மா நேற்று (22.02. 2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயன்-வள்ளி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பாலு-சீதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரனின் அன்புத் தாயும், மனோறஞ்சிதத் தின் பாசமிகு மாமியும், வினோதா, பிரதா, மேனுதா, அனோஜன், சத்திதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2016) செவ்வாய்க்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்-சிவனேஸ்வரன்
(69529) (10.17)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

### கந்தையா மாரிமுத்து (மீசைராசா அண்ணர்)



பண்டத்தரிப்பு அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது இருபாலையில் வசித்தவருமான கந்தையா மாரிமுத்து (மீசைராசா அண்ணர்) 20.02.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-ஏகாம்பேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சாவித்திரிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, பரமேஸ்வரி மற்றும் நல்லம்மா, கனகரத்தினம் (சின்னத்தம்பி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணா, உதயகுமார், சிறீரங்கன், காலஞ்சென்ற சுதாகரி மற்றும் சுபாகரி, பவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குமுதினி, விமலராஜி, கஜேந்திரன் ஆகியோரின் மாமனும், ஆகாஷ், கிஷான், விசாகன், சாகித், லிஷானா, சாயகி, கபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2016) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்தச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி, இருபாலை.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 07777 43396
(69526) (1020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியிலும்

டும் என வலியுறுத்தியும் இன்று காலை 9 மணிக்குக் கிளிநொச்சி பொதுச் சந்தையின் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இவ்வாறான படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும். அத்தோடு சரண்யா, வித்தியா, சேயா, வவுனியா சிறுமி, நாளை யார் என்ற தொனிப்பொருளில் இந்த அமைதி வழிப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்குச் சந்தை முன்றிலில் ஆரம்பமாகும் இந்தக் கவனவீர்ப்பு மாவட்ட செயலகம் வரை அமைதியாகச் சென்று ஜனாதிபதி, மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கான மனுக் கையளிப்புடன் முடிவடையும் எனப் பொதுச் சந்தை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

(கு-21-ரி3)

## மரண அறிவித்தல்கள்

### சின்னட்டி கனகர்

பிறப்பு 19 . 01 . 1932 இறப்பு 21 . 02 . 2016



ஆவரங்கால் மேற்கு சிவன்வீதியைச் சேர்ந்த சின்னட்டி கனகர் 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணம் அவர்களின் அன்புக் கணவரும் பேபி, தவராசா, நகுலேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரநாதன்(முன்னாள் கிராமியவங்கி முகாமையாளர்), சந்திரகலா, உமா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வயிரி, வெள்ளைக்குட்டி மற்றும் பூலோகம், சின்னத்தம்பி, கந்தையா, மாணிக்கம், இலட்சுமி, செல்லத்துரை(முறிவு, நெரிவு வைத்தியர் - புத்தூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேமலோசன், கேமதாசன், கேமபாலன், கேமினா, தருஷா, சஞ்சித், நிரோஜ், சர்மினா, கிஷோக் ஆகியோரின் அன்புப் பேரனும் விதுன், விதுனா, விதுர்ஷிகா, கியாஸ், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு.
தொடர்பு: 077 322 7798

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கிருஷ்ணலீலா சிவசுப்பிரமணியம்

பிறப்பு: 02.01.1950 இறப்பு: 22.02.2016



யாழ்ப்பாணம் கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாக வும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணலீலா சிவசுப்பிரமணியம் நேற்று (22.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலர்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரை-அன்னபாக்கியம் தம்பதியரின் மருமகளும், திரு. சிவசுப்பிரமணியத்தின் (C.E.B) அன்பு மனைவியும், சி.கம்சன், சி.திருத்திகா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற இராஜரட்ணம், சிவஞானம் (கனடா), தனபாலசிங்கம், குலசிங்கம் (கிளிநொச்சி), கிருஷ்ணகுமாரி (கொழும்பு), தங்கராஜா ஆகியோரின் சகோதரியும், புவனேஸ்வரி (சிங்கப்பூர்), நவரத்தினஜோதி (கனடா), மாசிலாமணி (கனடா), ராதா (கிளிநொச்சி), கந்தசாமி (கொழும்பு), செல்வராணி, சந்தானலட்சுமி, காலஞ்சென்ற சிவகுருநாதன், இராஜலட்சுமி, காலஞ்சென்ற பாலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், ராயு போய், மாலா, நிர்மலா, நிறஞ்சன், நிறஞ்சனி, தபோதரன், தபோ தினி, தாரணி, சந்திரிக்கா, குலரமணன், சங்கீதா, விசோபன், சோபியா, வினோபா, சசிகலா, விஜயா, நளினி, சிவகுமார், விஜயகுமார், ஜெயகுமார், யசோபா ஆகியோரின் மாமியும், ஜயந்தி, சுகந்தி, வசந்தி, சிவராம், காலஞ்சென்ற சிவகுமார், சிவாஜினி ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் பார்வைக்காக இன்று (23.02.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 5 மணிவரை வைக்கப்பட்டு, நாளை (24.02.2016) காலை 7.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் 077 991 4729
(C/29508) (10.20)

# சிறைகளுள் போதைப்பொருள் தேடுதலுக்கு மோப்ப நாய்கள்

சிறைச்சாலைகளுக்குள் போதைவஸ்து தேடுதலுக்கு மோப்பநாய்களைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காகப் பொலிஸாரிடம் உதவி கோரவுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க குறிப்பிட்டார். இது தொடர்பில் பொலிஸாரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக கொழும்பு, மகர மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் போதைப்பொருள் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தச் சிறைச்சாலைகளிலேயே அதிகளவு போதைப்பொருள் பாவனை காணப்படுவதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க சுட்டிக்காட்டினார். (இ)

---

## சாரணராக

னோக்கி கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

ஒன்பதாவது தேசிய ஜம்போறி வடக்கு மாகாணத்தில் முதற் தடவையாக இடம்பெறுகின்றது. இதன் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு நேற்று மாலை 4 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சர்வதேச சாரணர் தினத்தை நினைவு கூர்ந்து தேசிய சாரணர் ஜம்போறியை வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் நடத்துகின்றீர்கள். அதில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். விசேடமாக யாழ்ப்பாணத்தில் இவ்வாறான நிகழ்வொன்றைமுன்னெடுத்தமைக்காக அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்வில் அணிவகுத்து நிற்கும் சாரணர்களைப் பார்க்கும்போது நான் சிறுவனாக இருந்த காலத்தில் சாரணர் இயக்கத்தில் இணைந்து செயற்பட்ட நினைவுகள்தான் எனக்கு வருகின்றது. 48 ஆண்டுகளுக்கு முன்னதாகப் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் பொலனறுவையில் பாடசாலை ஒன்றில் சாரணர் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டிருந் தேன்.

**எதிர்கால ஜனாதிபதிகள்**

சாரணர் இயக்கம் சிறந்த மனிதர்களை உருவாக்கியுள்ளது. இதற்கு உலகில் பல உதாரணங்கள் காணப்படுகின்றன. நானும் சாரணராகப் பணியாற்றியதாலோ என்னவோ தற்போது நாட்டின் ஜனாதிபதி பதவியை வகிக்கின்றேன். சாரணர் அமைப்பில் தம்மை இணைத்து இங்கு அமர்ந்திருக்கின்ற பிள்ளைகளில் யாரோ நாளை ஜனாதிபதியாக வரக்கூடும்.

சாரணர்கள் மனிதாபிமானம், அன்பு, ஆதரவு, இரக்க குணங்களை உடையவர்கள். பொறாமை, கோபம், குரோதம், வைராக்கியம் ஆகிய குணங்கள் சாரணர்களிடத்தில் ஒருபோதும் இருப்பதில்லை. எமது நாட்டில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெறுவதற்கு சாரணர் இயக்கம் எதிர்காலத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அனைத்து மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குச் சாரணர் இயக்கம் உறுதுணையாக நிற்கும்.

**மதங்களுடன் பின்னிப் பிணைந்தது**

சாரணர் இயக்கத்தில் இன,மத,குல வேறுபாடுகள் கிடையாது. சர்வதேச நாடுகளில் 42 மில்லியனுக்கு அதிகமானவர்கள் சாரணர் இயக்கத்தில் அங்கத்துவத்தைக் கொண்டிருக்கின்றார்கள். சாரணர்கள் பிறருக்கு உதவிகளை வழங்குவதையும், தேவைகளை நிறைவேற்றுவதையும் பிரதானமான செயற்பாடுகளாகக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் சாரணர் இயக்கத்தின் பெறுமதி என்றுமே குறைவடைவதேயில்லை. சாரணர் இயக்கமானது இந்து, பௌத்த மதங்களில் கூறப்பட்டுள்ள தத்துவங்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

**எல்லோரும் ஒன்றுபட வேண்டும்**

நாட்டைக் கட்டியெழுப்பி முன்கொண்டு செல்வதற்கு அனைத்து மக்களும் ஒன்றுபடவேண்டும். நாட்டை ஒன்றுபடுத்துவதென்பது அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்துவதேயாகும். ஆகவே, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்பி முன்கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம்.

இந்தச் சாரணர் ஜம்போரியில் கலந்து கொண்டுள்ள பிள்ளைகளைப் பாருங்கள். அவர்களிடம் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. அவர்களிடத்தில் வேறுபாடுகள் இல்லை. ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். கோபம், பொறாமை, வைராக்கியம், குரோதம் எதுவுமே இல்லாது இருக்கின்றார்கள்.

சாரணர் இயக்கத்தை மேலும் மேம்படுத்திச் செல்ல அவர்களின் எதிர்காலச் செயற்பாடுகளை வலுவுள்ளதாக்க அரசு என்ற வகையில் அனைத்து விதமான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்குத் தயாராகவுள்ளேன். அவர்களது வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கும் தயாராகவுள்ளேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஒரே இரத்தம்தான்**

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பங்குகொள்வதற்கு தெற்கிலிருந்து பிள்ளைகள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இங்கு வந்திருக்கின்றார்கள். தென் பகுதிப் பிள்ளைகள் இங்கு வருகின்றார்கள் என்பதில் வடக்குப் பிள்ளைகள் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். இங்குள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே இரத்தம்தான் காணப்படுகின்றது. சாரணியம் என்பது மனிதாபிமானமானது. இங்குள்ள பிள்ளைகள் அனைவரிடமும் மனிதாபிமானம் இருக்கின்றது. இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு அனைவரும் ஒன்றுபட வேண்டும் – என்றார்.

சாரணர் இயக்கத்தின் ஆணையாளர் பேராசிரியர் நிமால் டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உட்பட அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சாரணர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(த-5-21)

## ஜம்போறிக்குச்

புறத்தில் 'சிங்க லே' (சிங்கத்தின் இரத்தம்) என்ற ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருந்தது.

**இசையில் ஒலித்த தேசிய கீதம்**

தேசிய நிகழ்வான சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டிருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய ஜம்போறி நிகழ்வில் தேசிய கீதம் தனித்து இசையில் மாத்திரம் ஒலிக்க விடப்பட்டது. ஒவ்வொருவரும் தமக்கு விரும்பிய மொழியில் பாடிக் கொண்டனர். ஜனாதிபதி தேசிய கீதத்தை வாயசைத்துப் பாடாமல் அமைதியாக நின்றிருந்தார்.

**சிங்களத்தில் வரவேற்புப் பாடல்**

கடற்படையினரால் நிகழ்வின் வரவேற்பு நடனம் நடத்தப்பட்டது. இதற்காக ஒலிக்க விடப்பட்ட பாடல் தனிச் சிங்கள மொழியிலேயே அமைந்திருந்தது. ஆனால் இந்தப் பாடலுக்குரிய நடனத்துக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கிய இனத்தவர்கள் போன்று வேடம் அணிந்து நடனமாடப்பட்டது. (த-5-21)

## நாளை

உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கமும் அழைப்புவிடுத்துள்ளது.

வவுனியாவில் பாலியல்வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் சாவுக்கு நீதிகோரி இன்று கவனவீர்ப்புப் போராட்டமும் நாளைய தினம் வடக்கு மாகாணம் முழுவதிலுமான கடையடைப்புப் போராட்டத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அழைப்பை விடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு – கிழக்கு தாயகப் பிரதேசத்தில் அண்மைக் காலமாகக் குடும்ப வன்முறைகள், பாலியல் குற்றங்களால் பெண்கள் அதிகமாகவே பாதிக்கப்பட்டும், மானபங்கப்படுத்தப்பட்டும் வருகின்றனர். இத்தகைய குரூரச் சம்பவங்களுக்குத் தாராளமயமாகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ள போதைப் பொருள்களும், ஆபாசக் காணொலிகளும் இரண்டாம்தரக் காரணிகளாகவே அமைகின்றன.

சமகாலத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் பாடசாலை மாணவிகள் வரையிலும், அதிலும் பூப்பெய்தாத சிறுமிகள் வரையிலும், கூட்டு வன்புணர்வுப் படுகொலைகள் வரையிலும் வந்து நிற்கின்றன. சரண்யா, வித்தியா, சேயா, கரிஸ்ணவி என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது.

யாருக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. எனக்கென்ன?' என்று சிந்திக்கும் சுயநலப்போக்கும், தனது வீட்டு முற்றம் வரைக்கும் பிரச்சினை தேடிவரும் வரைக்கும் காத்திருக்கும் மனோநிலையுமே இவற்றுக்கெல்லாம் மூல காரணிகளாகும். இந்த சுயநலப் போக்கிலிருந்தும், தனிநபர் நலச் சிந்தனையிலிருந்தும் தமிழ்ச் சமூகம் விடுபடவேண்டும். அநீதிக்கு எதிராகத் தமிழ்ச் சமூகம் கோபப்பட பழகவேண்டும். தத்தமது நலன் சார்ந்து சிந்திக்காமல் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் நலன் சார்ந்தும், பாதுகாப்பு சார்ந்தும் ஒரு மக்கள் கூட்டமாகச் சிந்திக்க வேண்டும். இழைக்கப்பட்ட அநீதி, நாளை எனது வீட்டுப் பெண் பிள்ளைக்கு நடக்காது, என்பதற்கு என்ன பாதுகாப்பு உத்தரவாதம் உண்டு?' என்பதைச் சிந்தித்து ஒவ்வொரு குடும்பமும் கலக்கமுற வேண்டும்.

இந்தக் கலக்கத்தோடும் – விழிப்புணர்வோடும் சமுக அநீதிகளுக்கு எதிராக, பெரும் மக்கள் கூட்டமாக – கூட்டுக் குடும்பமாக வீதியில் இறங்கிப் போராட வாருங்கள். வன்முறைகள் நாளை உங்களது வீடு தேடியும் வரலாம். அதை இப்போதே முன்னெச்சரிக்கையாகத் தடுப்பதற்குப் படலை திறந்து வீதி வரைக்கும் வந்து போராடுவதை தவிரவும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் வேறு வழியொன்று இருக்கவே முடியாது – என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 07 . 1933



மறைவு
06 . 03 . 2015

அமரர் வேலுப்பிள்ளை தங்கராசா

(பிரதம இலிகிதர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவலைகள் என்றும்
எம் நெஞ்சைவிட்டு அகலாது
உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சாரதா இல்லம்,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

குடும்பத்தினர்.

(65937)(10.17.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்செஸ்டர் யுனைற்றெட்டின் பயிற்சியாளராக மொரின்கோ?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைற்றெட் அணியின் பயிற்சியாளரான லூயிஸ்வான் காலை, பதவியிலிருந்து நீக்க குறித்த கழகம் முனைப்புக் காட்டிவரும் நிலையில் வான் காலின் இடத்தை செல்சியின் முன்னாள் பயிற்சியாளரான ஜொஸ் மொரின்கோ பிரதியீடு செய்ய வுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்து பிரீமியர் லீக்கில் நடப்பு வருடத்துக் கான தொடரில் மன்செஸ் டர் யுனைற்றெட் அணியின் செயற்பாடுகள் திருப்திதரும் விதத்தில் அமையவில்லை. வரலாற்றில் என்றுமே இல் லாத அளவுக்கு அந்த அணி தோல்விப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதனையடுத்து யுனைற் றெட்டின் பயிற்சியாளரான லூயில் வான் கால் மீது அதீத அழுத்தங்கள் கொடுக் கப்பட்டது. அவர் பதவி விலக வேண்டும் என்றும் கருத்துக்கள் வெளிப்பட்டன. இந்நிலையில் லூயின் வான் காலை பதவியிலி ருந்து நீக்க மன்செஸ்டர் யுனைற்றெட் நிர்வாகம் முடிவெடுத்து விட்டதாகவும், அந்த அணியின் புதிய பயிற் சியாளராக மொரின்கோ நியமிக்கப்படவுள்ளதாக வும் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

அணியின் தோல்விக்கு பயிற்சியாளர் என்ற விதத் தில் வான் கால் மிது அதிக அழுத்தங்களைப் பிரயோ கிக்கக்கூடாது என்று அந்த அணியின் தலைவரான வெய்ன் ரூனி சில தினங் களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



## உலக அணிகளை எச்சரிக்கும் விதத்தில் தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானது மான ரி-20 ஆட்டத்தில் 9 இலக்குகளால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது தென்னா பிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னா பிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய் தது. இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களான றோய், கேல்ஸ் இருவரும் வலுவான ஆரம்பத்தை அமைக்கத் தவறினர். 9 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார் றோய். 16 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் கேல்ஸ். பெற்ற ஓட்டங்களைவிட அதிகமான பந்துகளை எதிர்கொண்டதும் இங்கிலாந்துக்கு மேலும் பின்னடைவாக அமைந்தது. ரூட், மோர் கன் ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முனைப்புக் காட்டினர். சிறிது வெற்றியும் கண் டனர். 17 பந்துகளில் 34 ஓட்டங்களைக் குவித் தார் ரூட். 150 இற்கும் அதிகமான சரா சரியில் 38 ஓட்டங்களைக் குவித்தார் மோர்கன். பட்லர் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறு முனை இஸ்திரத்தன்மையுடன் அமையவில்லை. வருவதும் போவதுமாக ஒற்றையிலக் கங்களு டனேயே பின்வரிசை வீரர்களின் ஓட் டங்கள் அமைந்திருந்தது. ஸ்ரோக்ஸ், மொயின் அலி போன்ற அதிரடி வீரர்களாலும் எதையும் சாதித் துவிட முடியவில்லை. அரைச்சதம் கடந்தார் பட்லர். முடிவில் சகல இலக்குகளையும் இழ்ந்து 171 ஓட்டங்களைப் பெற்றது இங்கி லாந்து.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக அப் பொட் 3 இலக்குகளையும், ரபாடா, மொறிஸ் இருவரும் தலா இரு இலக்குகளையும், தாகிர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. சமீப கால மான தடுமாற்றங்களால் தென்னாபிரிக்காவிடம் உலக அணிகளுக்கு நீங்கியிருந்த பயம் நேற்றைய அதிரடியுடன் திரும்ப வந்திருக்கும். ரி-20 உலகக்கிண்ணத்தை ஏனைய அணிகள் சந்தேகத்துடன் பார்க்கும் நிலையை உருவாக்கி யிருந்தார் வில்லியர்ஸ். நான்கே பந்துப் பரிமாற் றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது தென்னா பிரிக்கா. இதில் வில்லியர்ஸின் பங்களிப்பு 40 ஓட்டங்கள். 21 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வில்லி யர்ஸ். 6.5 பந்துப் பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. சிக்சர்கள், பவுண்டரிகள் என அடுத்தடுத்து விளாசித்தள் ளினார் வில்லியர்ஸ். அம்லாவும் விடுவதாகயில்லை. ஜோர்தானின் பந்துப்பரி மாற்றம் ஒன்றில் தொடர்ச்சியாக 5 பவுண்டரிகளை விளாசித் தள்ளினார். 71 ஓட்டங்களுடன் வில் லியர்ஸ் ஆட்டமிழந்தாலும் 14.4 பந்துப்பரிமாற் றங்களில் 172 என்ற இலக்கை ஊதித்தள்ளியது தென்னாபிரிக்கா. ஆட்டநாயகனாக வில் லியர்ஸும், தொடராட்ட நாயகனாக தாகிரும் தெரிவானார்கள்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நெருங்கிவரும் நிலையில் தென்னாபிரிக்கா அணி ரி-20 ஆட்டங்களில் மிரட்டுவது உலக அணிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. (ம)


## ஓய்வு தொடர்பான சிந்தனை இல்லை
### -டோனி

செய்தியாளர்கள் சந்திப்பின்போது ஓய்வு தொடர்பாக கேள்வி கேட்ட நிருபரிடம் கொந் தளித்துள்ளார் இந்திய அணித்தலைவர் டோனி.

ஆசியக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் டோனி தலைமையிலான இந்திய அணி நேற்றுமுன்தினம் பங்களாதேஷுக்கு பயண மாகியது. பயணமாவதற்கு முன்னர் செய்தி யாளர்களிடம் பேசிய டோனி, ரி-20 தொட ரில் இந்திய அணி பலமாக உள்ளது. எனது தந்திரோபாயங்கள் எல்லாம் விளையாடும் பதினொரு வீரர்களை பொறுத்து மாறும். கண்டிப்பாக அணியை சிறந்த நிலையில் வைத்துக் கொள்ள முயற்சி செய்வோம் என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் டோனியின் ஓய்வு குறித்து நிருபர் ஒருவர் கேள்வி கேட்டதால் அவர் கோபமடைந்துள்ளார். இதற்கு டோனி பதில ளிக்கையில், ஒரு கடிதம் எழுதி நான் ஏன் ஓய்வு பெற வேண்டும் என்று வெளிப்படுத் துங்கள். இது தொடர்பான கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் அளித்து விட்டேன், என்று கோபமாக தெரிவித்துள்ளார்.

எனது ஓய்வு குறித்து தெரிய வேண்டும் என் றால் பொது நல வழக்கு ஒன்று தொடருங்கள் என்று டோனி ஏற்கனவே கிண்டலாக தெரி வித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



## கிண்ணங்களை வழித்துத் துடைத்தது வீனஸ் விளையாட்டுக்கழகம்

மாங்குளம்,பெப். 23

பருத்தித்துறை வாரியர்ஸ் மற்றும் புலோலி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் இரண் டும் இணைந்து இரு பிரிவாக நடத்திய துடுப்பாட்டத் தொடர்களில் அனைத்துக் கிண்ணங்களையும் பருத்தித்துறைவீனஸ் அணி கைப்பற்றியுள்ளது.

**வல்லை - வீனஸ்**

இறுதியாட்டங்கள் பருத்தித்துறைவீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றன. 8வீரர்கள் பங்கு பற்றும் 6 பந்துப் பாமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத்தின் இறுதியாட்டத்தில் வல் லை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழக அணிமோதியது. முதலில் துடுப் பெடுத்தா டியவல்லை அணி, வீனஸ் அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பாமாற்றங் களில் 7 இலக்குகளை இழந்து 35 ஓட்டங் களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக மணிமாறன் 14ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வீனஸ் அணியின் சார்பாக கஜேந்திரன், அஜிந் இருவரும்தலா இரு இலக்குகளையும், நிரோஜன் ஓர் இலக் கையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய வீனஸ் அணி 3.1 பந்துப்பரி



மாற்றங்களில் 2இலக்குகளை மாத்திரம் இழந்து கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதிகபட்சமாக நிரோஜன் 14 ஓட்டங்களை யும், விவேக் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங் களையும் பெற்றனர். பந்துவீச்சில் வல்லை அணியின்சார்பாகமணிமாறன், கபிலன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றி னர். ஆட்டநாயகனாக வீனஸ் அணியின் நிரோஜன் தெரிவானார்.

**வீனஸ் அணி- இளந்தளிர்**


தொடர்ந்து இடம்பெற்ற 'சவால்' கிண்ணத் துக்கான இறுதியாட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை இளந் தளிர் அணிமோதியது. முதலில் துடுப் பெடுத்தாடிய வீனஸ் அணி நிர்ணயிக்கப் பட்ட 5 பந்துப் பாமாற்றங்களில் 5 இலக் குகளை இழந்து 56 ஓட்டங்களைக் குவித் தது. அதிகபட்சமாக திருப்ரன் 16ஓட்டங் களையும், டிவேக் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இளந்தளிர் அணி யின் சார்பாக கிறிஸ்ரின், தினேஸ், சஜி தரன், ரமணன் நால்வரும்தலாஓர் இலக்கை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய இளந்தளிர் அணி 50 ஓட் டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்ச மாக நியாஸ் 31 ஓட்டங்களையும், தினேஸ் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச் சில் திருபரன் 3 இலக்குளையும், கஜேந் திரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். சிறந்த துடுப்பாட்டவீரராக காமாட்சி விளை யாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெயரூபன், சிறந்த பந்து வீச்சாளராகவீனஸ் விளை யாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லோகநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

கழகத் தலைவர் அ.பிரதாபன் தலை மையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வுக் குப் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினா ச.சுகிர்தன், கௌரவ விருந்தினர்களாகஓய்வுநிலைகோட்டக் கல்விஅதிகாரி பா.இரகுநாதன், பருத்தித் துறைபிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் பு.சஞ்சீவன், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் உடற் கல்வி ஆசிரியர் க.கனகராஜா ஆகியோ ரும் கலந்துகொண்டனர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ராஜகிரிய கேற்வே கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி இன்று மோதவுள்ளது. ஆட்டம் ராஜகிரிய கேற்வே கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும். (ம-23)



கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கத் தொடர் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. தொடரில் கலந்து கொண்ட மாணவர்களில் மொத்தம் 59 பேர் தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளனர். (ம-405)

## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியாகால்பந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன்,யுட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலானகால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்றுசெவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் இக்பால் அணியை எதிர்த்து அம்மன் அணிமோதவுள்ளது.

**வைகறை வி.கழகத் தொடர்**
யாழ்.மாவட்டதாச்சிச்சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய தாச்சித் தொடரின் ஆட்டங்கள்சில இன்றுசெவ்வாய்க்கிழமைபுதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து 'பி'அணியை எதிர்த்து இணுவில் அண்ணா அணிமோதவுள்ளது. இரவு 7.30மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஆனந்தா அணியை எதிர்த்து சரஸ்வதி அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது யாழ். லீக்

விருதுநகர் லீக் அணியும் யாழ். லீக் அணியும் மோதிய நட்பு ரீதியிலானஆட்டத்தில் யாழ். லீக் அணி வெற்றி பெற்றுள்ளது.
மேலதிக பயிற்சிகளுக்காகவும், சிலபயிற்சிஆட்டங்களில் பங்கெடுப்பதற்காகவும் யாழ். லீக் அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. விருது நகர் லீக் அணியுடன் கலாசலிங்கப்பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நட்பு ரீதியிலான ஆட்டத்தில் யாழ்.லீக் அணி2:1 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# சம்பியனானது கே.ஸி.ஸி.ஸி. இறுதியில் வீழ்ந்தது பல்கலை

## விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்தத் தொடரில்

யாழ்ப்பாணம்,பெப். 23
கொக்குவில் வளர்மதிமுன்னேற்ற கழகமும் சனசமூகநிலையமும் இணைந்து நடத்திய அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விக்ரம், ராஜன்,கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில்கே.ஸி.ஸி.ஸி. அணிகிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.





தொடரின் இறுதியாட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.இதில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணிமோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி (கே.ஸி.ஸி.ஸி.) முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 38.3 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் சகலஇலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஆதித்தன் 30 ஓட்டங்கள்ளயும், ராகுலன் 25 ஓட்டங்களையும் சசிதரன் 18 ஓட்டங்களையும், ஜெயறூபன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் யாழ்.பல்கலைக் கழக அணியின் சார்பில் விதுஸ், வைகுந்தன், சயந்தன் மூவரும் தலா இரு இலக்குகளையும், குருகுலசூரிய, தரணிதரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கியயாழ்.பல்கலைக்கழக அணி 12.4 பந்துப்பரிமாற்றங்களில் சகலஇலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக டிக்சன் 20 ஓட்டங்களையும், சற்குணேஸ்வரன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியின் சார்பில் சிலோசன் 5 இலக்குகளையும், ஜெயறூபன்,சாம்பவன் இருவரும் தலா 2 இலக்குகளையும்,சத்தியன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியின் சிலோசன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக யாழ். பல்கலைக்கழக் அணியின் குருகுலசூரிய தெரிவானார். (ம-23)

## மன்னார் கல்விக் கோட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப். 23
மன்னார் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19வயதுப் பிரிவு ஆண்கள்அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் 15வயதுப் பிரிவில் துள்ளுக் குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும், 17வயதுப் பிரிவில் புத்தளம் ரிஷாத் பதியுதீன் பாடசாலை அணியும், 19 வயதுப்பிரிவில் எருக்கலம்பிட்டிமத்தியமகாவித்தியாலய அணியும் சம்பியனாகியுள்ளன.
அல் அஸ்கார மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதிஆட்டங்களில் 15 வயதுப்பிரிவில் துள்ளுக் குடியிருப்பு றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து புத்தளம் அட்தீன் முஸ்லிம் பாடசாலை அணி மோதிக்கொண்டது.3 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் துள்ளுக்



குடியிருப்பு றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலைஅணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. 17 வயதுப்பிரிவு இறுதியாட்டத்தில் புத்தளம் ரிஷாத் பதியுதீன் பாடசாலை அணியை எதிர்த்து துள்ளு குடியிருப்பு றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலைஅணி மோதியது. இதில் புத்தளம் ரிஷாத் பதியுதீன் பாடசாலை அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.19 வயதுப்பிரிவு இறுதியாட்டத்தில் எருக்கலம்பிட்டி மத்தியமகாவித்தியாலயஅணியை எதிர்த்து தலைமன்னார் தமிழ்க் கலவன் பாடசாலைஅணி மோதியது. இதில் எருக்கலம் பிட்டிமத்தியமகாவித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச்சம்பியனானது. (ம-23)

# சம்பியனானது வைகறை

யாழ்ப்பாணம்,பெப். 23
உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய தாச்சித் தொடரில் புதுமடம் வைகறை அணி சம்பியனாகியுள்ளது.
யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் இறுதியாட்டம் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. புதுமடம் வைகறை அணியை எதிர்த்து தாவடி காளிஅம்பாள் அணி பலப்பரீட்சை நடத்திய இந்த ஆட்டத்தில் புதுமடம் வைகறை அணி 3:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. சிறந்த வீரனாகத் தாவடிகாளியம்பாள் அணியின் ராஜ் தெரிவானார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம்,பெப். 23
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திவரும் 19 வயதுப் பிரிவுஅணிகளுக்கு இடையிலான யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளம்பில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.முல்லைத்தீவு லீக் அணியை எதிர்த்து அநுராதபுரம் லீக் அணிமோதிய இந்தஆட்டத்தில் இரண்டு அணியினரும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையானது. (ம-23)

# சமபாலுறவாளர்கள் கருத்துக்கு மன்னிப்பு கேட்டார் பக்கியோ



சமபாலுறவாளர்கள் தொடர்பாக தான் வெளிப்படுத்திய கருத்துக்களுக்கு மன்னிப்புக் கேட்டுள்ள பிரபல குத்துச்சண்டை வீரரான மன்னி பக்கியோ, தனது தனிப்பட்ட கொள்கையில் மாற்றம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த மன்னி பக்கியோ, சமபாலுறவாளர்கள், மிருகங்களை விடக் கீழ்த்தரமானவர்கள். அவர்கள் கொல்லப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்கு எதிராக பல அழுத்தங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவருடனான அனுசரணை ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக, உலகின் பிரபலமான விளையாட்டுஅணிபொருட்களின் நிறுவனங்களில் ஒன்றான நைக் அறிவித்திருந்தது. இந்நிலையில் குறித்த கருத்துக்கு பக்கியோ மன்னிப்புக் கேட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக பக்கியோ வெளிப்படுத்துகையில் – எனது கருத்துக்காக மன்னிப்பு கேட்கின்றேன். சமபாலுறவாளர்கள் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தியமை தவறு என உணர்கின்றேன். ஆனால் எனது தனிப்பட்ட கொள்கையில் மாற்றம் இருக்காது.– என்றார்.



# சமநிலைக்காக போராடுகிறது நியூசி. ஆஸியின் ஆதிக்கம் மிகை நிலையில்

ஆஸ்திரேலியா–நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் 505 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலியா வின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்ததுடன், பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து 121–4 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி நியூசிலாந்தின் இன்னிங்ஸ் 370 ஓட்டங்களுடன் நிறைவு கண்டது. பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன் 3 இலக்குகளையும், கசில்வூட், பற்றின்சன், பேட் மூவரும் தலா இரு இலக்குகளையும், மிச்செல் மார்ஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு சிமித், பேர்ண்ஸ் அடுத்தடுத்து சதங்களைக் குவிக்க அந்த அணி இரண்டாம் நாள் முடிவில் 363–4 என்ற பலமான நிலையை அடைந்தது. லையன் 4 ஓட்டங்களுடனும், வோக்ஸ் 2 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். வோக்ஸ் அரைச்சதம் கடந்தார். பகுதி நேர துடுப்பாட்டத்துக்காக களமிறங்கிய லையனைக் கூட நியூசிலாந்தால் வீழ்த்திவிட முடியவில்லை. 60 ஓட்டங்களுடன் வோக்ஸும், 33 ஓட்டங்களுடன் லையனும் ஆட்டமிழக்க பின்வரிசை அடுத்தடுத்து சரிவுகண்டு முடிவில் 505 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா. பந்து வீச்சில் நியூசிலாந்து சார்பாக வாக்நெர் 6 இலக்குகளையும், போல்ட் 2 இலக்குகளையும், அன்டர்சன், வில்லியம் சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 135 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது நியூசிலாந்து. ஓட்டம் எதனையும் பெறாமல் பற்றின்சனிடம் வீழ்ந்தார் குப்தில். சக ஆரம்ப வீரரான லாதத்தையம் பற்றின்சன் வெளியேற்றினார். வில்லியம்சன் நிலைத்துநிற்க இரண்டே ஓட்டங்களுடன் வீழ்ந்தார் நிக்கொல்ஸ். சர்வதேச கிரிக்கெட்வாழ்வில் தனது இறுதி இன்னிங்ஸிற்காக களமிறங்கினார் மக்கலம். முதல் இன்னிங்ஸில் சதம் கடந்தாலும் இரண்டாவது இன்னிங்ஸில் பெரிதாக செயற்படவில்லை. 25 ஓட்டங்களுடன் மக்கலத்தின் இன்னிங்ஸ் முடிவுக்கு வர நாள் முடிவில் நியூசிலாந்து 121–4. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக பற் றின்சன் 3 இலக்குகளையும், கசில்வூட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)




*நியூசிலாந்தின் கிறைஸ்ட் சேர்ச் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டு நேற்றுடன் ஐந்தாவது ஆண்டு முடிவடைந்த நிலையில், ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக அஞ்சலி செலுத்திய நியூசிலாந்தின் வீரர்கள்.* (ம)

ஓராண்டு நினைவு தின அழைப்பு





எமது குடும்பத் தலைவர்
அமரர்
இளையதம்பி பாலசுப்பிரமணியம்

அவர்களின் ஓராண்டு நினைவு தின நிகழ்வு இன்று (23.02.2016) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவுதின நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும், அதனைத் தொடர்ந்து யா/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் அன்னாரின் ஞாபகார்த்தமாக பி.ப ஒரு மணிக்கு சரஸ்வதி உருவச்சிலை திறப்பு விழாவும் நடைபெற இருப்பதால் அந் நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.
0774730722, 0771115360
குடும்பத்தினர்.
(69522)(10.17.20)

# நாளை ஆரம்பமாகிறது ஆசியக் கிண்ணம் இந்தியா–பங்களாதேஷ் முதல் ஆட்டத்தில்




ஆசியக்கிண்ணத் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் முதலாவது ஆட்டத்தில் இந்தியா–பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய அணிகளாக இதுவரை அமைந்தபோதிலும் இம்முறை பங்களாதேஷிற்கும் சம வாய்ப்புக்கள் உள்ளதாக கணிக்கப்படுகிறது. தொடர் பங்களாதேஷில் நடைபெறுகின்றமையாலும், ரகுமான், சகிப் அல்கசன், மோர்ரசா போன்ற பந்துவீச்சு வரிசையும், காயம் காரணமாக விலகியிருந்த ஆரம்ப வீரரான கையிஸ் மீண்டும் அணியில் இணைந்துள்ளமையும் பங்களாதேஷிற்கு கூடுதல் பலமாக அமைந்துள்ளன.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் இலங்கைக்கு எதிராக களமிறங்கிய அணி சிறு மாற்றத்துடன் ஆசியக் கிண்ணத் தொடரில் களமிறங்கும் நிலை உள்ளது. ரகானே விளையாடும் பதினொரு வரில் இருந்து நீக்கப்பட்டு கோக்லி மீண்டும் களமிறங்குவார். விளையாடும் பதினொருவரில் ரகா னேயா, யுவராஜா என்ற இரு தெரிவுகள் டோனியிடத்தில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.